# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



சிவகாமியம்மை சமேத
நடராசப் பெருமான்
( கோனேரி ராசபுரம் )

மாலை 12 ] சாதாரண—மாசி—ஜூன், 1970 [ மணி 9

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.



காஞ்சிபுரம் வட்டம் இளையனூர் வேலூர், ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோயிலில், தமிழ் அருச்சனைத் துவக்க விழா நிகழ்ந்தபொழுது, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **திரு. கே. வி. சுப்பையா, B.A.,** அவர்களும், **தவத்திரு குன்றக்குடி அடிகளார், M. L. C.** அவர்களும், காஞ்சி நகர மன்றத் தலைவர் **திரு கே. டி. எஸ். மணி** அவர்களும், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் **திரு கே. எம். இராசகோபால், M.L A.** அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல் (8 4-70).

## பொருளடக்கம்


1. சிலந்தியார் வழிபட்ட நலங்கொள் கோயில்
2. திருவானைக்கா அகிலாண்டநாயகி மாலை
3. திருவாசகத்தில் ஒரு மணிவாசகம்
4. மகாலிங்கப் பெருமான்
5. திருக்குருகையர்கோன் திருவிருத்தம்
6. கடவுளணர்ச்சி
7. விசிஷ்டாத்வைத சாரம்
8. பெரிய அன்பின் வர குண தேவர்
9. தேர்த் திருவிழா
10. மகாபாரதம்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய் உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

— ஆசிரியர்




மாலை 12 ] சாதாரண — வைகாசி — ஜூன், 1970 [ மணி 9

# சிலந்தியார் வழிபட்ட நலங்கொள் கோயில்

[ ந. ரா. முருகவேள், M. A., M. O. L. ]

"தென் ஆனைக்கா வானைத்
தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்
சென்று ஆடினேனே"
—திருநாவுக்கரசர்

## முன்னுரை :

சோழ நாட்டில், காவிரியின் வடகரையில் அமைந்த சிவதலங்கள் பல. அவற்றுள் "திருவானைக்கா" என்பது ஒன்று. இது திருச்சிராப்பள்ளிக்கும், 'தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம்' என்னும் திவ்விய தேசத்திற்கும், இடையில் அமைந்துள்ள சிவத்தலமாகும். பஞ்ச பூதத் தலங்கள் எனப்படுவனவற்றுள், இஃது அப்புத்தலம் என்பர். அப்புத்தலம் எனப்படுவதற்கேற்ப, இக்கோயிலின் கருவறையில் சிவலிங்கத் திருமேனியைச் சுற்றி, இடையறுது எப்பொழுதும் நீர் ஊறிச் சுரந்து கொண்டே இருத்தலைக் காணலாம். ஆதலின் இங்குள்ள சிவபெருமானுக்கு அப்புலிங்கம், அமுதீசர், செழுநீர்த் திரள்நாதர் என்னும் பெயர்கள் வழங்கும். ஆனைக்கா அண்ணல், ஆனைக்கா ஆதி, என் ஆனைக்கன்று எனவும், இங்குள்ள இறைவனைத் தேவார ஆசிரியர்கள் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

## இறைவன் திருப்பெயர்கள் :

யானை ஒன்று பூசித்து அருள்பெற்றதனால், கஜாரண்ய க்ஷேத்திரம் அல்லது ஆனைக்கா என்றும்; சம்பு முனிவர் வழிபட்டதனால்சம்புகேசுவரம் என்றும்; அம்பிகை தவம்புரிந்து ஞானோபதேசம் பெற்ற காரணத்தால், ஞான க்ஷேத்திரம் என்றும், இத்தலத்திற்குப் பல பெயர்கள் வழங்கும். இத்தலத்திற்குரிய புனித மரம் வெண்ணாவல். சம்பு முனிவரின் வேண்டுகோளின் படி வெண்ணாவல் மரத்தின்கீழ் இங்கு இறைவன் எழுந்தருளி வீற்றிருக்கின்றான். ஆதலின், சம்புநாதர் சம்புகேசுவரர் என்றும், வெண்ணாவலுளான் என்றும் இங்குள்ள இறைவனுக்குப் பெயர்கள் வழங்கும். அகில அண்டங்களையும், அவற்றின்கண் வாழும் அனைத்துயிர்களையும் ஈன்றளித்த நாயகியாதலின், இங்குள்ள அம்பிகைக்கு அகிலாண்டநாயகி என்று பெயர். 'வடிவுடைய மங்கை' என்ற பெயரும் திருநாவுக்கரசர் தேவாரத்திற் காணப்படுகின்றது.

அரக்கர்களை அழித்தற் பொருட்டுப் பராசர முனிவர் முன்னொரு காலத்திற் செய்த ஆவிசார ஓமத்தினின்று, தென்மேற்குத் திக்கிற் காவல்புரியும் நிருதியின் ஊர்தியாகிய பூதத்திற்கு இரக்கம் காட்டிக் காத்தருளிய செயலால், இங்குள்ள இறைவனுக்குப் பச்சாதாப ஈஸ்வரர் அல்லது 'பின் இரக்கம் செய்யும் பெருமான்'' எனவும் ஒரு பெயர் உண்டு.

முன்னொரு காலத்தில் சூர ஆதித்த சோழன் என்பவன், நாக கன்னிகை ஒருத்தியை மணந்து வாழ்ந்து வந்தான். அவன் தன் தேவியான நாக கன்னிகை அணிந்திருந்திருந்த முத்தாரம், மிக்க அழகுடன் சிறந்து விளங்குதலைக் கண்டு, அதனைத் தன் வழிபடு கடவுளாகிய ஆனைக்கா அண்ணலுக்கு அளிக்க விரும்பினான். ஆனால், அவனது தேவி காவிரி நீரில் நீராடிய போது; அம்முத்தாரம் நீருள் வீழ்ந்து மறைந்தது. அதனால் அரசன் மனம் மிக வருந்தினான். நீருள் விழ்ந்து மறைந்த அம்முத்தாரத்தை ஏற்றுக் கொள்ளுமாறு, சோழ மன்னன் இறைவனை வேண்டிக் கொண்டான். ஆனைக்கா அண்ணலுக்குத் திருமஞ்சனம் ஆட்டுவோர், காவிரிநீர் கொண்டு செல்ல வந்தனர். இறைவன் அருளால் அம்முத்தாரம், திருமஞ்சனக் குடத்துள் வந்து சேர்ந்தது. அதனை அறியாமல், அவர்கள் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டியபொழுது, அம்முத்தாரம் சிவலிங்கத்தின்மீது, மாலைபோல விழ்ந்து அணிசெய்தது. இங்ஙனம் தனது அடியவனாகிய சோழனின் வேண்டுகோளை நிறைவேற்றிய காரணத்தால், ''ஆரம் அணிந்தார்'' என்னும் ஒரு பெயரும், ஆனைக்கா அண்ணலுக்கு ஏற்படுவதாயிற்று. ''ஆரம் நீரோடு ஏந்தினான் ஆனைக்காவு சேர்மினே'' எனச் சம்பந்தரும், ''ஆரம் கொண்ட எம் ஆனைக்கா உடை ஆதி'' எனச் சுந்தரரும், இவ்வரலாற்றைத் தமது பாடல்களிற் சுட்டியுள்ளனர்!

## தல வரலாறு :

திருக்கயிலையில் இருந்த மாலியவான், புட்பதந்தன் என்னும் கணநாதர் இருவர், தம்முள் பூசல் இட்டுக்கொண்டு, ஒருவரை ஒருவர் சபித்துக்கொண்டனர். அதன் பயனாக மாலியவான் சிலந்தியாகவும், புட்பதந்தன் யானையாகவும், மண்ணுலகில் வந்து தோன்றினர். அவர்கள் தம்சாப நீக்கத்திற்காக, ஞான க்ஷேத்திரம் என்னும் இத்தலத்திற்கு வந்து, வெண்ணாவலின் கீழ் எழுந்தருளியிருக்கும் சம்புகேசுவரரை வழிபட்டனர். சிலந்தி, வாயினால் வலைபின்னிப் பந்தர்அமைத்துச் சிவபெருமானுக்கு நிழல் செய்தது. யானை துதிக்கையினால் காவிரி நீரைக் கொணர்ந்து அன்புடன் நீராட்டி வந்தது. இந்நிலையில் தனது பூசைக்கு இடையூறாக இருந்த சிலந்தியின் வலையை, யானையானது நாள் தோறும் அழித்து வந்தது. அதனால் மனம் வருந்தியசிலந்தி, தான் இறைவனுக்கு அமைக்கும் பந்தரை அழிக்கும் தனது பகைவன் யார் ? என்று காண விரும்பிக்காத்திருந்தது, யானை வழக்கம்போல் நீர்கொணர்ந்து சிலந்தியின் வலையை அழித்து, இறைவனை நீராட்டிப் பூசித்தது. யானையின் செயல்கண்ட சிலந்தி, சினங் கொண்டது. யானையின் துதிக்கைக்குள் புகுந்து மேலேறிச் சென்று கடித்தது. யானை தன் துதிக்கையைத் தரையில் மோதி அடித்துத் துடித்து விழுந்து இறந்தது. அதனது துதிக்கைக்குள் அகப்பட்டுக் கொண்ட சிலந்தியும், வெளிவருவதற்கு இயலாது வருந்தி உயிர் நீத்தது. அந்நிலையிற் சிவபெருமான் வெளிப்பட்டு அவற்றிற்குக் காட்சியளித்

N70.12.9 (14)



தார். யானையைச் சிவகணநாதராக்கினர். சிலந்தியைச் சோழர்குல மன்னனாகத் தோன்றும்படியும், சிவப் பணிகள் செய்து பின்னர்த் தன்னை அடையும்படியும், பணித்து அருள் செய்து மறைந்தார்.

## கோச் செங்கட் சோழர் :

சிவபெருமான் அருளிச் செய்தபடியே, மறுபிறவியில் இச் சிலந்தியானது, சுபதேவன் என்னும் சோழ அரசனுக்கும், கமலவதி என்னும் சோழப் பேரரசிக்கும், மைந்தனாக வந்து பிறக்கும் பேறுபெற்றது. நீண்டகாலமாக மகப் பேறின்றி வருந்தியிருந்த கமலவதி தேவியார், கருப்பநாள் நிரம்பிக் கருவுயிர்த்து மகப் பேறு எய்தும் நிலையை அடைந்தார். அதுபோது ஆங்கிருந்த சோதிடநூல் வல்லார், இன்னும் ஒரு நாழிகை கழித்துக் கருவுயிர்ப்பின், இக் குழந்தை மூவுலகையும் ஆளும் நலம் எய்தும் எனக் கூறினர். அதுகேட்டு அரசியார், தமது கருவுயிர்ப்பை ஒரு நாழிகைகாறும் முயன்று தடுத்துக் கால நீட்டிப்புச்செய்தார். பின்னர்க் குறித்த நாழிகையில் அரசியார் குழந்தையைக் கருவுயிர்த்து ஈன்றெடுத்தார். ஈன்றெடுத்த மகிழ்ச்சியினால் குழந்தையை நோக்கிய போது, அதன் கண்கள் மிகவும் சிவந்திருந்தன. அதுகண்ட கமலவதியார் ''என்கோ, செங்கண்ணனோ?'' என வினவி வியந்து மகிழ்ந்தாள். ஆதலின் அக்குழந்தைக்குக் 'கோச்செங்கணான்' என்றும், கோச்செங்கட் சோழன் என்றும் பெயர் வழங்குவதாயிற்று. கோச்செங்கணான் வளர்ந்து பருவமடைந்ததும், தந்தையாகிய சுபதேவன் தன் மைந்தனுக்குத் திருமுடி சூட்டினான். கோச்செங்கணான் பேரரசனாகப் பிறங்கிச் செங்கோலோச்சித் தன் முன்னைப் பிறப்புணர்ச்சியும் சிவபக்தியும் குன்றாமல், எண்ணிறந்த சிவாலயங்கள் எடுப்பித்தான். தனது முன்னைப் பிறவியில் யானையினால் தனக்கு நேர்ந்த இடர்ப்பாடு கருதி, இம்மையில் தான் எடுப்பித்த கோயில்களை யெல்லாம், யானை புகாத வாயில்கள் உடையனவாகவும், மாடக் கோயில்களாகவும் எடுப்பித்தான். கோச் செங்கணான் சிவாலயங்கள் பல எடுப்பித்தமையினை வியந்து போற்றி, ''எண்டோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட திருக்குலத்து வளச்சோழன்'' என்று திருமங்கையாழ்வார் அவ்வரசனைச் சிறப்பித்துப் பாடி இருத்தல் காணலாம்.

இங்ஙனம், திருவானைக்காவில் இறைவனை வழிபட்ட சிலந்தியே, பின்னர்க் கோச் செங்கட் சோழனாகப் பிறந்தது, என்னும் செய்தியைத் தேவார ஆசிரியர்கள், தமது பாடல்களிற் பல இடங்களிற் குறிப்பிட்டருளியுள்ளனர்.

சிலந்தியும் ஆனைக் காவில்
திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே
கோச்செங்க ணானும் ஆகக்
கலந்தநீர்க் காவிரி சூழ்
சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே

—அப்பர்

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாய்; அது தன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண்டு,
அடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றிஎன்று அன்பொடு புலம்பி,
அருண்டென் மேல்வினைக்கு அஞ்சிவந்து
அடைந்தேன்

—சுந்தரர்.

முன்னர்ச் சிலந்தியாக இருந்து பின்னர்த் 'தென்னவனாய் உலகாண்ட செங்கணான்' என்னும் இச்சோழப் பேரரசரே, அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகக் 'கோச் செங்கட் சோழ நாயனார்' எனப் போற்றப் பெறுகின்றனர். யானை புகாத வாயில் உடையதாகத் திருவானைக்காக் கோயிலுக்குத் திருப்பணி செய்தவர் இவ்வரசர் என்பது,

ஆனைக் காவில் தாம் முன்னம்
அருள்பெற் றதனை அறிந்து, அங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார்
மகிழும் கோயில் செய்கின்றார்,

ஞானச் சார்வாம் வெண்ணாவல்
உடனே கூட, நலம்சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமான்
அமரும் கோயிற் பணிசமைத்தார் !

எனவரும் பெரிய புராணத் திருப்பாடலினால் அறியப்படும். "சிலந்தியைச் சோழன் ஆக்கினான்" என்று, திருவானைக்காவில் உள்ள இறைவனைச் சில கவிதைகளும் கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன.

## தலச் சிறப்புகள் :

கோச்செங்கட்சோழர் வழிபட்டுத் திருப்பணி செய்த, திருவானைக்காக் கோயிலின் சிறப்புகளுக்கு, எல்லையேயில்லை. அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் என்னும் சைவ சமய குரவர்கள் ஆகிய நால்வர் பெருமக்களாலும் பாடப்பெற்ற தலம் இது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்களும் இதற்கு உண்டு. காளமேகப் புலவர், இரட்டைப்புலவர், தாயுமான சுவாமிகள், கச்சியப்பமுனிவர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்ற சான்றோர்கள் பலர். இத்தலத்தினைப் புகழ்ந்து போற்றிப் பாடல்களும் நூல்களும் இயற்றியுள்ளனர். ஆதிசங்கர பகவத் பாதர், அனைத்து நலங்களையும் அளிக்கும் ஸ்ரீசக்கரம் பொறித்த தாடங்கம் என்னும் தோடுகளை இங்குள்ள அகிலாண்டேசுவரி அம்மைக்கு அணிவித்திருக்கின்றார்கள். இப்பொழுது எழுந்தருளியிருக்கும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள் அவர்கள், அவற்றைப் புதுப்பித்து அணிவித்திருக்கின்றார்கள். இவ் அகிலாண்டேசுவரியின் அருட்டிறம் நம்மனோரால்அளவிட்டு இயம்ப இயலுவதன்று. அன்பர்கள் வேண்டுவன அனைத்தும் குறைவற வாரி வழங்கும் அருள்வரப் பிரசாதியாய், அகிலாண்டேசுவரித் தாய் இங்கு விளங்கி வருகின்றாள்.

இங்கு மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் முப்பெருஞ் சிறப்புக்களும் ஒப்பற்ற நிலையில் அமைந்து திகழ்கின்றன. பிரமதீர்த்தம், இந்திரபுஷ்கரிணி, சம்புபுஷ்கரிணி, இராமதீர்த்தம், ஸ்ரீமத்தீர்த்தம் அக்கினிதீர்த்தம், அகத்திய தீர்த்தம், சோம தீர்த்தம், சூரிய தீர்த்தம் என்னும் பற்பல தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன.

பிரமன் தான் படைத்த பெண்ணைத் தானே விரும்பிய குற்றம் நீங்க இங்கு இறைவனைப் பூசித்துப் பேறு பேற்றான். பிரமன் இங்குப் பெருமானுக்குப் பெருவிழா என்னும் உற்சவம் எடுப்பித்தான். அது பற்றியே பிரமோற்சவம் என்னும் வழக்காறு ஏற்பட்டது. இந்திரன் வழிபட்டு விருத்திரனைக் கொன்ற பாவம் நீங்கி உய்ந்தான். இராமபிரான் இங்கு விபீடணனுடன் வந்து, நீலவிண்டுநாதரைப் பிரதிட்டைசெய்தார். அக்கினி தேவன், பிறன் மனை விழைந்த பாவம் நீங்கத் தவம்புரிந்து நலம் பெற்றான். அகத்தியர் இங்கு வந்து வணங்கிப் பக்தி செய்து இறைவனுக்கு ஒப்பாகும் பெருமை பெற்றார். சந்திரன், தக்கனது சாபத்தினின்று தப்பி ஒழிந்தான். குபேரன் இராவணனால் அடைந்த இன்னல்கள் தீர்ந்தான். சூரியன் உலகங்களுக்கு ஒளி விளக்கம் செய்யும் சிறப்பும் ஆற்றலும் எய்தினான். அகிலாண்டநாயகி, ஆனைக்கா அண்ணலை அன்புடன் பூசித்து ஞானோபதேசம் பெற்றாள். கௌதமமுனிவர் வழிபட்டுக் காமவெகுளி மயக்க வுணர்வுகளைக் கடந்து வெல்லும் நலம் பெற்றார். சிவபெருமானே ஒரு சித்தராக எழுந்தருளித் திருநீற்றையே கூலியாகக் கொடுத்து இக் கோயிலில் ஐந்தாம் பிராகார மதிலைக் கட்டுவித்தார். அஃது இன்றும் திருநீறிட்டான் திருமதில் என்று வழங்கி வருகின்றது. காளமேகப் புலவர், தாம் பாடிய திருவானைக்கா உலாவில், இம்மதிலின் சிறப்பைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்.

## திருப்பணிகள் :

இங்ஙனம் சித்தராக வந்துசிவபெருமானும், நாயன்மார்களுள் ஒருவராகிய கோச் செங்கட் சோழரும், திருப்பணி செய்த திருவானைக்காக் கோயிலுக்கு, 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாட்டுக்கோட்டை நகரத்துத் தனவணிகர் குலத்தில் தோன்றிய சைவப் பெரியார் திரு. சா. ராம. சித. சிதம்பரம் செட்டியார் அவர்களின் பெருமுயற்சியால், இக்கோயிலின் மூலஸ்தானங்கள் உட்பிராகாரங்கள் முதலியன, பெரும் பொருட்செலவில், சிறப்பாகப் புதுப்பிக்கப் பெற்றன.

அதன்பின்னர், அண்மையில்தமிழ்நாடு அரசினர் ஆதரவுபெற்று, திரு. டி. எம். நாராயண

சாமிபிள்ளை, எம். ஏ. பி. எல்., அவர்களது தலைமையின் கீழ் அமைக்கப் பெற்ற திருப்பணிக் குழுவினரால், இராசகோபுரம்-மல்லப்பகோபுரம்-கார்த்திகைக்கோபுரம்-அரவிட்டான் கோபுரம்-மணிமண்டபக் கோபுரம்-சங்கரேசுவரர் கோபுரம்-சூரிய தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், இந்திரதீர்த்தம்-ஆயிரக்கால் மண்டபம்-விபூதிப் பிராகாரம் மேல் கீழ்ப் புறங்கள் ஆகியவற்றின் திருப்பணிகள், பதினான்கு இலட்சம் (14,00,000) ரூபா செலவில், சிறப்புற நிறைவு செய்யப் பெற்றுள்ளன.

சுந்தர பாண்டியன் கோபுரம் விபூதிப் பிராகாரம் வடபுறத் தென்புற மதில்கள், அம்மன் கோயில் விமானம், அம்மன் கோயில் முன் புறமுள்ள இரண்டு கோபுரங்கள், மூன்றாவது பிராகாரம், பிரசந்ந விநாயகர் விமானம், தண்டபாணி கோவில் முதலியனவற்றின் வேலைகள் விரைந்து செய்யப் பெற்று வருகின்றன.

## திருக்குடமுழுக்கு விழா :

இத்திருப்பணிகள் விரைவில் நிறைவு பெற்று, திருவானைக்காக் கோயிலின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா, சாதாரண ஆண்டு ஆனிமாதம் 21ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை (5-7-70) அன்று மிகவும் சிறப்புற நடைபெற இருக்கின்றது. அன்பர்கள் அனைவரும் இக் கும்பாபிஷேக விழா நன்கினிது நிறைவேற ஒல்லும் வகைகளிலெல்லாம் உதவி புரிந்தும், கும்பாபிஷேக விழாவிற் கலந்து கொண்டு தரிசித்து மகிழ்ந்தும், அகிலாண்ட நாயகி சமேத ஆனைக்கா அண்ணலின் அருள்பெற்று உய்ந்து இன்புறுவார்களாக!

துன்பம் இன்றித் துயர்இன்றி என்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவன்என்று உள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே

—திருநாவுக்கரசர்

—ஆசிரியர்

---

## திருத்தாண்டகம்

ஊனாகி உயிராகி அதனுள் நின்ற
உணர்வாகிப் பிறஅனைத்தும் நீயாய் நின்றாய்;
நான்ஏதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்;
தேனாரும் கொன்றையனே! நின்றி யூராய்!
திருவானைக் காவில்உறை சிவனே! ஞானம்
ஆனாய்!உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய் கேனே!

—திருநாவுக்கரசர்

# திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை

( ந. ரா. முருகவேள், M. A., M. O. L. )

முன்னுரை :

திருவானைக்கா என்பது தேவாரப் பாடல் பெற்ற சோழ நாட்டுச் சிவ தலங்களுள் ஒன்று. இதனைப் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று என்றும் பெரியோர் கூறுவர். காஞ்சிபுரம், திருவாரூர் (பிருதிவி), திருவானைக்கா (அப்பு), திருவண்ணுமலை (தேயு), திருக்காளத்தி (வாயு), சிதம்பரம் (ஆகாசம்) ஆகிய ஐந்தும் பஞ்சபூதத் தலங்கள் எனப்படும்.

திருவானைக்கா அப்புத்தலம் எனப்படுவதற்கு ஏற்ப, இக்கோயிலின் கருவறையில் சிவலிங்கத் திருவுருவம் எழுந்தருளியுள்ள இடத்தைச் சுற்றிலும், இடையருது எப்பொழுதும் நீர் ஊறிக் கொண்டிருத்தல் காணலாம். அதனல் இங்குள்ள பெருமானுக்கு ''நீர்த்திரள் நாதர்'' என்பது பெயர். "திருவானைக்கா வுளானைச் செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே" என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்.

திருவானைக்கா என்னும் இத்தலத்திலுள்ள அம்பிகைக்கே 'அகிலாண்ட நாயகி' என்பது பெயர். இவ்வம்பிகையின் மீது திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய சிறந்த கவிதை நூலே, ''திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை'' என்பது. அம்பிகையின் சிறந்த துதிப்பாடல் இலக்கியங்களுள் ஒன்ருக மதித்துப் போற்றத் தகுந்த, இவ்வரிய இனிய நூலின் கவிதைச் சுவைப் பொருள்களை மட்டும், ஈண்டுச் சுருக்கமாகக் கண்டு மகிழ்வோம் :—

## (1) நிலவும் வெயிலும் :

அகிலாண்ட நாயகி அணிந்துள்ள மாணிக்கத் தோடுகள், சிறந்த ஒளி வீசித் திகழ்ந்து, புது வெயில் எறிக்கின்றன. அப் பெருமாட்டியின் சிவந்த திருவாயினின்று அரும்பும் புன்முறுவல், அழகிய இனிய ஒளியைத் தோற்றி, இள நிலா எறிக்கின்றது. இங்ஙனம் வெயிலும் நிலவும் ஒருங்கே பரப்பும் அம்பிகையின் சிறந்த தோற்றம், காண்பார் கண்களுக்கு அரிய விருந்தாக அமைந்து திகழ்கின்றது.

பூமலி செய்ய பொலிமணித் தோடு
புதுவெயில் எறித்துமுள் மலர்ந்த
தேமலி ஆம்பற் செய்யவாய் முளைத்த
சிறுநகை இளநிலா எறித்து
மாமலி குழல்நின் றவர்முக மலர்கண்
வளந்தர முன்புவந் தருள்வாய்
காமலி வானும் புகழ்திரு வானைக்
காஅகி லாண்ட நாயகியே.

## (2) கடைக்கண் பார்வை :

அகிலாண்ட நாயகியே; வட திசையில் உள்ள குபேரனும் நாணும்படி அளவிறந்த செல்வம் பெற்றும், தென்றிசையில் உள்ள பொதிய மலையில் விளங்கும் அகத்தியரும்

நாணும்படி சிறந்த கல்வியில் தேர்ந்தும், மிகவும் உயர்ந்த பெருமையுற்றுத் திகழ்பவர்கள் எல்லோரும், நின்னுடைய தாமரை மலர் போன்ற திரு முகத்தின் கடைக்கண் பார்வையருள் முழுவதும் பெற்றவர்களே யன்றோ !

வடதிசை யவனும் சமழ்ப்புறக் கனகம்
　　வாய்ந்து,தென் திசைநகத்து அமரும்
குடமுனி யவனும் சமழ்ப்புறக் கல்வி
　　கூர்ந்து,மிக் குயர்ந்தவர் பலரும்
தடமலர் புரைநின் முகத்திரு கடைக்கண்
　　சார்பு ஒருங்கு உற்றவர் அன்றோ?
கடவுளர் மனம்புக்கு அமர்திரு வானைக்
　　காஅகி லாண்ட நாயகியே.

## (3) முத்தொழிற்கும் மூலம் :

அகிலாண்ட நாயகியே! சிருக்கு (நெய்த் துடுப்பு), செபமாலை, சங்கு, சக்கரம், சூலம், வேல் முதலிய படைகள் பலவற்றையும் நீ ஏந்திக் கொண்டிருக்கும் இயல்பினால், பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் செய்கின்ற மூவகைத் தொழில்களுக்கும், மூலம் நீயே என்பதனை, யான் அறிந்து கொண்டேன்.

தாவருஞ் சிருக்கு மணிவடம் சங்கு
　　சக்கரம் சூற்படை இலைவேல்
ஓவரும் சிறப்பின் வேறுவேறு ஏந்தும்
　　உண்மையால் ஒண்மல ரோன்முன்
மூவரும் இயற்றும் மூவகைத் தொழிற்கும்
　　மூலம்நீ என்பது தெரிந்தேன் !
காஅரு மலர்நல் கிடும்திரு வானைக்
　　காஅகி லாண்ட நாயகியே !

## (4) கோயில் புகாதவர்கள் :

அகிலாண்ட நாயகியே ! நின் திருக்கோயில் புகாதவர்களே, வீடு தோறும் பிச்சைக்குப் புகுவார்கள். எமன் உலகில் நரகம் புகுவார்கள்! எத்தனையோ பல பிறவிகளை எடுக்கக் கருக்குழிகளில் புகுவார்கள்.இத்தகைய தீவினையாளர்கள் புகாத நின்னுடைய கோயிலில், ஏழையேன் புகுந்து நின்னைத் தினமும் வணங்க அருள் புரிவாயாக !

மனைதொறும் இரப்புத் தொழில்கொடு புகுவார்
　　மறலிதன் ஆலயம் புகுவார்
நினைதர முடியாக் கருக்குழி பலவும்
　　நிரம்புற ஓடுபு புகுவார்
இனையவர் புகாநின் திருப்பெருங் கோயில்
　　ஏழையேன் புகஅருள் புரிவாய் !
கனைகடல் வாவி சூழ்திரு வானைக்
　　காஅகி லாண்ட நாயகியே !

## (5) உலகுயிர்க்குத் தாய் :

உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் குழந்தைகளாய்ப் பெற்றெடுத்து அவைகளுக்கு ஒரு துன்பமும் வராமல் கருணையினால் வளர்த்து வருகின்ற நீ, மலைமகள் எனும்படி மலையரையனுக்கு மகளாகத் தோன்றிப், புறவு கிளி மயில் பூவை ஆகிய பறவைகளை முன்பு விரும்பி வளர்த்த தன்மை என்னே !

பரவுறும் உலகத்து உயிர்எலாம் ஈன்று
　　பருவரல் அவையுருது ஓங்க
உரவுறு கருணை யால்வளர்த் திடும்நீ
　　ஒருமலை மகள்என உதித்து
விரவுறு புறவு கிளிமயில் பூவை
　　விரும்புற வளர்த்தவா றென்னே!
கரவுறும் அவர்கா ணுத்திரு வானைக்
　　காஅகி லாண்ட நாயகியே.

## (6) காமாட்சி :

திருமாலின் மார்பில் விளங்கும் திருமகளும், பிரமனின் நாவில் இருக்கும் கலைமகளும், சூரியன் தோன்றுதலால் கட்டு அவிழ்கின்ற தாமரை மலரின் மீது அமர்ந்து வாழ்வதாக, உலக மக்கள் கூறுவர். நின்னுடைய முகமாகிய தாமரை மலரிலேயே அவ் இருவரும் வாழ்கின்றார்கள் என்பதனை, இவ்வுலக மக்கள் உணரவில்லை. இவர்களின் அறியாமை நிலையை யான் என்னென்று கூறுவேன் !

பரிதிவந் துதயம் எழமுறுக் குடைந்த
　　பங்கய மலர்மிசை யுறைவார்,
அரிமறு மார்பும் அயன்திரு நாவும்
　　அமர்பவர் என்பர்,நின் முகமாம்
விரிமலர்க் கமலத்து உறைவர்என் றுணரார் !
　　மேதினி மடமைஎன் சொல்கேன்?
கரிசறு வளமை மலிதிரு வானைக்
　　காஅகி லாண்ட நாயகியே.

[அம்பிகையின் வலக்கண்ணுகத் திருமகளும், இடக்கண்ணுகக் கலைமகளும் விளங்குகின்றனர் என்பது குறிப்பு. திருமகளையும் கலைமகளையும் தனக்கு இரு கண்களாகக் கொண்டிருத்தல் பற்றியே, அம்பிகைக்குக் காமாட்சி என்பது பெயராயிற்று, கா - கலைமகள்; மா - திருமகள்; அட்சம் - கண்; அட்சி - கண்ணுக உடையவள். காமாட்சி ஆகிய அம்பிகையை வழிபடுவோர், கல்வியும் செல்வமும் நிரம்பப் பெறுவர் என்பது கருத்து].

## (7) திருவைந் தெழுத்து :

அம்மையே! திருவைந் தெழுத்தை ஓதுகின்ற முறைகள் ஒன்றில், முன்னேயுள்ள மூன்று எழுத்துக்களுள், சிவபெருமானுக்கும் எனக்கும் நடுவே எழுந்தருளி விளங்குகின்றாய். அதனால் பின்னுள்ள இரண்டு தீமைகளினின்று நீக்கி நின் கணவராகிய சிவபெருமானேடு என்னைச் சேர்ப்பிக்கும் ஆற்றல், நினக்கே அன்றி வேறு யார்க்கு உளதாகும்.

ஓதுறும் முறைமை ஒன்றில்,முன் மூன்றுள்
ஒருசிறி யேற்கும்நின் பதிக்கும்
போதுறு குழல்நீ நடுப்பொலி தலினுற்
புரிந்துநின் பதியொடும் எனைப்பின்
தீதுறும் இரண்டில் நீக்கிஒன் ருக்கும்
திறல்நினக் கன்றியார்க்கு உளது?
காதுறு கண்ணுர் சூழ்திரு வானைக்
காஅகி லாண்ட நாயகியே.

[திருவைந்தெழுத்தை ஓதும் முறைகளுள் ஒன்று 'நமசிவய' என்பது. இதன்கண் முன்னேயுள்ள மூன்று என்பது 'சிவய' என்பது. இம்மூன்றினுள் சி சிவத்தையும், வ அம்பிகையையும், ய உயிரையும் குறிக்கும். ஆதலின், 'சிறியேற்கும் பதிக்கும் நீ நடுவிற் பொலிகின்ருய்' என்ருர். பின் தீதுறும் இரண்டு என்றது, நம என்பன. இவை முறையே மறைப்பாற்றலையும், மலத்தையும் குறிக்கும். சிவத்தோடு உயிரைக் கொண்டுபோய்ச் சேர்ப்பிப்பது திருவருளே யாதலின், அம்பிகையை 'நின் பதியொடும் எனை ஒன்ருக்கும் திறன் நினக்கு அன்றி யார்க்கு உளது?' என்ருர்].

## (8) சிலந்தியின் பந்தர் :

நற்குணம் இல்லாத யான் பாடுகின்ற பாடல்கள் இனிமையில்லாதவை என்ருலும், அவற்றை ஏற்றுக் கொண்டு அருள் புரிதல், நினக்கே தக்கதாகும். எளிய சிலந்தி இயற்றிய எச்சிலாகிய நூலின் பந்தரையும், நின் கணவர் ஆகிய சிவபெருமான் விரும்பி ஏற்றுக்கொண்டு அருள் புரிந்தருளினுர்.! அந்தப் புராண வரலாற்றையும் நீ அறிந்திருக்கின்ருய் அன்ருே?


குணமிலேன் மொழிபா நயம்இல தெனினும்
குறித்ததை ஏற்றருள் செய்ய
இணர்மலி குழால்நிற் கேதகும்; சிலம்பி
இயற்றும்நூற் பந்தரும் உவந்து
புணர்அருள் புரிந்தான் நின்பதி; அந்தப்
புராணம்நீ ஓர்ந்தனை அன்றே?
கணமலி முனிவர் சூழ்திரு வானைக்
காஅகி லாண்ட நாயகியே.

[''சிலந்தியும் ஆனைக் காவில் திரு நிழற் பந்தர் செய்து உலந்தவண் இறந்தபோதே கோச் செங்கணுனுமாகக், கலந்த நீர்க் காவிரி சூழ் சோணுட்டுச் சோழர் தங்கள் குலந்தனிற் பிறப்பித் திட்டார்'' எனவரும் அப்பர் தேவாரமும், ''தெருண்ட வாயிடை நூல் கொண்டு சிலந்தி சித்திரப் பந்தர் சிக்கன இயற்றச் சுருண்ட செஞ்சடையாய், அது தன்னைச் சோழன் ஆக்கிய தொடர்ச்சி கண்டு அடியேன்,'' எனவரும் சுந்தரர் தேவாரமும் பிறவும், இங்கு உணர்தற்குரியன.]

## (9) ஆரம் பூண்டவன் :

அகிலாண்ட நாயகியே! வெள்ளை நாவல் மரத்தின் கீழ்வீற்றிருப்பவர் ஆகிய சிவபெருமான் (சம்புகேசுவரர்), 'ஆரம் பூண்டவன்' என்னும் ஒரு பெயரை முன்பு பெற்றிருக்கின்ருர். நீயும் என்னுடைய பாடலை ஏற்று அணிந்து கொள்வாயாயின், 'பாடல் பூண்டவள்' என்னும் ஓர் அழகிய பெயர் நினக்கும் உண்டாகும்.

புண்ணிய வெள்ளை நாவலோன் ஆரம்
பூண்டவன் எனும்பெயர் புனைந்தான்!
தண்ணிய குணத்து நீயும்என் பாடல்
தழுவுபு பூணுவை யாயின்,




ஸ்ரீ அகிலாண்ட நாயகி, திருவானைக்கா

அண்ணிய பாடல் பூண்டவள் எனும்ஓர்
அரும்பெயர் நினக்கும்உண் டாமே !
கண்ணிய வரங்கள் தருதிரு வானைக்
காஅகி லாண்ட நாயகியே !

(''ஆரம் நீரோடு ஏந்தினன் ஆனைக்காவு சேர்மினே'' எனச் சம்பந்தரும் ''ஆரம் கொண்ட எம் ஆனைக்கா வுடை ஆதியை நாளும் ஈரம் உள்ளவர் எம்மையும் ஆளுடையாரே'' எனச் சுந்தரரும், திருவானைக்காப் பெருமான் 'ஆரம் பூண்டவன்' எனப் பெயர் பெற்ற செய்தியைக் குறித்தல் காணலாம்.)

## (10) திருநீறிட்டான் திருமதில் :

ஒரு பெரிய பன்றியின் உருவை எடுத்துக் கொண்டு உன் கணவனின் திருவடி மலரைக் காண விரும்பி, திருமால் இப் பெரிய நிலத்தை அகழ்ந்து கொண்டு சென்றனரே. எற்றுக்கு? திருவானைக்காக்கோயிலிலுள்ள திருநீறிட்டான் திருமதில் அடியினைக் கண்டாற் போதுமே! அது செய்திருத்தல் கூடாதா? அவர்.

ஒருகருங் கேழல் உருஎடுத்து இணையில்
உன்பதி அடிமலர் காண்பான்
பெருநிலம் அகழ்ந்த மாயவன் நினது
பிறங்குபே ராலயம் சூழ்ந்த
பொருவில்நீ றிட்டான் மதில்அடி கண்டாற்
போதுமே ! புண்ணியக் கொழுந்தே !
கருள்கடிந் தொளியின் மலிதிரு வானைக்
காஅகி லாண்ட நாயகியே.

[இறைவன் ஒரு சித்தராகப் போந்து, திருநீற்றையே கூலியாகக் கொடுத்துக் கட்டுவித்த மதில், ஆதலின் திருவானைக்காக் கோயிலின் மதில், '' திருநீறிட்டான் மதில்'' என்னும் சிறப்புப் பெயர் பெற்றது.]

## முடிவுரை :

உலகப் பெருங் கவிஞர்களுள் தலை சிறந்த ஒருவராக மதிக்கப் பெறுபவர், வில்லியம் ஷேக்ஸ்பியர் என்பவர். அவர்தம் அழகிய கவிதைகளை எத்தனையோ பற்பல அறிஞர்கள் ஆராய்ந்து வியந்து பாராட்டி வருகின்றார்கள். அவர்களுள் பேராசிரியர் டௌடன் (Prof. Dowden) என்பவர், 'ஷேக்ஸ்பியரின் நூல்கள் தொடக்கத்திற் பற்பல குறைபாடுகளைக் கொண்டனவாக இருந்து, பின்னரே படிப்படியாக வளர்ந்து சிறந்து முதிர்ந்து பெருமை யுற்றன' என்று, ஆராய்ந்து விளக்கிக் காட்டியிருக்கின்றார். ஷேக்ஸ்பியரின் நூல்களை அவர் தொழிற் கூடத்தில் (In the Workshop), உலகத்தில் (In the World), ஆழத்தினின்று (Out of the Depths), உச்ச நிலையிற் சென்று (On the Heights) இயற்றப்பட்டன என்று, நான்கு வகைகள் அமையப் பிரித்து வைத்து ஆராய்கின்றார். வயதும், அறிவும், அநுபவமும் வளர வளரத்தான், கவிஞனின் கவிதைத் திறம் முதிரப்பெறும் என்பது, அவர் ஆராய்ந்து விளக்கும் அரிய சிறந்த கருத்தாகும்.

'அகிலாண்ட நாயகி மாலை' என்னும் இந் நூல், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால், தமது இளமைக் காலத்திலேயே பாடப்பெற்றிருந்தும், 'இறங்குதுறை நீத்தாயிற்று' என்பதற்கு ஏற்ப, அவ்விளம் பருவ நிலையிலும், கவிதை இயற்றத் தலைப்பட்ட தொடக்க காலத்திலுமே, அவர் அடைந்து விட்டிருந்த புலமையின் நிறைவையும், கவிதைத் திறனின் முதிர்ச்சியையும் தெளிவுற விளக்க வல்லதாகத் திகழ்கின்றது. சாத்திரம், தோத்திரம், இலக்கணம், இலக்கியம், கற்பனை, கவித்திறன், சொல் நயம் முதலிய பற்பலவற்றின் சிறப்புக்களும் இந் நூலிற் பொற்புற அமைந்திருத்தல் காணலாம்.

இத்தகைய சிறந்த இந்த நல்ல இனிய நூலை, அம்பிகையின் துதி நூல் வகைகளுள் ஒன்றாகப் பெரிதும் மதித்துப் போற்றி, நாம் அனைவரும் அன்புடன் ஓதி, நலம் பெற்றுய்ய முயலுவோமாக !

— ஆசிரியர்.

# திருவாசகத்தில் ஒரு மணிவாசகம்

[ ந.ரா. முருகவேள், M.A., M.O.L. ]

## முன்னுரை :

திருவாசகம் தமிழிலுள்ள தலைசிறந்த சமய நூல் என்பதனை அனைவரும் அறிவர். ஓதுபவர் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டு, கருங்கல் மனத்தையும் கரைந்து கசிந்து உருகும் படி செய்வதில், திருவாசகம் ஈடு இணையற்றது என்பதனை வாழையடி வாழையாக வந்த சான்றோர்கள் அனைவருமே, தத்தம் அனுபவத்தில் கண்டுணர்ந்து போற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மைக் காலத்து அருட்பெருஞ்சான்றோராகிய இராமலிங்க அடிகளார் ''சாத்திரங்களில் சிறந்தது திருமந்திரம், தோத்திரங்களில் தலை சிறந்தது திருவாசகம்'' எனப் பலகாலும் அன்பர்களுக்கு அறிவுறுத்துவாராம். இதனால் திருவாசகத்தின் சிறப்பு எத்தகையது என்பதை, நாம் ஒருவாறு நன்கினிது தெளியலாம்.

## சிறந்த திருப்பாடல் :

அத்தகைய அரும் பெரும் சிறப்பு வாய்ந்த திருவாசகத்தில், அனைத்துமே சிறந்த அரிய பாடல்கள் ஆகும், ஆயினும் அவற்றுள்,

'' இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்;
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே;
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே ''?

எனவரும் அழகிய இனிய பாடல், திருவாசகப் பாடல்களிலேயே மிகமிக முதன்மையான, விழுமிய முழுமணி போன்ற பெருநலம் சான்றதாகும். இதனைத் திருவாசகத்தின் 'இருதயசுலோகம்' என்றும் கூறலாம். தொட்டனைத் தூறும் மணற் கேணி போலக் கற்றனைத்தூறும் பற்பல சிறந்த நுண் பொருள்களைத் தன்னகத்தே பொதிந்து கொண்டு, பொலிந்து விளங்குகின்றது இவ்வரிய சிறந்த திருப்பாடல்!

## பாடலின் கருத்து :

திருவாசகத்தில் 'கோயிற்றிருப்பதிகம்' என்னும் பகுதியில், அநுபோக இலக்கணம்'' கூறும் பாடல்களுள் ஒன்றாக, இப்பாடல் அமைந்துள்ளது. இதன்கண் மாணிக்கவாசகப் பெருமான், இறைவன் தமக்கு அருள் செய்த தனையும்; தம்மைப் பற்றியுள்ள மலத்தைப் போக்கித் தம் அறியாமையை நீக்கியதனையும்; தம்முடைய உள்ளத்தில் ஞான ஒளியைப் பரப்பும் சூரியனாகத் தோன்றி நிலைபெற்ற இயல்பினையும்; அத்தகைய இறைவனின் அருட் பெரும் இயல்புகளைத்தாம் நினைப்பற நினைந்து போற்றி வருதலையும் குறிப்பிட்டருளுகின்றார்.

இறைவன் அணுவினும் மிகமிக நுண்ணியனாய் எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்று இயக்கிவரும் அத்துவித இயல்பும்; உலகிலுள்ள உயிர்ப்பொருள் உயிரில்பொருள்கள் (சத்து, சடம்) என்பவை இறைவன் இயக்கினால் அன்றி இயங்கமாட்டாமையும்; அங்ஙனமே யாவற்றையும் இயக்கும் இறைவன் அவற்றிற்கெல்லாம்

அப்பாற்பட்ட அதீதநிலையில் விளங்கும் தன்மையும்; அத்தகைய இறைவனை உயிர்கள் தம்முடைய முயற்சியினால் சுட்டறிவு கொண்டு அறிதல் இயலாது என்னும் உண்மையும்; இப்பாடலின் கண் நன்கினிது விளக்கப் பட்டு இருக்கின்றன. இப்பாடலின் ஒவ்வொரு சொல்லும் மிகமிக ஆழ்ந்து ஆராய்ந்து நுனித்து உணர்தற்கு உரியதாக அமைந்துள்ளது.

## பாடலின் பொருள் :

''இந்நாளில் எனக்கு அருள் புரிந்து என்னுடைய அறியாமையாகிய இருளைப் போக்கி, மனத்தின் உள்ளே வெளிப்படுகின்ற சூரியனைப் போல வெளிப்பட்டு நிலைபெற்ற, நின்னுடைய சிறந்த இயல்புகளை இடைவிடாமல் எப்பொழுதும் நினைந்து துதிக்கும் பேற்றை யான் பெற்றேன்.

உன்னை யல்லாமல், வேறொரு பொருளும் இல்லாதபடி, எல்லாப் பொருள்களிலும் கலந்து கலந்து அணுத்தன்மைப் பட்டு நுணுகி, நுணுகி, எங்கும் ஒரு தன்மையாய் விரவி நிற்கும் ஒப்பற்ற பொருளாகத் திருப்பெருந் துறையின்கண் உறைகின்ற சிவபெருமானே!

காணப்படும் பொருள்களுள் நீ ஒரு பொருளும் ஆகமாட்டாய். ஆயினும் உன்னை யல்லாமல் ஒருபொருளும் இயங்குவதில்லை. இத்தகைய நின்னை அறியும் வல்லமை உடையவர்கள் உலகில் யாவர் உளர்? ஒருவரும் இலர்''

என்பது திருவாசகத்தில் வரும் எத்துணையோ பல சிறந்த பாடல்களுள், ஒரு பெரும் விழுமிய முழுமணி போன்று ஒளிவிட்டு விளங்கும் இவ்வரிய இனிய பாடலின் திரண்ட பொருள் ஆகும். இதன்கண் ஒவ்வொரு சொல்லும் சொற்றொடரும் மிக நுணுகிய ஆழ்ந்த பொருள்நலம் உடையது. அவற்றை இங்கு இயன்றவரை ஆராய்ந்து காண்போம்.

(1) 'இன்று' என்றது, சிவபிரான் திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் ஆட்கொண்டருளிய புனித நாளை உணர்த்துகின்றது எனக் கொள்ளலாம். மாணிக்கவாசகப்பெருமான் (அ) ''மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்'' (ஆ) ''பெருந்துறையின் மேய பெருமான் பிரியாது இருந்து உறையும் என் நெஞ்சத்துள் இன்று'' (இ) ''இன்று எனக்கு ஆரமுது ஆனாய் போற்றி (ஈ) ''களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டு இன்றே'' என, இன்று என்னும் சொல்லைப் பல இடங்களில் வழங்கி அருளிச் செய்திருத்தல் காணலாம்.

(2) 'எனக்கு அருளி' என்னும் தொடரில், 'எனக்கும்' என்ற இழிவு சிறப்பு உம்மை மறைந்து நின்றது. 'எனக்கு' என்னும் சொல் தம்முடைய சிறுமைகளை எல்லாம் தொகுத்துச் சுருக்கி உணர்த்தும் வகையில் அருளிச் செய்யப் பட்டதாகலின், அஃது 'இசை எச்சம்' எனக் கொள்ளப்பெறும்.

(3) 'இருள் கடிந்து' என்றது, இறைவன் தமக்கு ஞானோபதேசம் செய்து அறியாமையைப் போக்கி யருளிய பேருதவியை வியந்தவாறு. 'குற்றங் கடிதல்' என்றாற்போல 'இருள் கடிதல்' என்று குறிப்பிட்ட திறம் உணர்ந்து இன்புறற்பாலது.

(4) அருளைப் போக்குதலும், ஒளியைப் பரப்புதலும் ஞாயிற்றின் செயல். அம் முறையில் தமது அறியாமை இருளைப் போக்கித் தமக்கு ஞான ஒளியைக் கொடுத்தருளியமை பற்றி, அடிகளார் இறைவனை ஞாயிறு என வியந்து போற்றினார். நக்கீரர் பெருமானும், முருகனை ஞாயிறு என விளக்கியிருத்தல் இங்குக் கருதற்பாலது. மாலையில் மறையும் சூரியனை விலக்கி, ஒளி மிகுந்த அழகிய காலைக் கதிரவனை உணர்த்துவதற்காக 'எழுகின்ற ஞாயிறு' என்றார். 'ஞாயிறே போன்று' என்பதில் ஏகாரம் பிரிநிலை; சந்திரன் விண்மீன்கள் ஆகிய பிற ஒளிப் பொருள்களை விலக்கியது.

(5) சூரியன் கிழக்குக் கடலில் அல்லது உதய மலையில் தோன்றுவதாகக் கூறுவது கவி மரபு. அந்தப் பௌதிக சூரியனை விலக்கி, ஞான சூரியனாகிய இறைவனையே சுட்டி உணர்த்த 'உள்ளத்து எழுகின்ற ஞாயிறு' என விதந்து கூறினார். இனி, 'உள்ளத்து' என்பதை 'எழுகின்ற' என்னும் சொல்லோடு சேர்த்துக் கொள்ளாமல், 'உள்ளத்து நின்ற நின் தன்மை' எனவும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளலாம். இறைவன் உலகமெங்கும்

வியாபித்திருந்தாலும், அன்பர்களாகிய ஞானி களின் உள்ளத்திலேயே நிலைபெற்றுத் தங்கி வீற்றிருக்கின்றான் என்பது, வேதாகமங்களின் முடிபு. அஃது இங்கே குறிப்பிடப்பட்டதாகக் கொள்ளலாம். ''பெருந்துறையின் மேய பெரு மான் பிரியாது இருந்து உறையும் என் நெஞ் சத்து இன்று'' எனவும்; இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என வும் மணிவாசகர் கூறுதல் காண்க.

(6) **'நின்ற'** என்னும் சொல் காலவழுவ மைதி. நிற்கின்ற' என்னும் பொருளில் வந் தது. ''முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழும் காலத்தானே'' என்பது நன்னூற் சூத்திரம். 'மலர்மிசை ஏகினான்' எனத் திருவள்ளுவர் இறந்த காலத்திற் குறிப் பிட்டதும், ஆசிரியர் பரிமேலழகர் அதனைக் காலவழுவமைதி என்று விளக்கி யிருப்பதும், இங்கே சிந்தித்து இன்புறுதற்குரியன.

(7) **'நின் தன்மை'** என்பது, இறைவனின் உயர்வற உயர்ந்த பெரு நலங்களையும், அத்த கைய இறைவன் தம்பொருட்டு ஒளி வந்து இரங்கிப் புரிந்தருளிய எல்லையற்ற பேரருள் உதவிகளையும், தொகுத்து உணர்த்தும்.

(8) **'நினைப்பற நினைந்தேன்'** என்னும் தொடர், இப்பாடலில் மாணிக்கவாசகரால் முதன் முதலிற் புதிதாகப் படைத்து வழங்கப் பெற்ற —அருமை மிக்க — ஓர் அழகிய — இனிய— பொருள் பொதிந்த சொற்றொடர் எனலாம்! 'நினைப்பு, என்பது மறப்பின் பின் நிகழ்வது. மறந்ததை நினைப்பதும், நினைந்ததை மறப்ப தும் நம்மனோர்க்கு இயல்பு. மாறி மாறி அடுத்தடுத்து நிகழும் நினைப்பு மறப்புக்கள் இல்லாதபடி, எப்பொழுதும் இடை விடாமல் நினைத்து இறைவனைத் தியானித்துக் கொண்டு, அவனோடு ஒன்றியிருக்கும் திருவருட் பேற்றினை எய்தப் பெற்றமையினால், மணிவாசகர் 'நினைப்பற நினைந்தேன்' என்று அருளிச் செய் தார். இதனைச் **'சாக்கிர அதீத நிலை'** எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும். 'நினைப்பற நினைந்தேன்' என்னும் இவ்வரிய தொடரின் அருமைப் பாட்டை மிகவும் வியந்து, கவிஞர் கள் பலர் இதனைத் தத்தம் கவிதைகளில் தழு விப் போற்றி கொண்டுள்ளனர்.

(9) **'நீ அலால் பிறிது மற்று இன்மை'** என்னும் தொடர், இறைவன் இவ்வுலகப் பொருள்கள் எல்லாமாகவும் விள ங்கும் தன்மை யை உணர்த்துகின்றது. 'எல்லாம், சிவன் என்ன நின்றாய் போற்றி' என்பது திருநாவுக் கரசர் தேவாரம். ஞானிகள் இவ்வுலகப் பொருள்களை எல்லாம் சிவ மயமாகவே காண் பர். எவ்விடத்திலும் எல்லாப் பொருள்களிலும் சிவத்தைக் காண்பதும், எல்லாவற்றையும் சிவ மயமாகவும் சிவச்செயலாகவும் கொள்வதும் ஞானிகளின் இயல்பு. இந்நிலையினை எய்தும் தன்மையே ஞானப் பேற்றிற்கும் அறிகுறி யாகும்.

**பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர்**
**பரமே பார்த்திருப்பர்;**
**பதார்த் தங்கள் பாரார்......**
**சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்.**

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளுக்கு ஏற்ப, மாணிக்கவாசகர் எல்லாம் சிவமயமாகக் காணும் நல்லாராக விளங்கப் பெற்றதனை 'நீ அலால் பிறிது மற்று இன்மை' என்னும் தொடர், தெளிவுறப் புலப்படுத்துகின்றது.

(10) **'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து'** என்னும் தொடர், இப்பாடலில் மிக மிக முதன்மை வாய்ந்த ஒரு சிறந்த தொடரா கும். இத் தொடரின் கண் வரும் **'அணு'** என்னும் சொல் ஆன்மாவைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். ஆணவ மலத்தின் சேர்க்கை யால், உயிர் தன்னுடைய வியாபகத் தன்மை குன்றி அணுவைப் போன்று குறுகிய தன்மை யை அடைதலின், உயிர்களுக்கு **'அணு'** என் றும் ஒரு பெயர் வழங்கும்.

(அ) 'சென்று சென்று, தேய்ந்து தேய்ந்து' எனவரும் தொடர்களுக்குப் பல வகையில் பொருள்கள் கொள்ள வாய்ப்புண்டு. அவை களுள் இவை இறைவன் மிகமிக நுண்ணியனா தலை உணர்த்துகின்றன என்பது ஒரு கருத்து.

(ஆ) ஆன்மாக்கள் படிப்படியாக வெவ்வேறு பிறவிகளையும் நிலைகளையும் அடைந்து, முடி வில் இறைவனை அடைகின்றன என்பதனை உணர்த்துகின்றன என்பது பிறிதொரு கருத்து.

(ஈ) 'சென்று சென்று' என்பது உயிர்களின் உலகப் பற்று நிலையையும், 'தேய்ந்து தேய்ந்து' என்பது உயிர்களின் இறையருட் பற்று நிலையையும் குறிப்பதாகவும், இவற்றைக் கொள்ளுதல் கூடும்,

(ஈ) இனி, உயிர்களின் மலப்பிணிப்பு நிலையில், இறைவன் உயிர்களின் பின்னே சென்று சென்று, 'புறம் புறம் திரிந்த செல்வமே' என்றாற்போல ஆட்கொள்ளுகின்றான்; அருள் பெற்ற நிலையில் உயிர்கள் இறைவனின் பின்னே செல்லத் தலைப்பட்டுத் தம்முடைய குற்றங்கள் எல்லாம் தேய்ந்து தேய்ந்து ஒழிய உய்தியும், உயர்வும் பெறுகின்றன. இந்த உண்மையையும், இத்தொடர்கள் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

(உ) தூலதேகம், சூக்குமதேகம், காரண தேகம் என்பனவற்றிலெல்லாம் சென்று சென்று, அணுத்தன்மை இத்தகையதென்று அறிந்து அழுந்தி, சிவபோதமும் கன்மநுகர்ச்சியும் ஆகியவை தேய்ந்து தேய்ந்து குறைந்தொழிய, உயிரானது சிவபரம் பொருளோடு ஒன்று சேரும் நிலையை, இத்தொடர்கள் குறிப்பிடுகின்றன எனவும், நாம் கொள்ளுதல் அமையும்.

(ஊ) கானல் நீர் கண்டு மயங்கி இங்கும் அங்கும் எங்கும் ஓடி அலையும் மான் கணம் போல, உயிர்கள் இன்பம் என்று எவ்வெவற்றையோ பிறழ உணர்ந்து பெருமயக்குற்று அலைந்து திரியும் இயல்பினைச் 'சென்று சென்று' என்றும்; பின்னர் அவைகளே தாம் இன்பமெனக்கருதிய பொருள்கள் துன்பமாதலை அனுபவித்து உணர்ந்து தாம் அவற்றின்பாற் கொண்ட அவாவும் பற்றும் முறைமுறையே கழியப்பெறுதலைத் 'தேய்ந்து தேய்ந்து' என்றும் குறிப்பிட்டதாகக் கொள்ளுதலும் பொருந்தும். சென்று சென்று திரிதல் 'ஆரா இயற்கை அவார்'; தேய்ந்து தேய்ந்து கழிதல் 'அவா நீத்தல்'; அந்நிலையே பேரா இயற்கை பெறுதல் 'ஒன்றுதல்' எனக் கொள்ளுதல் பொருந்தும்.

(11) 'ஒன்றும்' என்னும் சொல், சிவனே என்னும் விளிச் சொல்லுடன் இயையும். இங்கு ஒன்றுதல், ஒப்பற்ற பொருளாதலையும், இரண்டறக் கலந்து அத்துவிதமாதலையும் உணர்த்தும். 'ஒன்றலா ஒன்றால் உளதாகி' எனவரும் சிவஞான போதத்தால், ஒன்று என்பது, கடவுளுக்கே உரிய சிறப்புப் பெயராதல் அறியலாம்.

(12) 'திருப்பெருந்துறை' என்பது இங்கு அப்பெயர் கொண்ட தலத்தை மட்டும் குறியாமல், 'வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க' என்றபடி, சைவ சமயம் அல்லது சைவசித்தாந்தம் ஆகிய அருள்நெறிப் பெருந் துறையினைக் குறிப்பதாகக் கொள்வதும் உண்டு. இப்பாடலைக் கொண்ட இத் திருப்பதிகம், திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப் பெறாமல் தில்லையிலேயே அருளிச் செய்யப் பெற்றதாகத் தெளிந்து, **'கோயிற்றிருப்பதிகம்'** எனப் பெரியோர்களால் வழங்கப்பட்டு வருவதும் இங்கு நாம் நினைவு கூரத்தக்கது.

(13) **'ஒன்றும் நீ அல்லை'** என்னும் தொடர், இறைவன் உயிர்ப்பொருள் உயிரில் பொருள்களில் எல்லாம் கலந்து நிற்பினும், அவற்றினுள் ஒன்றாகாமல் அவற்றை யெல்லாம் கடந்து அதீதநிலையனாய் அப்பாற்பட்டு நிற்பன் என்பதனை உணர்த்திற்று.

(14) **'நீ அன்றி ஒன்று(ம்) இல்லை'** என்னும் தொடர், உடலுக்கு உயிர் போல நின்று இறைவன் இயக்கினால் ஒழிய, உயிர்ப்பொருள் உயிரில் பொருள் ஆகிய எவையும், தாமே இயங்கும் ஆற்றல் உடையன அல்லாமையைப் புலப்படுத்திற்று.

(15) இங்கு **'அல்லை' 'இல்லை'** என்ற சொற்களின் குறிப்பு மிக நுட்பமானதாகத் திகழ்கின்றது. 'அல்லை ஈது அல்லை ஈது' என மறைகளும் இறைவனை அன்மைச் சொல்லினாலேயே துதிக்கும். 'இன்மை' என்னும் சொல் இல்லாமையை உணர்த்தாமல், முனைத்து நில்லாமை அல்லது விளங்கித் தோன்றாமையை உணர்த்துவதாகக் கொள்ளுதல் வேண்டும். 'யாவையும் சூனியம் சத்தெதிர்' என்னும் சிவஞான போதவுரை காண்க.

(16) 'ஆர்உன்னை அறியகிற்பார்?' என்றது, உயிர்கள் தம்முடைய சுட்டறிவினால் இறைவனை அறிதல் இயலாது என்பதும், யானையின் துணைகொண்டே யானையின்மீது ஏறவேண்டு

வது போல, இறைவனை அறிதற்கு அவனுடைய அருளையே துணையாகப் பற்றல் வேண்டும் என்பதும் உணர்த்திற்று. 'தன்னறிவு அதனாற் காணும் தகைமையன் அல்லன் ஈசன்' என்பது சிவப்பிரகாசம்.

**சான்றோர் போற்றுரை :**

இங்ஙனம் எண்ணி எண்ணி உனருந்தோறும் நுண்ணிய பல பொருள்களை உணர்த்தி நிற்பதனால், இவ்வரிய இனிய இணையற்ற பாடலின் சிறப்பைச் சான்றோர்கள் பலரும் உவந்து போற்றியுள்ளனர். சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோராகிய உமாபதி சிவம்,

"சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
என்றிறை யியற்கை யியம்புதல் தகுமே',

எனத் தாம் இயற்றிய **சங்கற்ப நிராகரணம்** என்னும் தத்துவப் பெருநூலில், இத்திருவாசகச் செய்யுளை மேற்கோளாக இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துக் காட்டிப் போற்றியிருத்தல் காணலாம். அவ்வாறே வேதாந்த சித்தாந்த சமரச ஞானப்பெருஞ் செல்வராகிய தாயுமான சுவாமிகள் அவர்களும்,

நினைப்பறவே தான் நினைந்தேன்
என்றநிலை நாடி
அனைத்துமாம் அப்பொருளில்
ஆகும் நாள் எந்நாளோ ? (1)

சென்றுசென் றணுவாய்த்
தேய்ந்துதேய்ந் தொன்றுகி
நின்று விடும் என்றநெறி
நிற்கும்நாள் எந்நாளோ ? (2)

என்று இத் திருவாசகப் பாடலைக் குறித்துத் தம்முடைய திருப்பாடல்களில் விதந்து வியந்து புகழ்ந்து போற்றியிருத்தலும், இங்கு நாம் உணர்ந்து மகிழ்தற்குரியது,

**முடிவுரை :**

இங்ஙனம் சான்றோர்கள் எல்லாரும் போற்றி ஓதி மகிழ்ந்திருத்தல் ஒன்றே; திருவாசகத்தின் தன்னிகரற்ற பெருஞ் சிறப்பை உணர்த்துதற்குப் போதிய சான்றாகும். ஆயினும் இத்தகைய சிறந்த திருவாசகத்தையும் ஒரு சிலர் எளிதாக எண்ணிப் பேசுவர். அதனால் திருவாசகத்திற்கு ஓர் இழுக்கும் இல்லை. திருவாசகத்தை ஓதியும் ஒரு சிறிதும் உருக்கம் அடையாத நெஞ்சம் உடையவர்கள் இருக்க நேருமாயின், அது திருவாசகத்தின் குறையாகாமல், அவர்களின் பண்படாத மன இயல்பினையே உணர்த்துவதாகும் *(1)*. ஏனெனில்,

மலரினும் மென்மை கவிதை ; சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார்.

என்பது, அறிஞர்கள் அனைவரும் கண்டறிந்த உண்மை. *(2)*

திருவாசகத்தினை இராமலிங்கர், சிவப்பிரகாசர், சிவஞான முனிவர், தாயுமானவர் போன்ற, எத்தனையோ பல்லாயிரக்கணக்கான மாபெரும் சான்றோர்களும் அருளாளர்களும் போற்றி ஓதி உய்ந்துள்ளனர், என்னும் உண்மையினை நாம் நூல்கள் வாயிலாக அறிகின்றோம். எனவே, அத்தகைய அருட்பெருஞ்சான்றோர்கள் பலரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, நாமும் திருவாசகச் செந்தமிழ் மாமறையினை இடையறாது ஓதி, இறையருள் பெற்று உய்ய முயலுவோமாக.

(வெண்பா)

உள்ளம் உருக்கி உணர்வைச் சிவம்ஆக்கும்
தெள்ளு தமிழ்த்திரு வாசகம் தான்—
மெள்ளமிக
நம்மை மலம்கெடுத்து, நன்மையெலாம்
எய்துவித்துச்
செம்மையுறு விக்கும் தெளி !

—ஆசிரியர்

---

(1) 'Modern works have to pass before the bar of taste of successive generations; whereas, with classics, which have been through the ordeal. almost the reverse is the case. Your taste has to pass before the bar of the classics. That is the point. If you differ with a classic, it is you who are wrong, and not the book".

—Arnold Bennett,
Literary Taste, How to Form it.

(2) "The millions are awake enough for a physical labour : but only one in a million is awake for effective intellectual exertion, only one of a hundred millions to a poetic rapture or Divine life.

—Henry David Thoreau,
Where I Lived and What I Lived for.

# மகாலிங்கப் பெருமாள்

[ ந. ரா. முருகவேள், M. A., M. O. L. ]

**முன்னுரை :**

தமிழ்நாடு கோயில்களுக்கு மிகவும் புகழ் பெற்றது. தமிழ் நாட்டைப்போல, மிகமிகப் பழமையும் பெருமையும் வாய்ந்த ஏராளமான கோயில்களையுடைய நாடு, வேறு பிறிது எதுவும் இல்லை எனலாம். தமிழ் மக்களின் பண்டை நாகரிகப் பண்பாட்டின் பெருமைகளையெல்லாம் இன்று உலகுக்கு உணர்த்திக் கொண்டு இருப்பன, இக்கோயில்களேயாகும். சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் முதலிய கலைகள் பலவற்றிற்கும் நிலைக்களமாகத் தமிழ்நாட்டுக் கோயில்கள் விளங்கி வருகின்றன.

**கோயில்கள் :**

தமிழ் மக்களின் சிறந்த சமுதாய வாழ்க்கை கோயில்களையே அடிப்படையும் மையமும் ஆகக் கொண்டு இயங்கி வந்துள்ளது. கோயில்களே பழங்காலத்தில் நம் தமிழ்நாட்டில் பள்ளிக் கூடங்களாகவும், கலைக்கழகங்களாகவும், நூல் நிலையங்களாகவும், அறங்கூறு அவையங்களாகவும், மருத்துவ மனைகளாகவும், பேணுநர் இல்லோர்க்கும் ஊணுடை நல்கிக் காக்கும், புகலிடங்களாகவும், பொது மக்கட்குத் தொழில் தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்தும் கொண்டும் உதவிபுரியும் நிதி நிலையங்களாகவும், போர்க் காலங்களிற் படை வீடுகளாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தன.

**கோயில் அமைப்பு :**

இவ்வாற்றால் தமிழ்நாட்டுக் கோயில்கள் ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஓர் அழகு-சிறப்பு வியத்தகு நலன்-மகிழ்தகு செய்தி-அரிய மரபு-பழைய வரலாறு-பண்பாடு என்பன அமைந்திருத்தல் காணலாம். இவ்வகையில் திருவிடைமருதூர் என்னும் புகழ் மிகுந்த சிவத் தலத்துக் கோயிலின் அமைப்பிலும் சூழலிலும், சிறந்ததோர் அரும்பெறல் நுட்பக் குறிப்பு இயல்பாகவே அமைந்துள்ள தன்மை, அறிந்து இன்புறத்தக்கது.

சிவபிரான் திருக்கோயில்களில் மூலக் கருவறையிற் சதாசிவம் என்னும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் இருக்கும். அக் கருவறையைச் சுற்றிச் சூழ்ந்து பல்வேறு இடங்களில் விநாயகர், முருகர், சண்டேசுரர், சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி, நந்திதேவர், வைரவர், நவக்கிரகங்கள் என்னும் மூர்த்திகளுக்குத் தனித்தனியே சிறுசிறு கோயில்கள் அமைந்திருக்கும். இச்சிறு கோயில்களைப் பரிவாரச் சுற்றாலயங்கள் எனக் கொண்டு, இவற்றிற் கெல்லாம் நடுவே கருப்பக்கிரகம் என்னும் கருவறை அமைந்து திகழ, அதன்கண் சிவலிங்கத் திருமேனி எழுந்தருளி விளங்கும்.

**கருவறைக் கோயில் :**

இப்பொதுவான சிறிய அமைப்பினை, மிகவும் சிறப்பு நிலையில், பெரிய அளவில், யாவருக்

கும் உணர்த்தும் வகையில், திருவிடைமருதூர்க் கோயிலின் அமைப்பும் சூழலும் இயல்பாகவே அமைந்திருக்கும் மாட்சி. யாவரும் உணர்ந்து வியந்து போற்றற்பாலதாகத் திகழ்கின்றது. புகழ் பெற்ற சிறந்த பல கோயில்களைத் தனக்குப் பரிவாரச் சுற்றாலயங்களாகக் கொண்டு, அவற்றிற்கெல்லாம் நடுநாயகமாக அமைந்து, கருவறைபோற் சிறந்து விளங்கும் மேம்பாடு மிக்கதாகத் திருவிடைமருதூர்க் கோயில் திகழ்கின்றது.

## பரிவாரக் கோயில்கள் :

திருவிடைமருதூர்க் கோயிலைத் தமிழகம் அல்லது சோழ நாடு என்னும் ஒரு பெருங் கோயிற் பரப்பின் கருவறையாகக் கொண்டால் திருவலஞ்சுழி விநாயகர்க்கும், சுவாமிமலை முருகர்க்கும், திருச்சேய்ஞலூர் ஆப்பாடி சண்டேசுரர்க்கும், தில்லைச் சிதம்பரம் நடராசர்க்கும், திருவாரூர்ப் பூங்கோயில் சோமாஸ்கந்தர்க்கும், திருஆலங்குடி தட்சிணாமூர்த்திக்கும், திருவாவடுதுறை நந்திதேவர்க்கும், சீர்காழி பைரவர்க்கும், மாந்துறை சூரியனுக்கும் முறையே யுரிய, பரிவாரச் சுற்றாலைக் கோயில்களாக அமைந்திருத்தலை, யாவரும் அறிந்து கண்டு இன்புறலாம்.

## திருவிடைமருதூர் உலா :

இங்ஙனம், திருவிடைமருதூர்க் கோயில். தன்னைச் சுற்றிச் சூழ்ந்துள்ள பல சைவத் திருக்கோயில்களுக்கு மூலமுதற் கருவறையாகவும், மருதவாணப் பெருமான் அக் கருவறையில் எழுந்தருளியுள்ள சிவலிங்கத் திருமேனி மகாலிங்கம் ஆகவும்விளங்கும் நிலையில், அருகே சூழ்ந்துள்ள கோயில்கள் பரிவாரச் சுற்றுக் கோயில்கள் ஆகவும் அமைந்து திகழும் மாட்சிமையினை, மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், தாம் இணையிலாச் சிறப்புகள் பொருந்துமாறு இயற்றியுள்ள திருவிடைமருதூர் உலாவில், பின்வருமாறு பாடுகின்றார்.

''ஒப்பேதும்
இல்லா வலஞ்சுழியே ஏரம்பன் வைப்பாக
மல்ஏரகம் முருகன் வைப்பாக—நல்லார்சேர்
தண்மாட ஆப்பாடி தண்டீசன் வைப்பாக
வண்மாந் துறை இரவி வைப்பாக—எண்மாரு
நன்காமர் தில்லை நடராசன் வைப்பாக
வன்காழி யேவடுகன் வைப்பாக-முன்காணும்
தென்ஆ வடுதுறையூர் சேஅமர் வைப்பாஆரூர்
மன்னுசோமாக் கந்தர் வைப்பாக—உன்னில்
தடைதவிர் ஆலங்குடி ஆசாரியன் வைப்பாக
இடைமருதில் வீற்றிருக்கும் ஏற்றமிகும் ஈசன்

## மகாலிங்கம் :


இங்ஙனம் புகழ்பெற்ற பெரிய பல தலங்களைப் பரிவாரக் கோயில்கள் எனக் கொண்டு, அவற்றிற்கு நடுவே அமைந்தோங்கித் திகழும் திருவிடைமருதூர்க் கோயிலினைக் 'கோயில்களின் கோயில்' என்று குறிப்பிடுவது மிகமிகப் பொருந்தும். இவ்வகையில் பிறகோயில்களின் இலிங்கங்களுக்கெல்லாம் மூல முதல்வராகச் சாலவும் மாட்சிமையுற்று விளங்கும் காரணம் பற்றியே, திருவிடைமருதூர்ப் பெருமானுக்கு மகாலிங்கம் எனப் பெயர் வழங்கி வருகின்றது. இச்சிறப்பினை யுணர்ந்து, நாம் அப்பெருமானைச் சென்று கண்டு அன்புடன் வழிபட்டு, இம்மை மறுமை நலங்கள் அனைத்தும் எய்தி உய்வோமாக!

அணிமருவும் இடைமருதீ சருக்கு நந்தி
ஆவடுதண் துறை; சோமாக் கந்தர் ஆரூர்!
திணிபுகழ்ஆ லங்குடியிற் குருமூர்த்தி; ஆனைத்
திருமுகத்தோன் வலஞ்சுழி; ஏரகத்திற்
செவ்வேள்;
கணிதரும் ஆப்பாடியிற் சண்டீசன் தில்லைத்
கதிர்ப்பொதுவில் நடக்கடவுள்; வடுகன்
காழி!
பணைமருவும் மாந்துறையில் இரவி ஆகும்;
பரமன்எழிற் பதமலருக்கு அன்பு செய்வாம்.

—சிவக்கொழுந்து தேசிகர்
திருவிடைமருதூர்த் தலபுராணம்



திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், மேலக்கரிவலங்குளம் சௌந்தரபாண்டிய ஈசுவரர் கோயிலுக்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **திரு கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் வருகை தந்தபொழுது, அறங்காவலர் பெருமக்களால் வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல் (13 - 4 - 70).



திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், மேலக்கரிவலங்குளம் சௌந்தரபாண்டிய ஈசுவரர் கோயிலுக்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **திரு கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் வருகை தந்தபொழுது, அறங்காவலர் பெருமக்களால் வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல் ( 13 - 4 - 70 ).

158580
சென்னை-600 008

# திருக்குருகையர்கோன் திருவிருத்தம்

[ ந. ரா. முருகவேள், M.A., M.O.L. ]

( முற்றொடர்ச்சி )

தனிநெஞ்சம் முன்அவர் புள்ளே
        கவர்ந்தது; தண்ணந் துழாய்க்கு
இனிநெஞ்சம் இங்குக் கவர்வது
        யாம்இலம்; நீநடுவே
முனிவஞ்சப் பேய்ச்சி முலைசுவைத்தான்
        முடிசூடு துழாய்ப்
பனிநஞ்ச மாருதமே! எம்மது
        ஆவி பனிப்பு இயல்வே

(பொழிப்புரை) என்னோடு உறவற்று நீங்கிய என் மனம் முழுவதையும் முன்னர், அப்பெருமானுடைய் கருடப் பறவையே பிறர்க்கு மிச்சம் இல்லாதபடி கவர்ந்துகொண்டு போயிற்று. ஆதலால் அப்பெருமானுடைய குளிர்ந்த அழகிய திருத்துழாய்க்குக் கவர்ந்து கொண்டு போவதற்கு உரியதான, வேறொரு நெஞ்சை இனி இவ்விடத்தில் யாம் உடையோமல்லோம். அவ்வாறிருக்க, சினக்கும் தன்மையுள்ள வஞ்சனை மிகுந்த பூதனை என்னும் பேய்மகளின் நஞ்சு தடவின தனத்தைப் பசையறச் சுவைத்து அருந்திய கண்ணபிரானின் திருமுடியில்சூடப்பட்ட திருத்துழாயினது குளிர்ச்சியை உடைய, நஞ்சு போன்ற காற்றே! நீ இடையிலே புகுந்து, ஏற்கெனவே துன்புற்றிருக்கின்ற எம்முடைய உயிரை, மேலும் நடுங்கச் செய்வது நினக்குத் தகுந்த இயல்பு ஆகுமோ?

(விளக்கவுரை) நாயகனைப்பிரிந்து ஆற்றாத நாயகி, வாடைக் காற்றுக்கு வருந்திக் கூறும் பாசுரம் இது. 'தனி நெஞ்சம் முன் அவர் புள்ளே கவர்ந்தது' என்பதனால், எம்பெருமானை அறிவதற்குச் சிறந்த பிரமாணமாகிய வேதத்தின் வழியிலேயே என் மனம் ஊன்றி விட்டது என்று ஆழ்வார் குறிப்பிடுகின்றார். மனத்தைக் கவரவல்ல மாயை என்னும் பிரகிருதி, இங்குத் 'தண்ணந்துழாய்' எனக் குறிக்கப் பெற்றது. புணர்ச்சிக் காலத்தில் இன்பம் தரும் பொருள்கள் யாவும் பிரிவுக் காலத்தில் துன்பம் தரும் ஆதலால், திருத்துழாய்க்கும் அதன் மேற்பட்டு வரும் காற்றிற்கும் அஞ்சியவாறு. வஞ்சகம் செய்யவந்தவர்களின் உயிரை மாய்ப்பதே திருத்துழாய் மார்பனுடைய செயல்; நீ அங்ஙனம் இல்லாமல் அன்பு பூண்டவர்களின் உயிரையும் மாய்க்கின்றாயே? இது தகுமோ? என்றவாறு. எம்பெருமான் பிரிந்து போன தனைக் கருதிக் கோபம் தோற்றுமாறு முதலில் அவர் என்று உயர்த்திக் கூறினாள்; அப்பெருமான் பூதனையைக்கொன்று முன்பு செய்தபேருதவியைக் கருதிக் கோபம் தணிந்து பின்னர்ச் 'சுவைத்தான்' என இயல்பாக ஒருமையிற் கூறினாள். (4)

பனிப்பியல் வாக உடையதண்
        வாடை,இக் காலம் இவ்வூர்ப்
பனிப்பியல்வு எல்லாம் தவிர்ந்துஎரி
        வீசும் அந் தண்ணந்துழாய்ப்
பனிப்புயல் சோரும் தடங்கண்ணி
        மாமைத் திறத்துக் கொலாம்?
பனிப்புயல் வண்ணன் செங்கோல்
        ஒருநான்று நடாவியதே!

(பொழிப்புரை) குளிரச் செய்வதையே இயற்கைத் தொழிலாக உடைய குளிர்ந்த காற்றானது இப்போது, இவ்விடத்தில், குளிரச்

செய்வதாகிய தனது இயல்பு முழுவதையும் விட்டு வெப்பத்தை வீசுகின்றது. இவ்வாறாக, குளிர்ந்த காளமேகம் போன்ற தன்மையை யுடைய எம்பெருமானது என்றும் மாருத செங் கோலானது இவ்வொரு காலத்தில், இவ்வோ ரிடத்தில் மட்டும் கோட்டமுற்று வளைந்து போயிற்று. இஃது, அழகிய குளிர்ந்த அவனது திருத்துழாயின்பால் விருப்பமுற்று மழை துளித் தலை உடைய மேகம் போன்று நீர் சொரிகின்ற பெரிய கண்களை உடைய, இவளது மேனியின் நிறத்தை அழிப்பதற்கே போலும்.

(விளக்கவுரை) வாடைக்கு வருந்தி மாமை இழந்த நாயகியின் நிலைமையைக் கண்டு, **தோழி** இரங்கிக் கூறும் பாசுரம் இது. **தாய்ப்** பாசுர மாகக் கொள்ளினும் அமையும். எம்பெரு மானைச் சேர்வதற்குக் காலவிளம்பம் பொருமல் விரைகின்ற ஆழ்வார், இவ்வுலகப் பொருள்கள் யாவும் தமக்கு வெறுப்பு விளைவித்தலை இப்பா சுரத்தினல் வெளியிட்டுக் கொள்கின்ருர். இவ் வுலகத்தவர்க்கு இன்பம்தரும் பொருள்கள் ஆழ்வார்க்குத் துன்பம் தருவனவாகத் தோன்று தலை, முதலிரண்டு அடிகள் குறிப்பிடுகின்றன. **'புயல்வண்ணன்'** என்றது, மேகம் போற் கரிய வடிவத்தினையும், அதுபோலத் தாபம் தீர்த்துக் கைம்மாறு கருதாமல் உதவுகின்ற தண்மைக் குணத்தையும்உடையவன் என்னும் குறிப்புடை யது. காற்றின் இயல்பை மாத்திரம் மாற்றி ஞன் அல்லன், தனது இயல்பையும்கூட மாற் றிக் கொண்டனன் போலும் என்பது கருத்து. இறைவனுடைய செங்கோன்மை ஒரு நாளும் நிலைகுலைவதன்று; அப்படிப்பட்டது இவள் நிறத்தை அழிப்பதற்காக இவ்விடத்து இவ்வொருபொழுது நிலைகுலைந்தது போலும் என்ருள். தடாவியது ..கோணிற்று, வளைந்தது. (5)

தடாவிய அம்பும் முரிந்த
சிலைகளும் போகவிட்டுக்
கடாயின கொண்டொல்கும் வல்லி
இதேனும் அசுரர் மங்கக்
கடாவிய வேகப் பறவையின்
பாகன் மதன செங்கோல்
நடாவிய கூற்றங் கண்டீர்! உயிர்
காமின்கள் ஞாலத்துள்ளே!

(பொழிப்புரை) இவ்வடிவம் ஆனது, வளைந்த பாணங்களையும், ஒடிந்த விற்களையும் கொள்ளா மல் நீங்குமாறு விடுத்து, செலுத்தத் தகுந்த அம்புகளையும் விற்களையும் ஏந்தித் துவண்டு நடக்கின்ற ஒரு பூங்கொடி போன்ற பெண் வடிவமாக இருந்ததாயினும், அசுரர்கள் அழி யும்படி ஏறி நடத்தப்படுகிற விரைவை உடைய கருடப் பறவைக்கு, இனிய பாகனுகிய இறைவ னின் உறவு பெற்ற, மன்மதனுடைய ஆளு கையை நடத்துகின்ற கூற்றுவனுக இருக்கும்; இந்நிலவுலகத்திலே இவ்வழகிய வடிவத்தைப் பார்த்தவர்களே! உங்களது உயிரைக் காத்துக் கொள்ளுங்கள்.

(விளக்கவுரை) இஃது ஆழ்வாரின் பெரு மையை வியந்து கூறும் **பாகவதர்** பாசுரமாக உள்ளுறை அமைந்த பாடலாகும். ஒரு நாயகி யின் அழகிய வடிவத்தைக் கண்டு அதனிடத்து மிகவும் ஈடுபட்ட நாயகன், உலகத்தாரை நோக்கி இவ்வடிவம் மேலெழப் பார்ப்பதற்கு ஒரு மெல்லியலின் வடிவமாகத்தோன்றினுலும், உண்மையில் மன்மதனுடைய ஆணையை உலகம் முழுவதும் தவருமல் செலுத்துகின்ற ஒரு பெருங் கூற்றமேயாகும். கூற்றுவனுக்குத் தப்பி உய்ந்தாலும்; இதற்குத் தப்பி உய்தல் அரிது. இது கண்டவர்களின் உயிரைத் தன் வசமாக்கிக் கொள்ளும் தன்மையுடையது ஆத லால், இதன் பக்கல் உங்கள் உயிரை இழக் காமல் நீங்கள் நும்மைக் குறிகொண்டு காத்துக் கொள்ளுங்கள்' என்று கூறுவதாக இப்பாசுரம் அமைந்துள்ளது.

இதன் உள்ளுறை பொருள், 'இவ்வாழ்வார் தம்மையணுகுகின்ற உலக மக்களை இவ்விருள் தருமா ஞாலப் பிறப்பினின்று நீக்கி முத்தராகச் செய்யவல்லவர். நீங்கள் உலகியல் வாழ்வி லேயே நிலைத்திருக்க விரும்புவீர்கள் ஆயின், ஊரும் நாடும் உலகமும் தம்மைப் போலே ஆக்கவல்ல இவர்க்கு வசப்படாமல் தப்பிப் பிழையுங்கள், என்பது. இவ்வுள்ளுறை பொருளில் தலைமகள் ஆழ்வார், தலைமகன் பாகவத சிரேஷ்டர். வல்லி என்றது கொடி, பெண்மகள், இங்குப் பராங்குச நாயகியைக் குறிப்பது. கொழுகொம்பைத் துணையாகப் பற்றியல்லது தானே நிலைத்திருக்க மாட்டாத கொடியைப்போல, ஆழ்வார் எம்பெருமானைப்

பற்றியல்லது தரியாமல் பரவசப்பட்டிருப்பர். பயனற்ற அம்புகளேயும் சிலேகளேயும் நீக்கி, நல்ல விழிஅம்புகளேயும் புருவச் சிலேகளேயும் தலேமகள் கொண்டவாறு போல, உலக மக்களின் பயனில்லாத அறிவையும் உபாயங்களேயும் விலக்கி, ஆழ்வார் கடைப்பிடித்த ஞான சாதனங்களின் மேன்மையினே, இது புலப்படுத்துகின்றது. இங்கு அசுரர் என்றது இழி குணமும் செயம் உடைய பிற மதத்தவர்களே. கண்டார் உயிரைத் தன் வசமாக்கிக் கொள்ளவல்ல கூற்றம் ஆக விளங்குபவள் தலேமகள்; அதுபோல உலகமக்களின் ஊழ் வினேத் தொடர்ச்சியை ஒழிப்பதற்கு ஒரு கூற்றமாக உள்ளவர் ஆழ்வார் என்பது குறிப்பு.

ஞானம் என்று கொள்ளப்படுகின்ற பெண்ணின் கண்ணிற்கு, குறி தவருது எய்யும் அம்பை உவமை கூறியதனுல், ஆழ்வாரது ஞானம் பரம் பொருளேத் தவருது பற்றும் தன்மையது என்பது உணர்த்தப் பட்டது. அம்பு என்றது இங்கு ஞான சாதனங்களேக் குறிக்கும். ஞானமாகிய அம்புக்கு வளேவாவது, புறப்பொருள்களின் மேற்செல்லுதல். ஞான சாதனங்களாகிய விற்களுக்கு ஓடிவாவது, ஒருகால் தவறிப் போதல். ஆழ்வாரை வழிபடவே உலகியற் பந்தங்கள் அடியற்றுப் போகும் என்பது இதனுல் வலியுறுத்தப் பெற்றது.

கண்ணபிரானுக்கு ருக்மிணிப் பிராட்டியிடம் மன்மதன் பிரத்தியும்நன், என்னும் புதல்வனுகத்தோன்றினுன் ஆதலின், அவன் 'பறவையின் பாகன் மதனன்' எனப்பட்டான். உலகத்துப் பொருள்கள் எல்லாவற்றையும் எம்பெருமானேடு ஏதேனும் ஒரு வகையான சம்பந்தம் உடையன என்றல்லது சொல்ல அறியாத அன்பு மிகுதியால், வேட்கை விளேவித்து வருத்துபவனுன மன்மதனேயும் கூட, இறைவனின் சம்பந்தம் தோன்றக் கூறியபடி. மகளிரை மன்மதனுக்குச் சேனேயாகக் கூறுதல் கவி மரபு. ஆதலால் 'மதன செங்கோல் நடாவிய கூற்றம்' என்று தலேமகளேக் குறித்தார். (6)

ஞாலம் பனிப்பச் செறித்து
நன்னீர் இட்டுக் கால்சிதைந்து
நீலவல் ஏறு பொராநின்ற
வானம் இது, திருமால்
கோலம் சுமந்து பிரிந்தார்
கொடுமை குழறுதண்பூங்
காலம் கொலோ அறியேன்
வினேயாட்டியேன் காண்கின்றவே!

(பொழிப்புரை) உலகம் நடுங்கும்படி தம்மில் தாம் நெருங்கித் தம் உடம்பின் நீரை முழுதாக வெளிப்படுத்திக் கால்களால் தரையைக் கீறிக் கொண்டு கரிய வலிய எருதுகள் போர் புரிகின்ற வானம் இது; திருமாலினுடைய வடிவத்தைத் தாங்கி பிரிந்து சென்ற நாயகனது கொடுமைத் தன்மையைக் கூறுகின்ற குளிர்ந்த அழகிய கார் காலந்தானே? தீவினேயையுடைய நான் இங்குக் காண்கின்றவற்றை இன்னதென்று அறிகின்றேன் இல்லே.

(விளக்கவுரை) கார் காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற நாயகன், அங்ஙனம் வராமையினுல் வருந்துகின்ற தலேவியை ஒருவாறு ஆறுதல் கூறித் தேற்றுவதற்காக, இது கார் காலமன்று; எனக் காலத்தை மயக்கித் தோழி கூறுவதாக அமைந்த பாசுரம் இது. இத்துறையினேக் 'காலமயக்கு' எனவும் 'காலம் மறைத்துரைத்தல்' எனவும் கூறுவர்.

கார் காலத்து மேகமானது, விளங்குகின்ற மின்னலாலும் கருமை நிறத்தாலும், திருமகளே மார்பில் கொண்ட கரிய நிறமுடைய மகாவிஷ்ணுவைப் போன்று விளங்கும். ஆதலின் 'திருமால்கோலம் சுமந்து' என்ருர். மேகம் முழங்குதல், பிரிந்து சென்று வாராத தலேவரின் கொடுமையை நினேவூட்டுதலால், 'பிரிந்தார் கொடுமை குழறும்' என்ருர். 'தண் பூங்காலம்' என்று அடைமொழிகள் கொடுத்துக் கூறியது, அக்காலம் கலவிக்குரியதாய் இனியது எனற்கு. தோழியானவள், தான் தலேவியின் வருத்தத்தைக் கண்டு கொண்டிருக்க நேர்ந்த தனது துன்பத்தை நினேந்து, தன்னே 'வினேயாட்டியேன்' என்று கூறி நொந்து கொள்கின்ருள். "தலேவன் வராமைக்குக் காரணம் அவனது கொடுமையும் அன்று, உனது ஆற்ருமையும் அன்று, இக்காலமும் அன்று, நின் துன்பத்தைக் காணுகின்ற என்னுடைய தீவினேயே காண்" எனத் தோழி நொந்து கொள்கின்ருள்.

இஃது ஒருவகையில் "இராமபிரான் காட்டிற்கு எழுந்தருளியதற்குக் காரணம், மந்தரை

யின் சூழ்ச்சியும் அன்று, கைகேயியின் சூழ்வினை யும் அன்று, தசரத மன்னனது அனுமதியும் அன்று, இராமபிரானின் பணிவுமன்று, கைகேயி யின் வயிற்றில் பிள்ளையாகப் பிறந்த எனது பாவமே காரணம்'' என்று பரதாழ்வான் கூறியதைப் போன்றதாகும்.

கார் காலம் என்றது, நமது உலகியல் வாழ்வை. கார் காலமானது மேகங்களால் மூடப்பட்டு, இருள் நிறைந்து, திசைகள் தோன்றப் பெறுமல் இருக்கும்; உலகியல் வாழ்க்கையும் அஞ்ஞானம் ஆகிய மேகத்திர ளாலே இருள்மூடி, நல்வழி தீயவழி தெரியப் பெறுமல் இருக்கும். கார் காலம் இடைவிடாத நீர்ப்பெருக்கை உடையதாக இருக்கும். உல கியல் வாழ்வும் இடையருத துக்கங்களாகிய நீர்த்தாரைகளைப் பொழிந்து கொண்டு நிற்கும். (7)

**காண்கின் றனகளும், கேட்கின்றன**
**களும், காணில் இந்நாள்**
**பாண்குன்ற நாடர் பயில்கின்றன;**
**இதெல்லாம் அறிந்தோம்;**
**மாண்குன்றம் ஏந்தி தண்மாமலை**
**வேங்கடத்து உம்பர்நம்பும்**
**சேண்குன்றம் சென்று பொருள்**
**படைப்பான் கற்ற திண்ணனவே !**

(பொழிப்புரை) மலைகளையுடைய நாட்டுக் குத் தலைவராகிய நம் காதலர் இந்நாளில் பயில் கின்றனவும், காண்கின்றனவும், கேட்கின்றன வும் ஆகியவற்றை ஆராய்ந்து நோக்கினல், அவை வெறும் வெளிற்றுரைகளேயாம். இவை களெல்லாம் மாட்சிமை மிக்க கோவர்த்தன மலையை எளிதாக எடுத்து ஏந்திய கண்ண பிரானது, குளிர்ந்த சிறந்த திருவேங்கடமலை யின், தேவர்கள் விரும்புகின்ற உயர்ந்த சிகரத் தைச் சென்றடைந்து, அங்குப் பொருளீட்டும் பொருட்டு, நம் காதலர் புதிதாகப் பயின்ற மனத்திட்பத்தின் செயல் என்று தெரிந்து கொண்டோம்.

(விளக்கவுரை) தலைவன் பொருள் வயிற் பிரிதலைக் குறிப்பால் அறிந்த தலைவி, தோழிக் குக் கூறுவதாக அமைந்த பாடல் இது. நாய கன் நாயகியைப் பிரிந்து பொருள் தேடுவதற் குச் செல்ல நினைக்கும் பொழுது, அந்த நினைவை வாய்விட்டுச் சொல்லாமல், மறுபடி யும் தான் திரும்பிவரும் அளவும், அவள் நினைத்து ஆறியிருக்கும் பொருட்டு அவளிடத் திற் சில பணிவான செய்கைகளைச் செய்வதும், சில நயமான சொற்களைச் சொல்லுவதும் வழக் கம். அவற்றைக் கண்ட தலைமகள் இவர் இத்தகைய செய்கைகளைச் செய்வதும், சொற் களைக் கூறுவதும், ஏதோ ஒரு கருத்துப் பற்றியே யாதல் வேண்டும். பொருள் தேடுதற் பொருட் டுப் பிரிவதற்குக் கருதியே, இவர் இங்ஙன மெல்லாம் செய்கின்ருர் போலும் என்று தலைவி உணர்கின்ருள். தன்னைப் பிரிவதற்குத்துணிந்து நின்ற தலைவனின் மனத்திண்மையைப் 'பொருள் படைப்பான் கற்ற திண்ணனவே' என்னும் தொட ரால் தலைவி புலப்படுத்தினுள். கல்நெஞ்சர் என்னும் குறிப்பு 'குன்ற நாடர்' என்னும் தொடரில் அமைந்துள்ளது,

ஆழ்வார் எம்பெருமானுடைய பிரிவை ஆற்ருது வருந்தியிருந்த நிலையில், தம்மை ஆற்றுவித்த அன்புடைய பாகவதர்கள், பின்பு பரம்பொருளைத்தேடிப்பெறும் பொருட்டுத்திவ் விய தேசயாத்திரையில் விருப்பம் உடையவ ராய்த் திருவேங்கடத்திற்குச் செல்லத் தொடங் கியதை அறிந்த ஆழ்வார், அவர்களின் பிரிவை ஆற்ருமையால் அருளிச் செய்த பாசுரம் இது என, இப்பாடலுக்கு உள்ளுறை பொருள் கொள்ளலாம். பாகவதரோடு கூடியிருக்கும் இருப்பொழிய, வேறு எம்பெருமான் உகந் தருளின திவ்விய தேசத்திற்குப் போக நினைப் பதும் தவறு என்று, பாகவதர்களுடைய உடனுறைவின் சிறப்பு, இப்பாட்டால் வெளி யிடப் பெற்றது. (8)

**திண்பூஞ் சுடர்நுதி நேமியஞ்**
**செல்வர் விண்ணாடு அனைய**
**வண்பூ மணிவல்லி, யாரே**
**பிரிபவர்தாம்? இவையோ**
**கண்பூங் கமலம் கருஞ்சுடர்**
**ஆடி, வெண்முத்து அரும்பி**
**வண்பூங் குவளை மடமான்**
**விழிக்கின்ற மாயிதழே**

(பொழிப்புரை) வலிய அழகிய ஒளியுள்ள, கூர்மை மிகுந்த திருஆழியையுடைய செல்வ ராகிய திருமாலின்; பரமபதத்தை ஒத்த அழகிய சிறந்த பூங்கொடி போன்றவளை, எவர் தான் பிரியவல்லவர்? ஒருவரும் பிரியவல்லர்

அல்லர். இவளது கண்கள், கண்களாக மாத்திரம் இருக்கின்றனவா? தாமரை மலர்களாய் அழகிய செங்கழுநீர் மலர்களுமாய், பெரிய இதழ்களை உடையவையுமாய்க் கரிய அஞ்சனத்தின் ஒளியை அணிந்து, நம்மைப் பிரிதல் ஆற்றாமையால் பெருகுகின்ற கண்ணீராகிய வெண்மையான முத்துக்கள் தோன்றப்பெற்று, மடப்பத்தை உடைய மான்போல நோக்குகின்றன.

*(விளக்கவுரை)* நாயகன், நாயகியை விட்டுப் பிரிய இயலாத தன்மையைக்கூறும் பாசுரம் இது. இப்பாடலில் **'வண்பூம் மணி வல்லி'** என்றது ஆழ்வாரை. ஆழியஞ் செல்வனை எம்பெருமானுடைய பரமபதம் போல அந்தமில் பேரின்பம் தருகின்றவராய், ஒரு கொழு கொம்பையே அவாவி நிற்கும் கொடி போலப் பாரதந்திரியமே வடிவாய் இருப்பவரான இவ்வாழ்வாரை, ஞானிகள் விட்டுப்பிரிய நினைவார்களோ? என்பது முன்னிரண்டு அடிகளின் பொருள். இவருடைய ஞானம் ஏனைய உலகத்தாருடைய ஞானம் போல்வதன்றி, மிக மேலான சிறப்பு வாய்ந்தது என்பதனை, **'இவையோ கண்?'** என்னும் வினா புலப்படுத்தியது. இவருடைய ஞானம் செந்தாமரை நிறத்தவளான பெரிய பிராட்டியையும், அஞ்சனவண்ணனான எம்பெருமானையும் இலட்சியமாகக் கொண்டு தன்மயமாய் உள்ளது என்பது, **'பூங்கமலம் கருஞ்சுடராடி'** என்பதனால் விளங்கிற்று. மற்றும் இவருடைய ஞானம் சுத்த சத்துவ குணமயமானது என்பதும், எம்பெருமானை அனுபவிப்பதால் ஆனந்தக் கண்ணீர் பெருகப் பெற்றது என்பதும்; **'வெண் முத்து அரும்பி'** என்னும் தொடரால் சுட்டப்பெற்றன. *(9)*

**மாயோன் வடதிரு வேங்கட**
**நாட வல்லிக் கொடிகாள்!**
**நோயோ உரைக்கிலும் கேட்கின்றிலீர்!**
**உரையீர்! நுமது**
**வாயோ அதுவன்றி வல்வினையேனும்**
**கிளியும் எள்கும்**
**ஆயோ அடும் தொண்டையோ**
**அறையோ இது அறிவரிதே**

*(பொழிப்புரை)* வியக்கத் தகுந்த குண நலன்களையுடைய எம்பெருமானது, வடதிருவேங்கடமலையை இடமாக உடைய பூங்கொடி போன்ற இளம் பெண்களே! என்னுடைய காதல் நோயை, நீங்கள் தாமாக அறியாததும் அன்றி, யான் சொன்னாலும் கேட்கின்றீர்கள் இல்லை. உங்களுடைய வாயின் அழகோ? அதுவல்லாமல் கொடிய தீவினையை உடைய யானும் கிளியும் தளரும்படியான உங்களது ஆயோ என்கின்ற சொல்லோ? கோவைக் கனிபோன்ற சிவந்த உங்களது அதரமோ? என்னை உயிர்க் கொலை செய்யா நிற்கும். இவற்றில் இன்னது என்னை வருத்தும் என்பது அறிய இயலாமல் இருக்கின்றது. நீங்களே சொல்லி அருளுங்கள்.

*(விளக்கவுரை)* இப்பாசுரம், **மதியுடம்படுத்தல்** உற்றதலைவன் குறையுற உரைத்தல். அஃதாவது நாயகியும், தோழியும் ஒன்று கூடிப் புனங் காத்திருக்கின்றசமயத்தில்,நாயகன் அவர்களின் அருகிற்சென்றுநின்று புதியவன் போலச் சில சொற்களைக் கூறித் தன்குறையை அறிவித்துத் தோழியின் கருத்தைத் தனது கருத்தோடு ஒருவழிப்படுமாறு செய்தல்.

**'வல்லிக் கொடிகாள்!'** என்று பன்மையாக விளித்ததனால் தோழியும், தலைவியும் சேர்ந்து கூடி இருக்கும் நிலையில், தலைவன் சொல்லும் பாசுரம் இது என்பது விளங்கும். கிளி முதலிய பறவைகள் வந்து தினைக்கதிர்களைக் கவராதபடி அவற்றை வெருட்டுவதாக ஆயல் இடுகிற சொல் **'ஆயோ'** என்பது. அதனால் இப்பாசுரம் தினைப்புனங் காக்கும் இருப்பில் சென்று சொல்லியதாதல் உணரலாம்.

**'கேட்கின்றிலீர்'** என்றதனால் வேறு பயன் கருதாது, கேட்பது ஒன்றை மட்டுமே, தான் பயனாகக் கருதியமை தோன்றும். கேளாதவர்களையே **'சொல்லீர்'** என்று வேண்டுவது, ஆசையின் மிகுதி இருந்த படியை உணர்த்துகின்றது.

ஆழ்வாரைப் பிரிய மாட்டாத அன்பரான பாகவதர், அவரது அவயவ விளக்கத்திலும், அருளிச் செயல் வாய்மொழிகளிலும் ஈடுபட்டுச் சொல்லுகின்ற வார்த்தை, இப்பாசுரம் என்பது உள்ளுறை பொருள். அற்புதனான எம்பெருமான் உலகமக்களின் நலம் கருதிப்பரமபதத்தை விட்டுத் திருமலையில் வந்து நிற்கின்ற நேர்மையை நாடுகின்றவரும், கொடி போலப் பாரதந்திரிய சொரூபத்தை உடையவருமான ஆழ்வாரே, உம்மிடத்து அன்பு மிகுதியால் நாங்கள் படும்பாட்டை விண்ணப்பம் செய்தாலும், நீர் உமது பரவசத்தால் கேட்கின்றீர் இல்லை. உம்முடைய திருமுக மண்டலத்தின் மலர்ச்சியோ? எம்பெருமானும் ஈடுபடும்படியான உமது சொற் போக்கோ? அச்சொற்களைக் கூறும் வாயிதழ்களோ? எஃது எம்மை நெகிழச் செய்யும்? இன்னதென்று பகுத்தறிதல் எமக்கியலவில்லை. நீர் தாமே அதனை நிச்சயித்துச் சொல்வீராக! என்று பாகவதர்கள் விண்ணப்பித்துக் கொள்வதாக இப்பாடல் அமைந்துள்ளது. (தொடரும்)

—ஆசிரியர்.

# கடவுளுணர்ச்சி

( ந. ரா. முருகவேள், M. A., M. O. L. )

## முன்னுரை :

உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவாகக் கடவுள் உணர்ச்சி யென்பது என்றுமே இருந்து வந்திருக்கின்றது. மனிதனுக் குரிய உணர்ச்சிக் கூறுகள் பலவற்றுள், கடவுள் பற்றிய உணர்ச்சிக் கூறும் இயல்பாகவே அமைந்து கிடக்கின்றது. நாகரிகம் எய்தப் பெறாத காட்டுமக்கள் முதல், நாகரிகத்துறையில் நனி சிறந்தமேன் மக்கள் ஈறாக, அனைவருக்குமே அவரவர்களின் நிலைக்கும் பண்பாட்டுக்கும் ஏற்பக் கடவுள் உணர்ச்சி அமைந்து விளங்கிவரக் காண்கின்றோம். மனித குலம் தோன்றிய காலம் முதல், இயல்பாகவே எல்லா நாடுகளிலும் எல்லா இனத்தினர்களிடையும், கடவுளுணர்ச் சியும் வழிபாடும் நிலவி வருகின்றன.

## சிதம்பர சுவாமிகள் :

இவ்வுலகில் உள்ள சூரியன் சந்திரன், பரந்த வானப் பெருவெளி, அங்கு ஒளிரும் எண்ணில்லாத விண்மீன்கள், கடல்கள், மேகங் கள், ஓங்கியுயர்ந்த மலைகள், நெருப்பும் காற் றும் போன்ற பூதங்கள், மற்றும் எத்தனையோ சரம் அசரம் என்னும் இயங்கியல் நிலையியற் பொருள்கள் என்பவற்றின்இயல்பை யெல்லாம் எண்ணிப் பார்த்தால், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்வு கட்டாயம் உண்டாகும். உலகப் படைப்பின் திறமும் இயற்கையும் எத் துணை வியக்கத் தக்கனவாக இருக்கின்றன. சூரியன் காலையிலும், சந்திரன் மாலையிலும், விண்மீன்கள் இரவிலும் தோன்றித் தத்தம் ஒழுங்குமுறைகள் தவறாமல் ஒளிவீசி உழன்று கொண்டுவருகின்றன. பரந்த பெருங் கடலின் நீரை முகந்து கொண்டு பல இடங்கட்கும் பர விச் சென்று மேகங்கள் மழைபொழிந்து பயிர் களை வாழ்விக்கின்றன. கடல் தன் எல்லையிற் கடந்து பொங்கி விடாமல், ஒரு வரம்புக்குள் அடங்கி நிற்கின்றது.

காலம் என்பது பகலும் இரவுமாக மாறி மாறி வருவதுடன், இளவேனில் முதுவேனில் கார்காலம் குளிர்காலம் முன்பனிக்காலம் பின் பனிக்காலம் எனப் பலவேறு பருவங்களாகவும் அமைந்து, அவ்வக்காலங்களுக்கு ஏற்ற மரம் செடி கொடி மூலிகை வகைகளை உண்டாக்கி வளர்த்தும், இயற்கை நிகழ்ச்சிகளைத் தோற்று வித்தும், காய்கனி பயிர் வகைகளை அளித்தும் உதவி புரிகின்றது.

பாம்பு முதலிய நச்சு உயிர்கள், மந்திரம் முதலியவற்றுக்குக் கட்டுப் பட்டு வசமாகின் றன. உயிர்க் கூட்டங்கள் தம்முடைய இன வளர்ச்சியுற்றுப் பெருகி, வழி வழியே தம் பண் புகள் மாறாமல் விளங்கி வருகின்றன. யானை முதல் எறும்பு ஈறாக உள்ள எண்ணில்லாத கோடிக்கணக்கான உயிரினங்கள் யாவும் ஆணும் பெண்ணுமாக அமைந்து கூடிக் கலந்து வாழ்ந்து பெருகி வருகின்றன. இங்ஙனமே செடி கொடி வகைகளில் ஒவ்வொன்றும் தமக்கென ஒவ்

வொரு தனித்தனி அமைப்பும் பண்பும் பயனும் பெற்றுத் திகழ்கின்றன.

மக்களில் சிலர் குருடு செவிடு ஊமை முடம் முதலிய குறைபாடுகள் உடையவர்களாக உள்ளனர். ஒரு சிலர் தீராப் பிணியாளரா யும், மற்றும் சிலர் காண்பதற்கே அருவருப்பை விளைவிக்கும் குரூபிகளாகவும் உள்ளனர். வேறு சிலர் பெருஞ் செல்வராக விளங்குகின்றனர். ஒரு சிலர் வறுமையிலேயே வாடி வதங்குகின் றனர். ஒரு சிலர் பேரறிஞர்களாக விளங்கு கின்றனர். மற்றும் சிலரோ அறியாமையிற் கிடந்து அழிகின்றனர். சிலர் நல்லொழுக்கம் தலை நிற்கின்றனர். பிறர் சிலரோ தீயொழுக் கமே பேணி வாழ்கின்றனர்.

நம் உடலில் ஒன்பது பெருந்துளைகளும் மற்றும் பல சிறு துளைகளும் உள்ளன. ஓட்டைக் குடத்திற்குள் அடங்கியுள்ள காற்றுப்போல, நம் உயிர் அதன்கண் ஒருவாறு தங்கி யிருக்கின் றது. நம்முடைய உடம்பில் ஓர் உறுப்புக்குறைந் தால் அதனை நாமே மீட்டும் படைத்துக்கொள்ள இயலவில்லை. ஒவ்வொரு உடம்பிலும் உயிரா கிய காற்று, தங்கி இயங்கி வருகின்றது. உயிர் களின் பிறப்பும் இறப்பும் அவற்றின் வசத்தி லில்லை. நாம் விரும்பும்போது இறக்கவோ, விரும்பாமல் இருக்கும்போது இறக்காமலிருக் கவோ இயலுவதில்லை. அங்ஙனமே நம் முன்பின் பிறவிகளும், நாம் இறந்தபின் இருக்கும் நிலை களும், மறை பொருளாகவும் வியப்பாகவும் உள்ளன.

நாம் நினைப்பது போலவோ, விரும்பி மகிழ் வது போலவோ எதுவும் நடப்பதில்லை. சில சமயங்களில் நாம் சிறிதும் எதிர்பாராத நன் மை தீமைகள் ஏற்படுதலைக் காணுகின்றோம். நம் வாழ்க்கையின் போக்கு நமக்கே விளங்குவ தில்லை. மகப்பேறு வேண்டுவோர்க்கு அது கிடையாமையும், வேண்டாதார்க்கு அது மிகுதி யாகக் கிடைத்தலும், ஆண் மகவு வேண்டு வோர்க்குப் பெண் மகவு பிறத்தலும், பெண் மகவு வேண்டுவோர்க்கு ஆண் மகவு உதித்தலும், சில சமயங்களில் இரண்டும் அல்லாத அலித்தன் மையில் குழந்தைகள் தோன்றுதலும் போன்ற, பலப்பல நிகழ்ச்சிகளைக் காண்கிறோம்.

உலகப் பொருள்களெல்லாம் சடம் சித்து என்று இருவகைப்படும். சடம் என்பது உயி ரில் பொருள். சித்து என்பது உயிருடைய பொருள். சடப் பொருள்கள் உயிரும் உணர் வும் உடையனவல்லவாதலின் தாமே இயங்க மாட்டா. சித்துப் பொருள்களோ உயிரும் உணர்வும் உடையனவாயினும், சிற்றறிவும் சிறு தொழிலும் உடையவை. தமக்கெனச் சுதந்திரமில்லாதவை. ஆதலால் இவையிரண் டிற்கும் வேறாக உள்ள, பேரறிவும் பேராற்ற லும் உடைய பரம்பொருளே, இவ்வுலகைப் படைத்து இயக்குவதாதல் வேண்டும். குடத் தைக் காணுங்கால் அதனை வனைந்த குயவன் ஒருவன் உண்டென உணர்வோம். நல்ல அணிக லன் ஒன்றைக் காண நேர்ந்தால், அதனைச் செய்த கம்மியன் ஒருவன் உளன் எனத் தெளி வோம். ஓர் அழகிய ஆடையைக் காண்பின் அதனை நெய்த நெசவாளன் ஒருவன் உண்டு எனக் கொள்வதில் நமக்கு ஐயம் ஏற்படுவ தில்லை. அவ்வாறே இவ்வுலகிற்கும் ஒருகட வுள் உண்டு என நாம் நிச்சயமாகவே நம்பலாம்.

இவ்வாறு 'திருப்போரூர்ச் சந்நிதி முறை' என்னும் சிறந்த துதிநூலைப் பாடியருளிய திரு வருட் பெருஞ்சான்றோர் ஆகிய சிதம்பர சுவாமி கள், தாம் இயற்றிய 'பஞ்சதிகார விளக்கம்' என்னும் தத்துவ நூலிற் பல பாடல்களினால் விளக்கியிருக்கின்றார்.

**காந்தியடிகள் :**

பரந்த உலகத்தை நோக்குயுணருந்தோறும் இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது அறிவிற்கு ஏற்றதேயாகும். அக்கட வுட் பொருளே நமக்குத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்து நம்முடைய நல்வினை தீவினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களை நல்கி, நம்மைக் காத்து ஆட்கொண்டு வருகிறது. இவ் வுண்மையை உணர்ந்து நம்பி வாழ்வதனால் நமக்கு நம் உலகியல் வாழ்வில் நன்மையே ஏற் படும் என்பது திண்ணம். ''நம்பினோர் கெடுவ தில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு'' என்பர் பாரதியார். நம்பிக்கையினால் விளையும் நலங் கள் பல.

''இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாத, முறையான ஏதோ ஒரு பேராற்றல்

எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கின்றது. அதனை நாம் காணுவிட்டாலும், உள்ளதென்று உணருகின்றோம். காணப்படாத இந்த ஆற்றல்தான், தன்னை நாம் உணர்ந்து கொள்ளும்படி புலப்படுத்துகின்றது. நாம் நம் புலன்களால் உணர்கின்ற உலகியற் பொருள்களைப் போல இல்லாமல், அவற்றிற்கு வேறுபட்டதாக அது விளங்குகின்றது. ஆதனுற்றுன் எந்தச் சான்றுகளும் காட்டி விளக்கி அதனை நாம் நிறுவ முடியவில்லை. அது நம் அறிவுக்கும் சான்றுகளுக்கும் அப்பாற்பட்டுக் கிடந்து நிற்கின்றது.

அப்பேராற்றலே கடவுள். கடவுட் பொருள் வெளிப்புறச் சான்றுகளால் அறியப்படுவதன்று. தமது உள்ளத்தினுள்ளே அதன் உண்மை இயல்பு விளங்குதலைக் கண்டு உணர்ந்ததனுல், புனிதமடைந்த ஞானிகள் அல்லது அருளாளர்களின் வாழ்க்கைப் பண்பினுலும் ஒழுக்கத்தினுலுமே, அதன் இருப்புப் புலனுகும்.

எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங் காலங்களிலும், வாழையடி வாழையாக இடையருமல் தொடர்ந்து தோன்றிவரும் மெய்யுணர்வாளர்கள் அல்லது முனிவர்களின் அனுபவங்களிலேயே கடவுளை விளக்கும் சான்றுகள் காணப்படும். அச்சான்றுகளை மறுதலிப்பது, ஒருவர் தன்னைத் தானே மறுதலித்துக் கொள்ளுதற்குச் சமமாகும்.

கடவுள் என்பது, காரண காரியங்களைக் காட்டி, மெய்ப்பிக்கப்படக் கூடியதன்று. வெறும் சொற்போர் புரிவதன் மூலம், கடவுளுண்மையை நிறுவும்படி நீங்கள் என்னைக் கேட்பீர்களேயாயின், நான் தோல்வி அடைதல் திண்ணம். ஆனுல் நான் உங்களுக்கு இதனை உறுதியாகக் கூறமுடியும். இந்த அறையில் நீங்களும் நானும் அமர்ந்திருக்கிறேம் என்பதை எவ்வளவு தெளிவாக யான் உணர்கின்றேனே, அதனைவிட மிகமிகத் தெளிவாகக் கடவுள் இருத்தலை யான் உணர்கின்றேன்.

காற்றில்லாமலும் நீரில்லாமலும் நான் வாழ்தல்கூடும். ஆனுல் கடவுளுணர்வின்றி என்னுல் வாழ்தல் இயலாது. நீங்கள் என் கண்களைப்பறிக்கலாம். என் மூக்கைத் துண்டிக்கலாம். அவற்ருல் என்னைக் கொல்ல முடியாது. ஆனுல், கடவுளிடம் யான் கொண்டுள்ள நம்பிக்கைகளைச் சிதறிப் போகச் செய்யுங்கள். அப்போதே யான் இறந்து படுவேன்'' எனக் காந்தியடிகள் கூறியிருத்தல், இங்குநாம் பெரிதும் கருதுதற்குரியது.

**கார்ல் கஸ்டாவ் ஜங் :**

''இருள் செறிந்த இந்த அணுயுகத்தில் உள்ளத்துக்குள்ளே மறைந்து கிடக்கின்ற ஒரு வகை அச்சத்துடன், மனிதன் தனக்கு வழி காட்டும் வான்பொருள் ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கின்றுன். உணர்ந்தோ அல்லது உணராமலோ, அவன் மீண்டும் ஒருமுறை கடவுளைத் தேடித் தடவிக் கொண்டிருக்கின்றுன். மக்கள் அதனைக் கடவுள் என்றே, அல்லது பேய் என்றே எவ்வகையிலாயினும் அழைத்துக் கொள்ளட்டும் ; அது ஒரு மேலான பேராற்றல் என்பதனை மட்டும் அவர்கள் உணர்தல் வேண்டும். அங்ஙனம் உணர்ந்து கொண்டு விடுவார்களாயின், அவர்கள் வழங்கும் பெயர்களைப் பற்றி யான் பொருட்படுத்தவில்லை.

கடவுள் என்பது, நம் வாழ்க்கையை ஊடுருவி நின்று இயக்கிவருகின்ற ஒரு பேராற்றலைத் தவிர வேறு பிறிதன்று. ஒவ்வொரு நாளும் நீங்கள் கடவுளை அனுபவித்து உணர முடியும். இதுவரையில்யான் என்வாழ்க்கையனுபவங்களிலும் நூல்களிலும் இருந்து கற்றுக் கொண்டிருப்பன அனைத்தும், கடவுள் ஒருவர் இருக்கின்ருர் என்பதில் அசையாத ஒரு பெரும் நம்பிக்கையைக் கொள்வதற்குப் படிப்படியே—முறை முறையே—என்னை அழைத்துச் செல்வனவாய் வழிகாட்டியுதவி புரிந்துள்ளன. நான் அறிந்திருப்பனவற்றில் மட்டுமே யான் நம்பிக்கை கொள்கின்றேன் ; ஆதலின் நம்பிக்கை கொள்ளுதலை, அது புறக்கணிக்கின்றது. ஆகவே 'ஒரு கால் இருந்தாலும் இருக்கலாம்' என்ற முறையில், வழிவழியாக வருகின்ற நம்பிக்கையின் அடிப்படையில், யான் கடவுளின் இருப்பைக் கொள்கின்றேன் இல்லை. கடவுள் இருக்கின்ருர் என்பதை, யான் மிகத்தெளிவாக உணர்கின்றேன்'' *(1)* என்று உலகப் புகழ்பெற்ற **கார்ல் கஸ்டாவ் ஜங்** என்னும் அமெரிக்க நாட்டின் அறிவியற் பேராசிரியர், தாம் அளித்த நேர்முக உரையாடல் ஒன்றில், பேரறிஞர் **பிரெடரிக்**

சாண்ட்ஸ் என்பவர்க்கு அளித்த ஆழ்ந்த சிந்தனை யுரையிற் குறிப்பிட்டிருப்பது, இங்கு நாம் பெரிதும் எண்ணியுணர்தற்கு உரியது.

## முடிவுரை :

தெய்வம் உண்டு எனத் தெளிந்து ஒழுகுதல், நம் மனித வாழ்க்கை சிறப்புறுதற்குப் பல்லாற்றானும், துணை புரியும். சமய உணர்வும் தெய்வ நம்பிக்கையும், சிறந்துயர்ந்த பண்பு நலங்கள் பலப்பல வெளிப்பட்டு மேலோங்கித் திகழ்தற்குக் காரணமாக அமைகின்றன, எனத் துணிந்து கூறலாம் *(2)*.

சமய வுணர்வில்லாத ஒருவன் வேறு பிற துறைகளில் எவ்வளவுதான் சீரும் சிறப்புமுற்று விளங்கினாலும், சமயவுணர்வும் தெய்வநம்பிக்கையும் உடைய ஒருவன் முன்னிலையில் சிறிது தாழ்ந்தே நிற்பான். முன்னையவனிடம் இல்லாத ஏதோ ஒரு சிறந்த தனிப் பெருஞ்சிறப்பு, பின்னையவனிடம் அமைந்திருக்கக் காணலாம் *(3)*.

எனவே, நாம் அனைவரும் இத்தகைய தெய்வ நம்பிக்கையுணர்வு மிக்கவர்களாய் விளங்கி, வையத்து வாழ்வாங்கு நலமுற வாழ முற்படுவோமாக !

—ஆசிரியர்.

---

(1) " In this dark atomic age, with a lurking fear, man is seeking guidance. Consciously or unconsciously he is once more groping for God. They can call it God or Devil, and that. does not matter to me, as long as they realise that it is a superior force. God is nothing more than that superior force in our life. You can experience God every day.

All that I have learnt has led me step by step to an unshakable conviction of the existence of God. I only believe in what, I know, and that eliminates believing. Therefore I do not take His existence on belief—I know He exists."

—Prof. C. G. JUNG.
In an Interview with
Dr. Frederick Sands.

(2) " The highest flights of charity, devotion, trust, patience, bravery ete., to which the wings of human nature have spread have been for religious ideals."

—Prof. WILLIAM JAMES,

(3) " When one compares the deeply religious and spiritual person with the best and bravest of those who are not religious one sees, it must be confessed, that the former possesses something which others lack."

—Prof. J. B. PRATT

# விசிஷ்டாத்வைத சாரம்

[ மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம். ]

உலகில் பல பல மதங்கள் தோன்றியிருந்தாலும், அவை வைதிக மதம் என்றும், அவைதிக மதம் என்றும் பொதுவாக இருவகுப்பாகும். வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளும் மதம் வைதிகமதம். வேதத்தைப் புறக்கணித்துச் சுவதந்திரமாகத் தோன்றிய மதம், அவைதிக மதம். அவைதிக மதங்களிற் காட்டிலும் வைதிக மதம் சிறந்ததென்னும் இடத்தை நாம் விவரிக்க வேணுமோ? வைதிக மதங்களுள், பரமபவித்திரமான விசிஷ்டாத்வைத தரிசனம், மிகச் சிறந்து விளங்குகின்றது. நம்மாழ்வார் திருவாய்மொழி தொடங்கும்போது ''உளன் சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே'' என்கிற பாசுரத்தினுல் 'தாம் போதிக்கும் பரம புருஷன் வேதங்களிலும் வேதாந்தங்களிலும் விளங்குபவன்' என்றருளிச் செய்கையாலே இக்கலியுகத்தில் அவ்வாழ்வார் தொடக்கமாகப் பரவியுள்ள விசிஷ்டாத்வைத சம்பிரதாயம் பரம வைதிகம் என்னத் தட்டில்லை. பிரமாணம், பிரமாதா, பிரமேயம் என்ற மூன்று வகுப்புகளும் நம் தரிசனத்தில் சீர்மைபெற்று விளங்குவன.

''ஆழ்வார்கள் வாழி, அருளிச்செயல் வாழி, தாழ்வாதுமில் குரவர்தாம் வாழி—ஏழ் பாருமுய்ய அவர்களுரைத்தவைகள் தாம்வாழி செய்யமறை தன்னுடனே சேர்ந்து'' என்னும் உபதேசரத்தினமாலைப் பாசுரத்தில், பிரமாணங்களும் பிரமாதாக்களும் சாரமாகத் தெரிவிக்கப்பட்டார்கள். சமஸ்கிருத திராவிட வேதங்களாகிய உபய வேதங்களும், ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயாதிகளும் நமக்குப் பிரமாணம். யதார்த்த ஞான நிதிகளான ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானுர் போல்வாரான மகாசாரியர்களே பிரமாதாக்கள். ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவம் என்றும், அவனுடைய திருவடித் தாமரைகளே தஞ்சமென்றிருக்கை பரமஹிதம் என்றும், நலமந்தமில்லதோர் நாட்டிலே நித்யாநந்தமயமான நித்ய கைங்கர்யமே பரம புருஷார்த்தம் என்றும், இங்ஙனே கூறப்படும் அர்த்த விசேஷங்களே பிரமேய சிரேஷ்டங்களாக விளங்குகின்றன.

பரமவைதிகர்கள் என்கிற ஏற்றம் நமக்கே உரியது. பிரத்தியட்சத்தாலோ அனுமானத்தாலோ அறிந்து கொள்ள முடியாத, அர்த்த விசேஷங்களை அறிவிக்கும் வாங்மயமே வேதம் எனப்படும். வேதத்தைப் பிரமாணமாக இசையாத சார்வாக ஜைன பௌத்தாதிகள் பாஹ்யர்கள் எனப்படுவர். வேதத்தைப் பரமப்பிரமாணமாக இசைந்து வைத்தும், பரப்பிரம்மம் குணசூந்யம் என்றும், அலக்ஷ்மீகம் என்றும், அசரீரம் என்றும், விபூதி விரஹிதம் என்றும், இங்ஙனே மனம்போனபடி எல்லாம் பேசுபவர்கள் குத்ருஷ்டிகள் எனப்படுவர். குத்ருஷ்டிகளானுலும் வேதத்தைப் பிரமாணமாக இசையுமவர்கள் வேதபாஹ்யர்களிற் காட்டிலும் மேம்பட்டவர்களன்ரே என்று சிலர் நினைக்கக்கூடும். பாஹ்யர்களோடு அவர்களோடு ஒருவாசியில்லை என்றருளிச் செய்கிறுர் கூரத்தாழ்வான்.

வேதம் கர்மகாண்டம் என்றும், பிரம்ம காண்டம் என்றும் இருவகுப்பாகவுள்ளது.

பூர்வபாகம் கர்மகாண்டம் என்றும், உத்தர பாகம் பிரம்மகாண்டம் என்றும் வழங்கப்படும். உபநிஷத்துக்களையே பிரம்மகாண்டம் என்பது. பகவானுக்கு ஆராதன ரூபங்களான யக்ஞம் முதலிய கரும விசேஷங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் கர்மகாண்டம் என்றும், அக்கருமங் களினல் ஆராதிக்கப்படுகின்ற பகவானுடைய சுவரூப ரூபகுணங்களை விரிவாகக் கூறும் வேத பாகம் பிரம்ம காண்டம் என்றும் சொல்லிற்று யிற்று. இதுவே உபநிஷத் என்கிற பெயராலும் வழங்கும். ''வேதைச் சர்வை ரஹமேவ வேத்ய.'' என்கிற கீதையின்படி, கர்மகாண்ட முங்கூடப் பகவானைப் பிரதிபாதிக்க வல்லதே யாயினும், அந்தப் பிரதிபாதனம் வ்யவஹித மாயிருக்கும். உபநிஷத்து அவ்யவதாநேந பிரதிபாதக மாயிருக்கும்.

கர்மகாண்டத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிகரிப்பதற்காக சைமிநி என்னும் மகரிஷி யெழுந்து பதினறு அத்யாயங்களோடு கூடிய ஒரு சாத்திரத்தை இயற்றினர். அதற்குப் பூர்வமீமாம்சை என்று பெயர். இதில் பன்னி ரண்டு அத்யாயங்களே சைமினி மகரிஷியால் இயற்றப்பட்டவை என்றும் ஒரு பட்சமுண்டு. இதைப்பற்றி இங்கு விசாரவிரிவு வேண்டா. பிரம்மகாண்டம் என்னும் உபநிஷத் பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிகரிப்பதற்காக வியாச மகரிஷி எழுந்து நான்கு அத்யாயங்கள் கொண்ட ஒரு சாத்திரத்தை இயற்றினர். அதற்கே சாரீரகமீமாம்சை என்று பெயர். உத்தரமீம்மாம்சை என்றும் வழங்குவர்.. பிரம்ம சூத்திரம். என்பது இதனையே. ஒவ்வோர் அத்தியாயத்திலும் நான்கு பாதங் களுள்ளன. ஆகவே பதினறு பாதங்கள் கொண் டது, சாரீரகமீமாம்சை என்றதாயிற்று. இதில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றிச்சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணம் என்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அதிகரணங்கள் இந்த மீமாம்சையில் (156) நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங் களில் ஒரே சூத்திரம் இருக்கும். பல அதிகர ணங்களில் பல சூத்திரங்களிருக்கும். மொத்தம் சூத்திரங்களின் இலக்கம் (545) ஐந்நூற்று நாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக் கின்றது. ஆக, நான்கு அத்யாயங்களையும், பதி ஞறு பாதங்களையும், நூற்றைம்பத்தாறு அதி கரணங்களையும், ஐந்நூற்று நாற்பத்தைந்து சூத்திரங்களையும் கொண்டது பிரம்ம சூத்திர சாத்திரம் என்றதாயிற்று.

தத்வஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்துகொள்வதற்கு உபநிஷத்துக்களே தஞ்ச மாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள் களை சம்சயவிபர்யயமற நிஷ்கர்ஷித்து விளக்கக் கூடியது இந்தப் பிரம்ம சூத்திர சாத்திரமே ஆதலால், வேதாந்திகளுக்கு இதுவே புகலா யிற்று. இந்த சாத்திரத்தின் பொருளை நிஷ் கர்ஷ மாகவும்; நிஷ்கல்மஷ மாகவும் தெரிந்து கொண்டவர்களே வேதாந்திகளென்றும், பிரம்ம ஞானிகள் என்றும் சொல்லத் தகுதி யுடையார். மகரிஷிகளியற்றிய சூத்திரங்களின் பொருளை நம் போல்வார் சிறிதும் அறியகில் லார்களாதலால், நம்போன்ற அல்ப மதி களிடத்தில் பரமகருணை கொண்ட பூருவர்கள் அந்த சூத்திரங்களின் அர்த்தத்தை விளக்கப் பாஷ்யங்கள் இயற்றியுள்ளார்கள். துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என மூன்று மதங்கள் உலகப் பிரசித்தமாக வழங்குபவை. இம் மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித் துள்ளன. அத்வைத மதத்திற்காகச் சங்கரா சாரிய சுவாமிகள் பாஷ்யமியற்றினர். அத்வைத மதத்திற்காக ஆனந்ததீர்த்த சுவாமி கள் (மத்வாசார்) பாஷ்யம் இயற்றினர். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காகப் பகவத் இராமாநுஜாசார்யர் என்கிற சுவாமி எம்பெரு மானர் ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்தார்.

உபநிஷத்துக்களின் உண்மைப் பொருளைச் சூத்திரகாரருடைய உள்ளத்திற்கு ஒத்ததாக நிஷ்பக்ஷபாதமாய் நிருமிக்கப்பட்டது ஸ்ரீபாஷ் யமே என்று மேனட்டுப் புலவர்களும் மெச்சியுள் ளார்கள். அது நிற்க. சுவாமி ஸ்ரீபாஷ்யமருளிச் செய்யத் தொடங்கும் போதே ''பகவத் போதாயநக்ருதாம் விஸ்தீர்ணும் ப்ரஹ்மஸூத் ரவ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு: தந்ம தாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ் யந்தே'' என்று முன்னேர் மொழிந்த முறை தப்பாமே வியாக்கியானிப்பதாக ; அருளிச் செய்து இருப்பதனல் ஸ்ரீபாஷ்யத்தின் பிரா மாணிகத்வம் விளங்குகின்றது. ஆர்ஷவ் யாக்ய்ாந கவசிதமாயும் அதிப்ராசீநமாயும்

பரமபவித்திரமாயு முள்ளது விசிஷ்டாத் வைதமே என்றும், அதை நிலைநாட்டவல்ல பாஷ்யம் ஸ்ரீபாஷ்யமே என்றும், பிராமாணிக வைதிகோத்தமர்களின் கொள்கை.

விசிஷ்டாத்வைத சித்தாந்தம் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் விவரிக்கப் படுகிறது, சித்தாந்தம் என்பதற்குப் பிராமாணிகமாகப் பரிக்கிரகிக்கப்பட்ட அர்த்தமென்று தேர்ந்த பொருள். துவைதமென்பது பேதம், இரண்டாயிருக்கும் தன்மை (துவிதா) எனப்படும். துவைதம் என்ருலும் அதுவே பொருள், பேதம் என்றதாயிற்று. அத்தோடு நஞ் சேர்ந்தால் அத்வைதம் என்ருகிறது. அபேதமென்று பொருள். விசிஷ்டஸ்ய அத்வைதம்—விசிஷ்டாத்வைதம். சமஸ்த சேதநா சேதந வஸ்துக்களோடு கூடின பிரம்மம் ஒன்று என்று அங்கிகரிக்கப் படுவதால், இந்த தரிசனம் விசிஷ்டாத்வைதம் எனப்படுகிறது. சித்தும் அசித்துமாகிய இரண்டுதத்துவங்கள் உண்மையில் கிடையாதென்றும், பிரம்மம்ஒன்றே உள்ளதென்றும் கொள்ளுகின்ற பிறருடைய மதத்தைத் தள்ளி, மூன்று தத்துவங்களும் உண்மையாகவுள்ளனவென்று கொள்ளுவதே, இந்த தரிசனத்தில் சாரமானது.

சுருதி வாக்யங்களை உற்றுநோக்கினல் அவற்றில் இருவகையான பாகுபாடு காணப்படும். (1) பேதத்தையே காட்டும் சில வாக்கியங்கள். (2) அபேதத்தையே காட்டும் சில வாக்கியங்கள். ''க்ஷரம் பிரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:'' என்பது முதலான சுருதி வாக்கியங்கள் சேதந அசேதந—ஈச்வரரூப தத்துவத் திரயத்தின் உண்மையைத் தெரிவிக்கும் முகத்தால் பேதத்தைக் காட்டுகின்றன.

''நேஹ நாநாஸ்தி கிஞ்சந'' ''ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம''

''தத் த்வமஸி'' இத்யாதிகளான சுருதி வாக்கியங்கள் பலவகைப்பட்ட வஸ்துக்கள்இல்லாமையைத் தெரிவிக்கும் முகத்தால், அபேதத்தைக் காட்டுகின்றன.

ஆக, சுருதிகளில் சில இடத்துப் பேதப் பிரதிபாதனமும், சிலவிடத்து அபேதப் பிரதிபாதனமும் இருப்பதாகத் தேறுகையாலே, பரஸ்பர விரோதம் தெளிவாகிறது. விருத்தமான அர்த்தத்தைத் தெரிவிக்கையாகிற அவத்யம் சுருதிகளில் இடம் பெறத்தகாது. விரோதமோ உள்ளதென்று காட்டியாயிற்று. விரோதத்தைப் போக்கிச் சமந்வயம் காட்டவேண்டிய பொறுப்பு விமர்சகுசலர்களான வைதிகர்களுக்குள்ளது. பிரம்மம் ஒன்று தான் சத்யமென்று கொள்ளுகிற அத்வைதிகள், அபேதத்தைக் காட்டும் சுருதி வாக்கியங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்கிரகித்து, பேதத்தைக் காட்டும் சுருதிவாக்கியங்களை உபேக்ஷித்து விட்டார்கள். துவைதிகளோ வெள்ளில் பேதத்தைக் காட்டும் சுருதி வாக்கியங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்கிரகித்து அபேதத்தைக் காட்டும் சுருதி வாக்கியங்களை உபேக்ஷித்து விட்டார்கள்.

''யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம், ய ஆத்மநி திஷ்டந்'' இத்யாதி வாக்யங்கள் பகவான் பிருதிவி முதல் ஆத்மா வரையிலும் உள்ள சகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியாய் இருக்கிருர் என்பதைப் பிரதிபாதிக்கின்றன; இவற்றைத் துவைதிகளும் அத்வைதிகளுமான இருவகுப்பினரும் அறவே விட்டிட்டார்கள். சுபாலோபநிஷத்து முதலான அந்தர்யாமி பிராஹ்மண வாக்கியங்களுக்கு உபய மதத்திலும் ஆதரவு கிடையாது என்பது ஸ்பஷ்டம். ஆக துவைதாத்வைத மதங்கள் இரண்டாலும் அநேக சுருதி வாக்கியங்களை அமுக்ய்யார்த்தங்களாகக் கொள்ளுதல் உபேக்ஷித்தல் இத்யாதியான பலீயஸ்ஸான தோஷமுள்ளது. இத்தகைய தோஷம் சிறிதும் காணப்பெருதது நமது மதமென்னுமிடம் அடுத்தபடியாக விவரிக்கப்படும்.

கீழே எடுத்துக் காட்டிய மூன்று வகுப்பான சுருதி வாக்கியங்களையும், ஒரு நிகராக ஆதரிப்பவர்கள் விசிஷ்டாத் வைதிகளேயாவர். ஒரு சுருதி வாக்கியத்திலும் அமுக்கியார்த்த கல்பனை என்பது கிடையாது. எங்ஙனம் என்னில், கடைசியாக எடுத்துக் காட்டப்பட்ட 'யஸ்யாத்மா சரீரம்'' இத்யாதிகளான சுருதி வாக்கியங்களுக்குக் கடக சுருதிகளென்று பெயர். பேதத்தையும் அபேதத்தையும் விரோத லேசமுமின்றிக்கே பொருந்தச் செய்ய வல்லவை அந்தர்யாமி பிராஹ்மண வாக்கியுங்கள்—என்கிற காரணத்

னில் இவற்றிற்குக் கடக சுருதிகளென்னும் பெயர் மிகப் பொருத்தம்.

''நேஹ நாநாஸ்தி கிஞ்சத'' இத்யாதிகளான அத்வைத (அபேத) சுருதிகளினாலேற்பட்ட அபேதத்தையும் ''க்ஷரம் பிரதாநமம் ருதாக்ஷரம் ஹர:'' இத்தியாதிகளான துவைத (பேத) சுருதிகளினாலேற்பட்ட பேதத்தையும் பொருந்தவிடும் வழி கேண்மின், சேதநாசேதந ஈச்வரர்களான மூன்று தத்துவப் பொருள்களில் சுவரூப பேதம் உண்மையாதலால் 'க்ஷரம் பிரதாநம் இத்யாதி பேத சுருதியானது பேதத்தைச் சொல்லி இருப்பது பாங்கே. பிரம்மம் சேதநாசேதந விசிஷ்டமாய்க் கொண்டு ஒன்றேயாகிற படியால் ''சர்வம் கல்விதம் பிரம்மம்'' இத்யாதியான அபேத சுருதிகளும் பொருந்தக் குறையில்லை. ''யஸ்யாத்மா சரீரமித்யாதி அந்தர்யாமி பிராஹ்மண சுருதிகளானவை சர்வேச்வரனை சர்வாந்தர்யாமி என்று தெரிவிக்கும் முகத்தால், பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகின்றன என்பது, நம் ஆசாரியர்களின் நிரூபணம்.

சிதசிதீச்வரர்களாகிற மூன்று தத்துவங்களிலும் தனிப்படக் கண் செலுத்தினால், பேதம் கிரகிக்கப் படுகிறது; அசேதனமாகிய சரீரம் வேறு; அதனுள்ளுறையும் சேதநன் வேறு; அவனுக்கும் அந்தர்யாமியான பரமாத்மா வேறு என்று, பேத பிரதிபத்தி சாத்திர சம்மதமேயாகும். பல அவயவங்களின் கூட்டரவான சரீரத்திலே கை, கால், காது, மூக்கு முதலானவற்றைத் தனியே பார்க்குமிடத்துப் பேத பிரதிபத்தியும் ''அவயவசங்காதம் ஒன்று'' என்று பார்க்குமிடத்து அபேத பிரதிபத்தியும் பொருந்துகின்றது. தேவதத்தன் ஒருவன், யக்ஞதத்தன் ஒருவன், இத்யாதி விவகாரங்களில் தேவதத்தனுக்கும் யஜ்ஞதத்தனுக்கும் ஒருமை எங்ஙனம்? என்று விமர்சிக்கவேணும். ''தேவதத்த: க்ருச:. யஜ்ஞதத்த: ஸ்தூல:'' இத்யாதி விவகாரங்களில் கிருசத்வமும் ஸ்தூலத்வமும் சரீர தர்மமாகையாலே, தேவதத்தயஜ்ஞதத்த சப்தங்கள் சரீர பரங்களே என்று அறுதியிடப்படுகிறது. 'தேவதத்தோ மேதாவீ யஞ்ஞதத்த: ப்ரதிபாவாந் இத்யாதி, விவகாரங்களில் மேதையும் பிரதிபையும் ஆத்ம தர்மமாகையாலே அந்த தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்களே ஆத்ம பரங்களென்றும் நிர்ணயிக்கப்படுகிறது. ஆத்மாவும் சரீரமும் ஒன்றல்ல. வெவ்வேறு பட்டவை. ஆக அநேக வஸ்துக்களிருக்கச் செய்தேயும் ஏகத்வ விவகாரம் நிகழ்ந்து வருவது 'சரீர விசிஷ்டனான சரீரி ஒருவன்' என்னும் அபிஸந்தியால் அத்தனை.

இவ்வண்ணமாகவே 'ப்ரஹ்ம ஏகமேவ' என்ற சுருதியும் விசிஷ்டைக்யத்தைச் சொல்லுவதாகக் கொள்ளக் குறையில்லையே. ஏவஞ்ச பேதத்திற்கும், அபேதத்திற்கும் அபாயமொன்றுமில்லை என்றதாயிற்று. சரீரங்களும் சரீரிகளுமாகிற நாநாவஸ்து ஸத்பாவம் பிராமாணிகமாகையாலே அபலபிக்க வொண்ணாததே. இங்ஙனே விசிஷ்டைக்யமும் அநுபவசித்தமாகையாலே அபலபிக்க வொண்ணாததே; ஆக உண்மையில் வெவ்வேறுபட்ட வஸ்துக்களும் சரீர சரீரி பாவ நிபந்தனமாகவே ஒன்றாக வழங்கப்படுவதாய் சித்திக்கையாலே, அப்படிப்பட்ட சரீர சரீரி பாவத்தை உனர்த்துகின்ற அந்தர்யாமி பிராஹ்மணாதி ரூபங்களான சுருதி வாக்கியங்களுக்கு நமது மதத்தில் மிகுந்த கௌரவமுள்ளது. அத்வைதிகள் பேதச் சுருதிகளை அநாதரிப்பது போலவும், துவைதிகள் அபேத சுருதிகளை அநாதரிப்பது போலவும், நாம் ஒரு வகையான சுருதியிலும் அநாதரம் காட்டுகின்றிலோம். ஆகவே சர்வ சுருதி சாமரஸ்யம் நமக்கே ஒழியப் பிறர்க்கில்லை என்பது, தேறி நின்றது.

மதாந்தரஸ்தர்கள் ஒப்புக்கொள்ளாத பல அர்த்தங்களை நாம் ஒப்புக் கொண்டிருக்கின்றோம். நித்யசூரிசத்பாவம், எம்பெருமானுடைய கல்யாண குணாச்ரயத்வம், திவ்யமங்கள விக்கிரக விசிஷ்டத்வம் முதலானவை அவை. இவற்றை யெல்லாம் விட்டு சரீர சரீரிபாவத்தையே கொண்டு விசிஷ்டாத்வைத மென்று பெயரிடுவதில் என்ன விசேஷ மென்னில், கேண்மின். சித்தாந்தத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கின்ற அர்த்த விசேஷங்களுள் ஜகச்சரீரகத்வம் என்பதே பிரதாநமானது. ஆனது பற்றியேயாம் இது பிரதாந மென்பது எங்ஙனமென்னில், சர்வ சுருதிகளினுடையவும் முக்கியமான அர்த்தத்தைத் தெரிவிப்பதாய், சர்வ சுருதிகளுக்கும் சாமரஸ்யத்தை

நிர்வகித்து, வாதி விஜய பிரயோஜக மாயிருப்பதனுலே இதற்கு பிராதாந்ய மென்று உணர்க.

இந்த சரீராத்ம பாவத்தைத் தெரிந்து கொள்ளாமையினுலன்றே, பிறமதத்தவர்கள் சர்வ சுருதி சாமரஸ்யத்தை நிர்வகிக்க மாட்டாமல் தளருகின்ருர்கள் குத்ருஷ்டிகளின் குசோத்யங்களை அவலீலையாகப் பரிகரித்துத் தருவது இந்த சரீராத்மபாவமே என்க. இங்கு ''யத்யேதம் யதி சார்வ பௌமகதிதம்'' இத்யாதியான வேதாந்தாசார்ய ச்லோக ரத்நத்தைத் திடமாகக் கொள்க. இந்த பிரதாந பிரதிதந்திரார்த்தத்தை நன்கு தெரிந்துகொண்டவொரு வியக்தி நிற்குமிடத்தில், விமதர்கள் எத்தனை பேர்கள் கூடி எவ்வளவு வாத கோலாஹலங்களைச் செய்தாலும், அவர்களுக்குப் பங்கமே தவிர வேறில்லை என்பது இதன் கருத்து.


சாரீரக மீமாம்சா சாஸ்திரத்திற்கு நாராயண பாரம்யப் பிரதிபாதனத்தில் தான் முழு நோக்கென்னுமிடமும் முக்கியமாக அறியத் தக்கது. ஜகத்காரண வஸ்துவாதிகளான வேதாந்த வாக்கியங்களெல்லாம் ஸ்ரீமத் நாராயணனிடத்திலே தான் பர்யவசிக்கின்றனஎன்று சூத்திரகாரர் தாமே சித்தாந்தம் செய்திருக்கிருரென்பதை நன்கு உணரலாம். ''அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா'' என்று ப்ரஹ்ம விசாரத்தைப் பிரஸ்தாவித்து ''ஜந்மாத்யஸ்ய யத:,' என்கிற அடுத்த சூத்திரத்தினுலே, 'எந்த வஸ்துவினிடத்தில் நின்றும் ஜகஜ் ஜந்ம ஸ்திதி லயங்கள் ஆகின்றனவோ அது பிரஹ்மம்' என்று ப்ரஹ்ம லக்ஷணம் காட்டினுர் வியாசர். வேதாந்தங்களில் ஜகத்காரண வஸ்துவைத் தெரிவிக்கின்ற வாக்கியங்கள் ஒரே விதமாக இல்லை. பரஸ்பர விருத்தங்கள் போல் தோன்ற நின்றன என்பது பிரசித்தமான விஷயம். ஏதோ ஒரு வஸ்துதான் ஜகத்காரணமாக இருக்கமுடியுமே ஒழிய, பல வஸ்துக்கள் அப்படியிருக்க முடியாது. பரஸ்பர விருத்தங்கள்போல் தோன்ற நின்ற காரண வாக்கியங்களாலே, இந்த நிச்சயம் எப்படி உண்டாகுமென்று தோன்றக் கூடிய சங்கையைச் சூத்திரகாரர் பரிகரித்தேயிருக்கிருர்.

சூத்திரங்களின் பொருளை நிர்வகிப்பதற்கு உபநிஷத்துக்களிலிருந்து விஷய வாக்கியங்கள் கொள்ளப்படுகின்றன என்பது, யாவருமறிந்ததே. அந்த விஷய வாக்கியங்களிலெல்லாம் சொல்லப்படுகிற தன்மைகள் ஸ்ரீமந் நாராயணனுக்கே அசாதாரணங்க ளென்பது சுருதி புராணுதிகளில் பிரசித்தம், என்கிற இதனை முக்கியமாகக் குறிக்கொள்க. ஆனந்தமயத்வம், ஆதித்ய மண்டலத்தினுள்ளிருத்தல், புண்டரீகாக்ஷத்வம், அபஹதபாப்மத்வம், மோக்ஷார்த்த உபாசன விஷயத்வம், அக்னி இந்திரன் முதலிய சர்வ தேவதைகளுக்கும் அந்தர்யாமியாக இருத்தல், இத்யாதிகளான தரும விசேஷங்களுக்கு இருப்பிடமான வஸ்துவே ஜகத்காரணமாகக் கூடியதென்று நிஷ்கர்ஷிக்கின்ற சூத்திரகாரருடைய உள்ளத்தில், ஸ்ரீமந்நாராயணனே உறைந்திருக்கின்ருன் என்பது பிராமாணிகர்களுக்கு அறிவரிதன்று. இனி, ஆதிசங்கராசாரியர் நாராயண பாரம்யத்தையே ஸ்தாபித்தன ரென்பது நிரூபிக்கப்படுகிறது.

பகவத்பாதர் இயற்றிய விஷ்ணு சஹஸ்ர நாம பாஷ்யத்தில் தேவதாந்தரங்களுக்கு அபரத்வத்தை நிலைநாட்டி ஸ்ரீமந்நாராயணனுக்குப் பரத்வம் ஸ்தாபித்திருப்பது நன்கு விளங்கா நின்றது. பாஞ்சராத்ராகமப் பிராமாண்யாதிகரணத்தில், ''உத்பத்த்ய ஸம்பவாத்'' என்கிற சூத்திர பாஷ்யத்தில் ''தத்ர பாகவதா மந்யந்தே'' என்று தொடாங்கி பாஞ்சராத்ராகமப் பிரமேயங்களான விஷயங்கள் மூன்றென்று சங்க்ரஹித்து, அவற்றுள் இரண்டு விஷயங்களில் தம்முடைய சம்மதியைக் காட்டி, மூன்ருவதான ஒரு விஷயத்தில் மட்டும் வைமத்யம் காட்டி யுள்ளார் பகவத்பாதர். தமக்கு சம்மதமாகக் காட்டின இரண்டு விஷயங்கள் இவை; (இங்கு அவருடைய பங்க்திகளையே உதாஹரிப்போம்) ''தத்ர யத்தாவதுச்யதே யோஸௌ நாராயண: பிரசித்த: பரமாத்மா சர்வாத்மா இதி தத் ந நிராக்கிரியதே. யதபி தஸ்ய பகவத அபிகமநாதிலக்ஷணமாராதநம் அஜஸ்ர மந்நயசித்ததயா அபிப்ரேயதே: தத்பி ந ப்ரதிஷித்யதே; சுருதி ஸ்ம்ருத்யோ ரீச்வரப் ரணிதாநஸ்ய ப்ரஸித்தத்வாத்'' என்பன அவருடைய பாஷ்ய பங்க்திகள், இவற்ருல் ஸ்ரீமந் நாராயணனுக்கே பாரம்ய பிரதிஷ்டாபநத்தில் பகவத் பாதர் ஊக்க முடையவரென்பது மறக்

கத் தக்கதன்று. ஈச்வராதி சாமாந்ய சப்தங்களுள்ளஇடங்களில் வாஸுதேவ நாராயணுதி விசேஷ சப்தங்களையிட்டு வியாக்கியானம் செய்யத் தொடங்கினவரும் பகவத் பாதரே யாவர்.

பரப்ரஹ்மம் நிர்க்குணம் என்பது பிறருடைய வாதம். ஹேய குணமில்லாமையைத் தெரிவிக்க வேண்டி உபநிஷத்து சலவிடங்களில் ப்ரஹ்மத்தை நிர்க்குணமென்று சொல்லியிருப்பது உண்டு. எண்ணிறந்த திருக்கல்யாண குணமுடைமையை ஓதியிருக்கின்ற சுருதி சதங்களுக்கு விரோதமின்றிக்கே நிர்வாகம் செய்ய வேண்டு மன்றே; அங்ஙனே நிர்வகிக்கு மளவில் நிர்க்குண சுருதிகளுக்கு ஹேயகுணம் இல்லாமையைக் கூறுவதில் தாத்பர்யம் என்றே சொல்லித் தீரவேண்டும். பிரதானம் முதலானவை ஜகத் காரணமாகக் கூடுமென்று நேர்ந்த சங்கைகளைப் பரிஹரியா நின்ற சாரீரக மீமாம்ஸையானது பெரும்பாலும் அதிகரணந்தோறும் பரப்ரஹ்மத்தினிடத்திலுள்ள திருக்குணங்களை யெடுத்துக் கொண்டே அத்தகைய குணங்களில்லாத வஸ்துச்களுக்குக் காரணத்வம் சம்பவிக்க மாட்டாது' என்று தலைக்கட்டுகின்றது. இக்காலத்தவர்களான அத்வைதிகள் தங்கள் நூல்களில் ''ஆதி சங்கராசாரியரும் சகுணப் பிரம்மத்தையும், சசரீரப் பிரம்மத்தையும் ஒப்புக் கொண்டிருப்பதுண்டு'' என்றெழுதுகிறுர்கள்: நையாயிகர்கள், ''உத்பந்நம் த்ரவ்யம் க்ஷணமகுணம் திஷ்டதி'' என்பர்கள். பரப்பிரம்மத்திற்கு உத்பத்தி ஒப்புக் கொண்டாலாவது அது க்ஷணகாலம் நிர்க்குணமாக இருக்கவுமாகும். முமுட்சுக்களும் முக்தர்களும் நித்யர்களுமான சமஸ்த ஜீவராசிகளையும் தன்னுடைய குணுனுபவத்தினுலேயே உஜ்ஜீவிப்பிக்குமதான பரப்பிரம்மம் க்ஷணமாத்திரமும் நிர்க்குணமாக இருக்க கில்லாது.



திருத்தணிகைக் கோயில் திருக்குளத்தில், நீராழி மண்டபத்தின் அருகே தெப்ப அமைப்புக் காட்சி.

# ‘பெரிய அன்பின் வரகுண தேவர்’

[ ந. ரா. முருகவேள், M. A., M. O. L. ]

**முன்னுரை :**

உலக வரலாற்று நூல்களில் உரோம நாட்டு **நீரோ**, பிரெஞ்சு நாட்டு **லூயி**, மங்கோலியத்துச் **செஞ்சிஸ்கான்**, துருக்கியத்துத் **தாமர்லேன்** முதலிய பற்பல தீய பெருங்கோல் அரசர்களைப் பற்றிப் படிக்கின்றோம். ஆனால் தமிழ் நாட்டை ஆண்டுவந்த சேர சோழ பாண்டிய மன்னர்களுள் ஒருவரேனும், ஒரு சிறிதாவது நீதிநெறி தவறிய கொடுங்கோலர்களாக ஒரு போதும் இருந்ததில்லை. அவர்கள் அனைவருமே அறநெறி வாழாமல் அரசோச்சிச் செங்கோல் செலுத்தி வந்தனர்; தமிழக வேந்தர்கள் அறிவு திரு ஆற்றல்களிற் சிறந்து விளங்கியதுடன், நீதி, நேர்மை, பக்தி, ஒழுக்கம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் நிகரற்றுத் திகழ்ந்து சிவனருச் செல்வர்களாகச் செங்கோல் ஒச்சி வந்தனர்.

**சிவஞானச் செல்வர்கள் :**

‘‘அரசியற் பெருந்திறனும், தத்துவவுணர்வின் ஆற்றலும் ஒருங்கே யுடனியைந்து கலந்த நிலையில், ஞானிகள் அரசர்கள் ஆகவோ அல்லது அரசர்கள் ஞானிகள் ஆகவோ மாறி நின்றால்தான், உலகம் உய்ந்து வாழ்வும் வளமும் பெறுதல் இயலும். அரசியல் ஆள்வினைத் திறனும், அருள் ஞான மெய்யுணர்வும் ஒருங்கு இயைந்து கலந்து நின்றாலன்றி, உலக மக்களுக்கு உய்தி இல்லை. இவை இரண்டினுள் **ஏதேனும் ஒன்றைப் புறக்கணித்துவிட்டுப் பிறி**தொன்றினை மட்டுமே கைக்கொள்ளும் இழிகுண மாக்களை ஆட்சிப் பொறுப்பினின்று ஒதுக்கித் தடுத்து நிறுத்தினாலன்றி, மனித குலத்திற்கு உய்வே இல்லை’’—என மேலை நாட்டுப் பேரறிஞர் ஆகிய பிளேட்டோ(1) என்பவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஞானிகள் சாசோச்சினால்தான் உலகம் நலம் பெறும் என்பது அவர் கருத்து. அம்முறையில், நம் தமிழக அரசர்கள் தத்துவ உணர்வில் தலைநின்ற வித்தகர்களாகவும், சிவஞான நேயச் செல்வர்களாகவும் விளங்கி யிருந்தமை, வியந்து மகிழ்தற்குரியது.

**பராந்தகன் நெடுஞ்சடையன் :**

அத்தகைய தமிழ் வேந்தர்கள் பலருள், ஜடில பராந்தகன் நெடுஞ்சடையர் (கி. பி. 765 - 815), மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவராவர். தமிழக வரலாற்று ஆராய்ச்சித் துறையில் மிகவும் புகழ் பெற்றுத் திகழும் வேள்விக்குடிச் செப்பேடுகளை வழங்கியவர் இவ்,

---

(1) “Until philosophers become kings or the kings and princes of this world have the sprit and power of philosophy and political greatness and wisdom meet in one, and those commoner natures who pursue either to the exclusion of the other are compelled to stand aside, cities will never have rest from their evils, no, nor the human race, as I believe, and then only will this our State have a possibility of life and behold the light of day”.

—Dialogues sof Plato, The Republic.

வேந்தரேயாவர் (2). இச் செப்பேடுகளின் துணைகொண்டே சங்க காலத்திற்குப் பின்னர்க் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரையில் விளங்கி இருந்த பாண்டிய வேந்தர்களைப் பற்றிய குறிப்புகளை, ஒரள வேனும் நாம் தெரிந்து கொள்கின்றோம். இடைக் காலத்துப் பாண்டிய மன்னர்களுள் மிகச் சிறந்த ஒரு பேரரசராக விளங்கியவர் இவ் வேந்தரே எனலாம். பல்லவரையும் சேரரை யும் பிற சிற்றரசர்களையும் போரில் வென்று புறங்கண்ட வீரப் பெருவேந்தராக, இவர் விளங்கியிருந்தார். பாண்டி நாடு மட்டுமே யன்றிச் சோழ நாடு, கொங்கு நாடு, தென் திருவிதாங்கூர் நாடு, தொண்டைமண்டலம் என்பவைகளும், இவரது ஆட்சிக்கு உட்பட்டு அடங்கியிருந்தன.

இவருடைய ஆஞ்ஞாபதியாக இருந்த **மாறன்காரி** என்னும் மதுரகவி என்பவரே, ஆனை மலைப் பெருமாள் கோயிலைக் கட்டியவர் ஆவர். (கி. பி. 770). இவ்வரசர் 'காஞ்சிவாய்ப் பேரூரிற் குன்றம் அன்னதோர் கோயில்' எடுத்த தாகவும் தெரிகின்றது. ஆடுதுறை, கும்ப கோணம், செந்தலை, திருவெள்ளறை, அம்பா சமுத்திரம், திருவிடைமருதூர், திருச்செந்தூர் முதலிய பல இடங்களில் இவர்தம் கல்வெட்டுக் கள் காணப்படுகின்றன.

## திருவிடைமருதூர் :

இத்தகைய சிறந்த பேரரசராகிய சடில பராந்தகன் நெடுஞ்சடையன் என்பவர், மிகவும் சிறந்த ஒரு சிவபக்தராகவும் விளங்கியிருந்தார். தம்மை எதிர்த்துப் போர் தொடுத்த சோழ மன்னனை வென்று, சோழ நாட்டைத் தமது ஆட்சிக்கு உட்படுத்திய இவர், தமது தலைநகரம் ஆகிய மதுரையிற் போலச் சோழ நாட்டுத் திருவிடைமருதூரிலும் ஒரு மாளிகை அமைத் துக்கொண்டு, சில காலம் தங்கியிருந்தார். திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கப் பெருமானுக் குப் பல திருப்பணிகள் புரிந்தார். திருவிடை மருதூர்க் கோயிலின் மேற்குக் கோபுரமும், கொடுமுடிப் பிராகாரமும், பிறவும் இவரால் அமைக்கப்பட்டனவேயாகும்.



## பட்டினத்தடிகள் :

திருவிடைமருதூர்ப் பெருமான்பால், இவ் வரசர் கொண்டிருந்த அன்பின் திறம் எல்லை யற்றது. இவ்வாறு உண்டோ என வியக்கத் தக்கது. அதனைப் பட்டினத்தடிகள், தாம் இயற்றியருளிய ''திருவிடைமருதூர் மும்மணிக் கோவை'' யிற் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்து கூறுகின்றார்.

(1) ஒரு நாள், கொடிய கள்வன் ஒரு வனைத் தேடிப் பிடித்து, அவன் செய்த குற்றங் களுக்காகக் கடுந் தண்டனை தருதற்பொருட்டு, ஊர் காவலர்கள் அவனுடைய இரு கைகளிலும் விலங்கிட்டுப் பல வகைகளில் துன்புறுத்தி இழுத்துச் செல்லுதலையும், அக்கள்வன் நெற்றி யில் திருநீறு அணிந்து பொலிதலையும் இவ் வரசர் கண்டார். உடனே இவருடைய உள்ளம் உருகிவிட்டது. ஊர் காவலர்களை அழைத்து அக்கள்வனை மன்னித்து, கட்டுக்களை அவிழ்ப் பித்து, இன்சொற்கள் கூறி, விடுதலை செய்து அனுப்பிவிட்டார்.

(2) மற்றொரு நாள், ஊரின் புறத்தே நரி கள் இரவில் ஊளையிட்டன. அவ்வொலியைக் கேட்ட இவர், தாம் வழிபடும் திரு ஆலவாய்ச் சோமசுந்தரப் பெருமானையும், திருவிடை மருதூர் மகாலிங்கப் பெருமானையுமே, அந்நரி கள் அன்புடன் அழைத்துப் போற்றிப் பாடுகின் றன என்று, தம்முடைய மனநலத்தின் சால் பாற் கருதி மகிழ்ந்தார். அதனால் வேட்டைக் காரர்கள் அவைகளைப் பிடித்துக் கொல்வதற் காகக் கொண்டு வந்தபொழுது அவற்றைக் கொல்ல மனம் வராமல், "இறைவனைப் பாடி வழிபட்ட இவற்றிற்கு ஓர் ஊறும் செய்த லாகாது'' என்று சொல்லி, அவற்றிற்கு நல்லாடைகள் பலவற்றை முறைப்படி போர்த் திச் சிறப்புச் செய்து, காட்டிற்கே கொண்டு போய் விட்டு விடும்படி செய்தருளினர்.

(3) ஒரு சமயம், மழைக் காலத்தில் திரு விடை மருதூர்த் திருக்குளத்தில் தவளைகள் மகிழ்ச்சி மேலீட்டாற் பேரொலி செய்தன.

---

(2) Prof. R. Sathianathaier, M.A.,L.T. History of India. P. 326.

அது கேட்ட இவர், தவளைகள் இறைவனின் திருப்பெயர்களைக் கூறித் துதித்து வழிபடு கின்றன என்று, தம்முடைய சிவ பக்திச் சிறப் புக்கு ஏற்பக் கொண்டு, அத்தவளைகளைப் பாராட்டிப் பரிசு நல்கும் முறையில், நவமணி களையும் பொற் காசுகளையும் அத்திருக்குளத்தில் வாரி வீசி மகிழ்ந்தார்.

(4) மற்றொரு சமயம், இவர் திருவிடை மருதூர்க் கோயிலிற்குச் சென்று வழிபட்டு வலம் வந்துகொண்டிருக்கும்போது பிராகாரத் தில் உலரப் பரப்பியிருந்த கோயிலுக்குரிய எள்ளினைப் பணிவிடைக்காரன் ஒருவன் நிரம்ப எடுத்து வைத்துத் தின்று கொண்டிருத்தலைக் கண்டார். 'சிவாலயத்திற்குரிய இதனை நீ இங்ஙனம் திருடித் தின்னுதல் முறையா?' என்று அவனை வினவினர். அகப்பட்டுக் கொண்ட அவன் தப்பித்துக் கொள்ளுவதற்கு வேறு வழியின்மையால், 'அரசர் பெரும! உண்ட கடனைத் தீர்த்தேயாதல் வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லப் பலகாலும் கேட்டிருக்கின்றேன். அதனால் இப்போது இந்த எள்ளினையுண்டால், மறுபிறவியிலும் மகாலிங் கப் பெருமானுக்கு மீண்டும் மீண்டும் பணி விடை செய்துவரும் நற்பேறு வாய்க்கும் என்ற பெருவிருப்பத்தினாலேயே இங்ஙனம் செய்தேன் என்று அரசரின் மனங்கொள்ளும்படி அஞ்சிப் பணிவுடன் கூறினன். அதுகேட்டதும் அரசர் மனமகிழ்ந்தார். 'அவ்வாறாயின், எனக்கும் அதிற் சிறிது கொடு' என்று கூறி, அப்பணி விடைக்காரனின் எச்சில் எள்ளினை வற்புறுத்தி வாங்கியுண்டு, மகாலிங்கப் பெருமானுக்குப் பணிவிடைகள் செய்யும் பேறு மறுபிறவிகளி லும் தமக்கு மீள மீளக் கிடைத்து வருதல் வேண்டும் என விரும்பி வழிபட்டுச் சென்றார்.

(5) வேறொரு சமயம், திருவிடைமருதூர்க் கோயிலின் அருகில் புறத்தே ஓரிடத்தில் ஒரு மண்டையோடு விழுந்து கிடந்தது. அதனைக் கண்ணுற்றார் இவ்வரசர் பெருமான். இறந்து போயும்கூட, மகாலிங்கப் பெருமானைப் பிரிவ தற்கு மனமின்றி, அக்கோயில் அருகே வந்து விழுந்து கிடக்கின்ற நும் அன்பின் திறம் எத் தகையது! என்று வியந்து, இத்தகைய பேறு உம்மைப் போல எனக்கும் வாய்த்தல்வேண்டும் என்று விரும்பி, அத்தலையோட்டினைத் தம் தலையுற வணங்கி நின்றார்.

(6) பிறிதொரு சமயம், திருவிடை மருதூர்க் கோயிலுக்குச் சென்று வழிபட்டு விட்டு, அடுத்துள்ள பிராகாரங்களை வலம் வந்து கொண்டிருந்த பொழுது, அங்கே ஓர் இடத்தில் நாயின் மலம் விழுந்து கிடக்கக் கண்டார். அதனை அன்பர்களில் ஒருவராவது கவனித்து அப்புறப்படுத்தித் துப்புரவு செய்யாதிருத்தல் கண்டு, தாமே சென்று அப்புறப்படுத்தித் துப்புரவு செய்து உள்ளம் பூரித்தார்.

(7) ஒருகால் இவ்வரசர் பெருந்தகை திரு விடைமருதூர்த் திருவீதியை வலம் வரும் பொழுது, வேப்ப மரங்கள் யாவும் நன்றாகப் பழுத்திருத்தலைக் கண்டார். சிவம் பழுத்த அவர் தம் திருவுள்ளத்திற்கு, அவ்வேப்ப மரங் களின் பழங்கள் யாவும் சிவலிங்கங்கள் போலக் காட்சி யளித்தன. அதனால் அவர் உடனே அம் மரங்களுக்கு எல்லாம் அழகிய விதானம் கட்டு மாறு கட்டளையிட்டு, உவகை பூத்தார்.

(8) இவைகளை யெல்லாம் காட்டிலும், இவர்தம் அன்பின் திறனையுணர்த்தும் அரிய தொரு நிகழ்ச்சியும் உண்டு. சோழ அரசனின் மகள் ஒருத்தி, இவ்வரசரை மணந்து கொள்ள விரும்பினாள். இவரும் அவளைப் பாராமலே மணந்துகொள்ள இசைவு தெரிவித்திருந்தார். பின்னர் அவளை இவர் பார்க்க நேர்ந்தது. அவளுடைய ஒப்பற்ற பேரழகினைக் கண்டு இவர் வியந்தார். 'சிறந்த பொருள்கள் எதுவும் இறைவனுக்கே உரியது' என்று எண்ணி வழங்கி விடும் இயல்புடைய இவர். இவ்வளவு சிறந்த பேரழகுடைய இப்பெண்ணும் இறைவனுக்கே உரிமையாகத் தக்கவள்' என்று எண்ணி, அவளை அழைத்துக்கொண்டு சென்று மகாலிங்கப் பெருமான் பால் ஒப்படைத்துவிட்டார் என்பது வரலாறு.

## வரகுண தேவர் :

இத்துணைச் சிறந்த எல்லையற்ற பேரன்பும், இனிய குணங்களும் நிறைந்த இவரை வரகுண மகாராசன் என்று மக்கள் அனைவரும் வாழ்த் திப் போற்றினர். பட்டினத்தடிகள் இவரைப் ''பெரிய அன்பின் வரகுண தேவர்'' என்று குறிப்பிட்டு, இவருடைய இணையற்ற பேரன்பினை யும், இறைமைத் தன்மையினையும் இனிதெடுத்

துரைத்துப் பாராட்டிப் பின்வருமாறு பாடியருள்கின்றார்.

‘‘வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டுஅவிழ்ப் பித்தும் (1);

ஓடும் பல்நரி ஊளைகேட்டு அரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும் (2);

குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்து தூவியும் (3);

வழிபடும் ஒருவன் மஞ்சனத்து இயற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும், அவன் இப் பிறப்புக்கு என்ன,
இடித்துக் கொண்டு அவன் எச்சிலை
நுகர்ந்தும் (4);

மருத வட்டத்து ஒருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி,
உம்மைப் போல எம் இத்தலையும்
கிடத்தல் வேண்டும்என்று அடுத்தடுத்து
இரந்தும் (5);

கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தன என்று நாய்க்கட்டம்
எடுத்தும் (6);

காம்புகுத்து உதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம்
அமைத்தும் (7);

விரும்பின கொடுக்கை பரம்பரற்கு என்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுணதேவர்’’. (8);

—திருவிடைமருதூர் மும்மணிக் கோவை...28.

**நம்பியாண்டார் நம்பிகள் :**

இவ்வாறே, பதினொன்றும் திருமுறையில் ‘கோயில் திருப்பண்ணியர் விருத்தம்’ என்னும் நூலில், அதனை இயற்றியருளிய நம்பியாண்டார் நம்பிகள், வரகுணதேவரின் பக்திநலச் சிறப்பைப் புலப்படுத்தும் வரலாற்று நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடுகின்றார்.

வரகுண பாண்டியர் எல்லையற்ற சிவபக்தியில் திளைத்தவர் எனினும், வீரச்சிறப்பிலும் போர்த்திறத்திலும் சிறிதும் குன்றியவர் அல்லர். போர்கள் பல செய்து புகழ்மிக்கவர் அவர்! ஒரு சமயம் அவர் போர் ஒன்றிற்குப் புறப்பட்டார். போருக்குச் செல்லும் வீரர்கள் தமது உடலுக்குப் பாதுகாப்பாக இரும்புக் கவசம் அணிந்து செல்வது மரபு அன்றோ! அம்முறையில், இவரும் கவசம் அணிந்து கொள்ள முற்பட்டார். ஆனால் இரும்புக் கவசம் அணிந்திலர். ‘‘கங்காளன் பூசும் கவசத் திருநீறு’’ தான், தமக்கு உண்மையான கவசம் ஆகற்பாலது எனத் தெளிந்து துணிந்தார்!

அதன்படி, திருநீற்றைத் தமது மெய்ம் முழுதும் சண்ணித்துப் பூசிக் கொண்டு போருக்குப் புறப்பட்டார். அப்போரில் எப்போதும் போல் அவர் வெற்றியே பெற்றார். போர் நிகழ்ந்தபோது, அவர் தம் திருமேனியில் அம்பு ஒன்றும் பாய்ந்திலது. ஊறு எதுவும் நேராமல், அவர் மிக்க பெருமித வீறுடன் வெற்றி பெற்றுத் திரும்பினர். ஆனல் போர்க் களத்தினின்று திரும்புங்கால், அங்கே ஒடிந்து வீழ்ந்து சிதறிக் கிடந்த கூரிய அம்புகளுள் ஒன்று, எங்ஙனமோ அவர்தம் காலிற் பொத்துக் கொண்டது. அதனால் இரத்தம் பெருக்கெடுத்தது. அதுகண்டு சூழ்ந்திருந்த படை வீரர்களும் பிறரும் பெரிதும் மனம் வருந்தி, விரைந்து முதலுதவிகள் செய்ய முனைந்தனர். ஆனல் வரகுணதேவரோ அதனல் ஒரு சிறிதும் வருந்திலர்.

‘‘திருநீறு ஆகிய கவசத்தை, யான் என் உடல் முழுதும் அணிந்து கொண்டேன். அதனல், என் உடலின் ஒரு சிறுபகுதிக்கும் பகைவர் படைகளால் ஊறு நேர்ந்திலது. திருநீற்றைக் காலில் அணிதல் கூடாது என்பது பற்றி, அக்கவசத்தை இக்காலுக்கு அணிந்திலேன். திருநீற்றுக் கவசம் அணியப்பெறும் நல்லூழ் அமையாத காலுக்கு. இந்த அடிபட்டது பொருத்தமேயாகும்’’ என்று கூறிப் புன்னகை பூத்து மகிழ்ந்தார். என்னே இவரது திருநீற்றன்பும், சிவபக்தியும் என்று வியந்து புகழ்ந்து நயந்து உருகுகின்றார் நம்பியாண்டார் நம்பிகள்!

பொடிஏர் தரும் மேனியன் ஆகிப்
பூசல் புக, அடிக்கே
கடிசேர் கணை குளிப்பக் கண்டு,
கோயிற் கருவி இல்லா
அடியே பட அமையும் கனை
என்ற, வரகுணன்தன்
முடியே தருகழல் அம்பலத்து
ஆடிதன் மொய்கழலே !

இவ்வாறே இவ்வரகுண பாண்டியதேவரின் பக்தி நலத்தையும், பண்பு நலங்களையும் மிகவும் போற்றிப் புகழ்ந்து, இவருக்கு இறைவன் செய்த இன்னருட்டிறனை விளக்கித் திருவிளையாடற் புராணத்தின்கண், **பரஞ்சோதி முனிவர்** பாங்குறப் பாடி மகிழ்விக்கின்றார்.

**முடிவுரை :**

இங்ஙனம் பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பிகள், பரஞ்சோதி முனிவர் போன்ற சான்றோர்கள் பலரும், பாடிப் பரவும் மாட்சிமை யுடைய 'பெரிய அன்பின் வரகுண தேவர்' பண்பு நலன்களை, நாமும் நயந்தினிது போற்றி நலம்பல பெற்று உய்வோமாக !

—ஆசிரியர்.

---

## செய்திச் சுருக்கம்

**ரதோத்ஸவம் :** '' ஒவ்வொரு திருக் கோயிலிலேயும் பாக்கி உத்ஸவம் நடத்தினாலும் சரி, நடத்தாவிட்டாலும் சரி, ரதோத்ஸவம் மட்டும் நடத்தி வைக்கவேணும். ரதம் இல்லையென்றால் சட்டத்தேராவது செய்து இழுக்கவேணும். அந்த மாதிரி தேர் இழுத்தால்தான், எல்லோருக்கும் சம்பந்தம் இருக்கும். பெரிய பெரிய நாலு சாஸ்திரம் படித்த விற்பன்னர்கள், சிவதீக்ஷை பெற்றவர்கள், தொழிலாளர்கள், வயலிலே பயிர் செய்கின்றவர்கள் ஆகிய அவ்வளவு பேரும் ஒன்று சேர்ந்து, தோளுடன் தோள் சேர்ந்து தேர் இழுப்பது என்பதால், ஐக்கியபாவம் உண்டாகும். நாமெல்லோரும் ஈஸ்வரனுடைய குழந்தைகள் என்பதால், இந்த ஒரு மேம்பாடு நமக்குள் இந்த ஒரு உத்ஸவத்தால் இதுவரையிலும் வளர்த்துக் கொண்டிருந்தோம்.

ரதோத்ஸவம் என்றால், எல்லோருக்கும் ஈஸ்வரனை வைத்து இழுக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. சீமான்கள் முதல் ஏழைகள் வரையில் எல்லாப் பக்தர்களுக்கும் இந்தக் கைங்கர்யம் கிடைக்கிறது. எல்லோரும் ஒற்றுமையுடன் இந்தக் கைங்கர்யத்தில் ஈடுபட்டுச் செயலாற்ற மனது தூண்டுகிறது. ஆகையினால் ரதோத்ஸவம் ஒவ்வொரு ஊரிலேயும் நடைபெற அன்பர்கள் முயற்சிக்க வேண்டும். ரதம் இழுக்கப்பட்ட ஊரில் எல்லாம் அதற்கான வடக்கயிறு செல்லரித்துப்போய் இருக்கலாம். இப்போது திரும்பவும் வடக்கயிறு முறுக்குவதற்குக்கூட, அந்தக் கலை தேய்ந்திருக்கலாம். எப்படியிருந்த போதிலும் சின்ன சட்டத் தேராவது செய்து, எல்லோரும் கையாலே இழுத்துக்கொண்டு வரும்படியான முறை மங்காமல், உலகத்தில் இருக்க வேண்டும்'' என்பது, **ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள்** கருத்தும், விருப்பமும் ஆகும்.

திருவாரூரிலே ரதோத்ஸவம் நடந்து கொண்டிருந்தது. இடையிற் சில காலம் நின்று விட்டது. அதைப் புதுப்பித்து மறுபடியும் ரதோத்ஸவத்திற்குப் பெயர் பெற்ற இடமாகிய திருவாரூரில், ஸ்ரீதியாகராஜப் பெருமான் ஆரோகணித்துத் தேர்மேல் வருவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் **திரு. வி, எஸ். தியாகராஜ முதலியார்** அவர்களின் முயற்சியால் திறம்பட நடத்தப் பெற்று, வாழையடிவாழையாக வளர்ந்துவரும் சாஸ்திரப் பிரகாரம் உள்ள இந்த ரதோத்ஸவத்தை மீண்டும் இன்று (*17—5—1970*) ஆரம்பித்து நடத்தி வைத்தார்கள். தேர் நிலைக்கு வந்தவுடன் முதல் மரியாதையாக **ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம்** ஜகத்குரு **ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமிகள்** அவர்கள் அன்னாருக்கு ஜரிகை சால்வையொன்றை, அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் **திரு. கே, எஸ். நரசிம்மன், I.A.S.** அவர்கள் மூலமாக வழங்கி அனுக்கிரகித்தார்கள்.

# தேர்த் திருவிழா

( ந. ரா. முருகவேள், M. A., M. O. L. )

'' ஆழித் தேர் வித்தகனை
நான்கண்டது ஆரூரே''
—திருநாவுக்கரசர்.

**முன்னுரை :**

'' திருவாரூர், நிலமகளின் அழகிய நெற்றிக்குத் திலகம் போன்றது. சோழ வேந்தர்கள் தலைநகரமாகக் கொண்டு வாழ்ந்து வந்த சிறப்புடைய அத்திருவாரூர், திருமகள் எழுந்தருளி விளங்குகின்ற செந்தாமரை மலரைப் போல எழில் மிக்குத் திகழ்வது.''

''அங்கே, உள்ளத்திற்குத் தெளிவைத் தருகின்ற இனிய ஓசையையுடைய தேவாரத் திருப்பதிகங்களைக் கிளிகள் இடையறாது ஓதிக்கொண்டிருக்கும்; நாகணவாய்ப் பறவைகள் நயந்து இனிது கேட்டு மகிழும். இத்தகைய பல சிறப்புக்களையுடைய திருவாரூர் பற்றி நினைத்தால், எவருடைய உள்ளம்தான் உருகாமல் இருக்கும்?'' என்று பெரியபுராணம் பாடிய ஆசிரியர் சேக்கிழார் பெருமான் திருவாரூரின் பெருமையினை வியந்து போற்றிப் பாடியருள்கின்றார்!

**தலவரலாறு :**

இத்தகைய திருவாரூரின்கண் எழுந்தருளி விளங்கும் சிவபெருமான், தேவர்கள் கறையான் வடிவம் கொண்டு அமைத்த புற்றின்கண் வெளிப்பட்டு, அவர்களின் கலக்கம் போக்கியவன். சனசர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் முனிவர்களுக்குக் கலியின் துயரம் தீர்த்தவன். கிழக்குக் கரையில் உள்ள தேவகங்கை படிந்த தீர்த்தமும், சங்க முனிவரின் கைகள் வளரும்படி செய்த சங்க தீர்த்தமும் உடையவன். திருமாலுக்குத் திருமகளை மணம் செய்து வைத்தவன். செந்தாமரை மலரைக் கோயிலாக உடைய திருமகள் வழிபட்டதனால், தான் எழுந்தருளியுள்ள தலத்திற்குக் கமலாலயம் என்னும் பெயர் வழங்கும்படி அருளியவன். இந்திரன், முசுகுந்தன் முதலியவர்களின் வழிபாட்டினை ஏற்றவன். தனது தலத்தை வலம்வந்த பசுவையும், அதனை மேய்த்து வலம் வருமாறு செய்தவணிகனையும், தசானன தேயத்தில் முறையே அமைச்சனாகவும், அரசனாகவும், பிறப்பித்து வீடுபேறு நல்கியவன். தேவதீர்த்தத்தில் நீராடிய திரிசங்கு என்னும் அரசன், வசிஷ்ட முனிவரின் பிள்ளைகளது சாபத்தால் பெற்ற புலைவடிவம் நீங்கி நல்லுடல் பெறச் செய்தவன். கேமசருமன் என்னும் அந்தணனுக்குக் கள்ளுண்ட தீவினையையும், இந்திரனுக்கு விருத்திராசுரனைக் கொன்ற தீவினையையும் போக்கியவன். வடக்கேயுள்ள கயை என்னும் தலத்தாலும் நீங்காத நன்றி மறப்பு என்னும் கொடிய பாவத்தினைப் போக்கிய கயை என்னும் திருக்குளத்தை உடையவன். கோடி முனிவர்கள் வந்து வணங்கியபொழுது கோடி அளவான திருவுருவங்கள் கொண்டு அவர்களுக்குக் காட்சி நல்கியவன். தசரதன், சித்தீசன் என்னும் அரசர்களுக்கு மகப்பேறு வழங்கியவன். கோகருணர் என்னும் பெயருடைய இருவருக்கு வீடுபேறு ஈந்தவன். துர்வாச முனி

வர்க்கு ஊனொடு கலந்த உணவை அருத்திய குற்றம்பற்றிப் புலியாகும்படி சாபம் அடைந்த, குலிசன் என்னும் கேகய நாட்டு அரசன் வணங்கியதனுல், குலிசேசன் என்னும் பெயரை எய்தியவன். கலிதேவனுக்கு அஞ்சிப் புக லடைந்த மூன்றரைக் கோடி தீர்த்தங்களுக்கு அடைக்கலம் அளித்தவன்.

## தியாகேசர் :

திருநாகைக் காரோணத்தில் அழகவிடங்கர் திருக்காராயிலில் ஆதிவிடங்கர், திருக்கோளி லியில் அவனிவிடங்கர், திருமறைக்காட்டில் புவனிவிடங்கர், திருநள்ளாற்றில் நகவிடங்கர், திருவாய்மூரில் நீலவிடங்கர் என்னும் பெயர் களைப் பெற்று, வீதிவிடங்கர் என்னும் பெயரால் திருவாரூரில் எழுந்தருளி விளங்குபவன் தியா கேசப் பெருமான்.

திருநாகைக் காரோணத்தில் கடலின் அலை போல் ஆடுகின்ற பாராவார தரங்க நடனத்தை யும், திருநள்ளாற்றில் பித்துக் கொண்டவன் ஆடுவதுபோல், ஆடுகின்ற உன்மத்த நடனத் தையும், திருக்காராயிலில் கோழியைப்போல் ஆடுகின்ற குக்குட நடனத்தையும், திருக்கோளி லியில் வண்டு மலருக்குள்ளே குடைந்து குடைந்து செல்வதுபோல் ஆடுகின்ற பிருங்க நடனத்தையும், திருமறைக்காட்டில் அன்னப் பறவை அடிஎடுத்து வைத்து நடப்பது போல் ஆடுகின்ற அம்சபாத நடனத்தையும், திருவாய் மூரில் தாமரை மலர் அசைவதுபோல் ஆடு கின்ற கமல நடனத்தையும், திருவாரூரில் உள் மூச்சு வெளி மூச்சுக்களால் மார்பு ஏறி இறங்கு வது போல் மேலும் கீழுமாகவும், பின்னும் முன்னுமாகவும் ஆடுகின்ற அஜபா நடனத்தை யும், தியாகேசப் பெருமான் முறையே செய் தருள்கின்றுன் என்பது மரபு.

## ஆழித்தேர் :

இப்பெருமானுடைய ஒவ்வொரு பொரு ளுக்கும் தனிப் பெயர் உண்டு. தியாகேசர் அணியும் பரிவட்டம் ஆகிய ஆடை தியாக விநோதன். அவர்தம் கிண்கிணி, ஆடரவக் கிண்கிணி. வாள், வீரகண்டயம். மாலை—பணி. மத்தளம், சுத்தமத்தளம், நாதசுரம், பாரி, வாத்தியம், பஞ்சமுக வாத்தியம், தண்டு, மாணிக்கத் தண்டு. கொடி, தியாகர் கொடி, காலம் திரு அந்திக் காப்பு, ஆசனம், இரத்தின சிம்மாசனம். சாளரம், தென்னந் திருவாசல், மண்டபம், தேவாசிரியன். தேர், ஆழித்தேர்.

திருவாரூருக்குச் சிறப்பளிப்பனவற்றுள், தியாகேசர் அமர்ந்து இவர்ந்துவரும் ஆழித்தேர் என்பது மிக்க சிறப்புடையது. 'திருவாரூர்த் தேரழகு' என்பது பழமொழி. இதனை வைவ சுவத கற்பத்தில் மாசி மாதத்தில் அத்த நாளில் முசுகுந்தச் சோழன் செய்து வைத்தான் என்று நூல்கள் குறிப்பிடும். திருவாரூர்த் தேர்த் திருவிழா மிக்க சிறப்பும் புகழும் வாய்ந்தது ஒன்ருகும்.

திருக்கோயில்களில் நடைபெறும் திரு விழாக்கள், பலவகைத் தத்துவ நுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டது. சிவாலயங்களில் நடைபெறும் தேர்த் திருவிழா, சிவபெருமான் திரிபுர தகனம் செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்துவது.

## திரிபுர தகனம் :

ஒரு காலத்தில் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று கொடிய அசுரர் கள் இருந்தனர். அவர்கள் இரும்பு, வெள்ளி, பொன் என்னும் உலோகங்களால் அமைந்து, பறக்கும் தன்மை வாய்ந்த மூன்று கோட்டை களை உடையவர்களாய், தேவர்களுக்கும் முனி வர்களுக்கும் பெருந்தீங்குகளைப் புரிந்து வந்த னர். ஆதலின் அவர்களை அழித்தருளச் சிவ பெருமான் திருவுள்ளம் கொண்டார். அதனுல் பூமியே தேராகவும், சூரிய சந்திரர்களே சக்கர மாகவும், விண்மீன்களே விதானமாகவும், மேரு மலையை வில்லாகவும், வாசுகியை நாணுகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரம தேவனைச் சாரதியாகவும் கொண்டு, தேவர்கள் பலரும் தேரின் உறுப்புகளாக அமைய, அதன் மீது ஏறிப் போருக்குப் புறப்பட்டார்.

இந்நிலையில் தேவர்கள் பலரும் தம்முடைய துணையினுலேயே சிவபிரான் திரிபுர அசுரர்களை வெற்றிகொள்ளப்போகின்ருர் என்று எண்ணிச் செருக்குற்றனர். அதனையறிந்த சிவபிரான் அவர்களின் அறியாமையை நினைந்து தாம் புரிந்த புன்னகையினுலேயே, திரிபுர அசுரர்

களை எரித்து அழித்தார் என்பது வரலாறு. இவ்வரலாறு யசுர் வேதம், இலிங்க புராணம், ஸ்கந்த புராணம், மகாபாரதம், வால்மீகி இராமாயணம் முதலிய பழம்பெரும் நூல்களில் ஆங்காங்கே பரக்கக் கூறப்பட்டிருக்கின்றன.

''அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை ஆர்அறி வாரே''

எனத் திருமூலர் தாம் அருளிச் செய்த திருமந்திரத்தில், சிவபிரான் திரிபுர தகனம் செய்த வரலாற்றின் தத்துவ நுட்பத்தை விளக்கி இருப்பதைக் காணலாம். இனி இவ்வாறன்றி வேறு வகையிலும், தேர்த் திருவிழாவின் தத்துவத்தைப் பெரியோர்கள் விளக்குவர்.

## உடலும், உறையும் :

ஆன்மாக்களுக்குக் காரண சரீரம், கஞ்சுக சரீரம், குணசரீரம், சூக்குமசரீரம், தூல சரீரம் என்னும் ஐந்து சரீரங்கள் உண்டு. இவற்றிற்கு முறையே ஆனந்தமயகோசம், விஞ்ஞானமய கோசம், மனோமயகோசம், பிராணமயகோசம், அன்னமயகோசம் எனவும் பெயர்கள் வழங்கும். சரீரம்—உடல், கோசம்—உறை.

அசுத்த மாயா தத்துவம் ஏனைத் தத்துவங்களுக்கும், சரீரங்களுக்கும் காரணமாக இருத்தலால், அதனால் உண்டாகிய சரீரம் காரண சரீரம் என்றும்; அச் சரீரம் பெற்ற அளிவில் கேவலத்தில் ஒன்றுமின்றி நின்ற ஆன்மாவுக்கு அறிவு இச்சை செயல்கள் பொதுவகையில் விளக்கமுற அவ்வளவில் அம்மயக்க அறிவால் ஓர் ஆனந்த உணர்ச்சி நிகழ்தலின், அஃது ஆனந்தமயகோசம் என்றும் பெயர் பெறும்.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், என்னும் ஐந்து தத்துவங்களும் ஆன்மாவுக்கு ஐந்து சட்டைகளைப் போன்று இருத்தலால், அவற்றால் உண்டாகிய சரீரம் கஞ்சுக சரீரம் என்றும், அச்சரீரத்தால் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் சிறப்பு வகையால் விளக்கமுற்று விடயபோகங்களை அறியும் இயல்பும், ஆற்றலும் பெறுமாதலின், அவ்விசேட அறிவை உண்டாக்கும் சரீரம் விஞ்ஞானமயகோசம் என்றும் பெயர் பெறும்.

சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களாலாகிய சரீரம் குணசரீரம் என்றும், அம்முக்குணங்கள் மனம் முதலிய அந்தக்கரணங்களைத் தம்முள் அடக்கி நிற்றலின், அது மனோமயகோசம் என்றும் வழங்கப்பெறும்.

சூக்கும பூதங்களாகிய தன் மாத்திரைகளால் அமைந்த சரீரம் நுண்ணிய அணுவடிவினதாய் நிற்றலின், சூக்கும சரீரம் என்றும், அச்சூக்கும சரீரம் பிராணன் என்னும் வாயுவோடு நிற்றலாலும், தான் நீங்குங் காலத்தும் அப்பிராணவாயுவோடு கூடியே நீங்குதலாலும், பிராணமயகோசம் என்றும் சொல்லப்படும்.

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் தூல பூதங்களால் உண்டாகிய சரீரம் தூல சரீரம் என்றும், அவை உணவால் வளர்க்கப்படுதலின், அன்னமயகோசம் எனக் கூறப்படும். ஆன்மாவானது இந்த ஐந்து கோசங்களின் வேறாயும், அவற்றோடு சேர்ந்து அதுவதுவாகவும் நின்று அவற்றைச் செலுத்தும்.

ஆனந்தமய கோசம், விஞ்ஞானமய கோசம், மனோமய கோசம், பிராணமய கோசம், அன்னமய கோசம் என்னும் ஐந்தும், மாயையினின்று ஒன்றுக்கொன்று தூலமாய்த் தோன்றுவனவாகும். ஆனந்தமய விஞ்ஞானமய கோசங்கள் மிகவும் மென்மையானவை. ஆதலின், அவைகள் தோற்பாவையைப் போலும். மனோமய, பிராணமய கோசங்கள் முன்னைய இரண்டிலும் சிறிது வன்மையுடையவை. ஆதலின், அவைகள் மரப்பாவையை ஒக்கும். அன்னமய கோசமாகிய தூலசரீரம் மிகவும் பருமை வடிவமுடையதாகலின், ஏனைய நான்கிலும் பருமையும் வலிமையும் பெற்றிருக்கும். ஆதலின் அதற்குத் தேர் உவமையாகக் கூறப்படும்.

மேற்கூறிய ஐந்து கோசங்களையும் ஆன்மாவானது வேறாயும் ஒன்றாயும் கலந்துநின்று இயக்குவிக்கும். நடிகன் ஒருவன் பலவகைக் கோலங்களையும், வேடங்களையும் மேற்கொண்டு அவ்வவற்றின் வண்ணமாய் நின்று நடிக்கின்ற தன்மைபோல, ஆன்மாவும் இவ்வைந்து கோசங்களின் வயப்பட்டு நின்று இயங்கி நிற்கும். இத்தகையதொரு பெரும் தத்துவ நுட்பத்தையே திருக்கோயில்களில் நடைபெறும் தேர்த்

திருவிழாக்கள் எளிய பாமர மக்களும் இனிது உணர்ந்துகொள்ளும் வண்ணம் உருவக முறையில் கட்புலனுக்கிக் காட்டி விளக்குகின்றன.

## ஞானமிர்தம் :

சைவ சித்தாந்த நூல்களுள் பழமையும், பெருமையும் வாய்ந்த ஞானமிர்த மென்னும் சிறந்த நூல் இக்கருத்தைத் தனது பாடல் ஒன்றில் விரிவாக முற்றுருவகம் செய்து விளக்கியிருக்கின்றது. சிவஞான போதம் ஆன்மாவை 'அமைச்சரோடுகூடிய அரசன்' என உருவகம் செய்தது. சிவஞான சித்தியார் அதனையே 'படைகொடு பவனிபோதும் பார்மன்னன்' என்னும் தொடரால், மேலும் சிறிது விரித்துரைத்தது. அதனையே தொடர்ந்து பின்பற்றி முற்றுருவகமாக்கி முடித்துக்காட்டி விளக்குகின்றது, ஞானமிர்தம்! உடல் ஆகிய தேரில், உயிர் ஆகிய அரசன், உலகம் ஆகிய மாடவீதியில், உலாவருதலை அழகுற உருவகம் செய்து, ஞானமிர்தம் பின்வருமாறு நவிலுகின்றது.

## உடல்தேரில், உயிரின் உலா :

ஆன்மா அரசன். உடல் அரண்மனை. புருவநடு திருவோலக்க மண்டபம். கண்டம் நாடக அரங்கு. இருதயம் மந்திராலோசனை மண்டபம். உந்தி அந்தப்புரம். மூலாதாரம் பள்ளியறைக் கட்டில். இவ்விடங்களில் முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து அவத்தைகள் நிகழும். இந்நிலையில் முறையே 35, 25, 3, 2, 1 எனக் கருவிகள் தொழிற்படும். மனம், புத்தி சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும் அமைச்சர்கள். காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பன கவசம். நிலம் நீர், தீ, கால், வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களும் தேர். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் அறிகருவிகள் ஐந்தும் முறையே ஒற்றர், சூதமாகதர், தூதுவர், புரோகிதர், மெய் காப்பாளர். நாக்கு, கால், கை, எருவாய் கருவாய் (வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம்) என்னும் தொழிற் கருவிகள் ஐந்தும், முறையே குதிரை வீரர், யானை வீரர், தேர் வீரர், காலாட்கள், படைத் தலைவர்! அறிகருவிகளுக்கு நுகர் பொருளாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன அகப்பரிவாரம். தொழிற் கருவிகளுக்கு நுகர்பொருளாகிய உரை, நடை, கொடை, போக்கு, இன்பம் (வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம்) என்பன புறப்பரிவாரம். பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் பத்துவகை வாயுக்களும் உறுதிச்சுற்றம். இத்தகைய பல பரிவாரங்களுடன் ஆன்மாவானது உடலாகிய தேரை ஊர்ந்து நின்று, உலகமாகிய மாடவீதிகளில் உழன்று திரிந்து வருகின்றது.

இங்ஙனம் ஞானமிர்தம் கூறும் ஆன்மிக ஞான அனுபவச் செய்தியை, ஓரளவு எளிய மக்களும் உணர்ந்துகொள்ளும்படி கட்புலனுக்கிக் காட்டும் அரியதோர் அமைப்பே, தேர்த் திருவிழாவாகும் எனலாம்.

தோற்பாவைக் கூத்தும், தொல்லை
மரப்பாவை இயக்கமும், சீர்த்
தேர்ப்பாரிற் செலவும் வேருய்ச்
செலுத்துவோர் செய்தி தானும்,
பார்ப்பாய வேடம் கட்டி
ஆடுவோர் பரிசும் போலும்,
ஆர்ப்பாய காயம் தன்னை
ஆன்மா நின்று ஆட்டு மாறே.

படைகொடு பவனி போதும்
பார்மன்னன் புகும்போது இல்லில்
கடைதொறும் விட்டு விட்டுக்
காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப்
புரத்தினில்; அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சு அவத்தை
உறும்; உயிர் காவல் ஆக;

எனவரும் சிவஞான சித்தியார் சுபக்கச் செய்யுட்கள் (214, 222) இரண்டும், இக்கருத்தை வலியுறுத்தும் சான்ருகும்.

முன்னைய செய்யுட்கள், உயிரானது தூல விடலை இயக்கும் தன்மை, ஒருபெரிய தேரானது தரையில் ஊர்ந்து செல்லுதல் போலும்

என்னும் கருத்தில், ''ஆர்ப்பாய காயம் தன்னை ஆன்மா நின்று ஆட்டுமாறு, "தேர் பாரிற் செல்லும் பரிசுபோலும்'' என அருளிச் செய்யப் பெற்றிருத்தல் காணலாம். பின்னைய செய்யுளின் கண், உயிரை அரசனுக உருவகம் செய்து, உயிரானது உடலை இவர்தந்து ஊர்ந்து செலுத்தும் தன்மையை ''மன்னன் படைகொடு பவனி போதல்''போலும் என்று குறிப்பிட்டிருத்தல், ஊன்றி உளங் கொளத்தக்கது.

## முடிவுரை :

இத்தகைய பல நுட்பங்களை யுணர்த்தும் முறையில் அமைந்துள்ள **தேர்த் திருவிழா** போன்ற, தமிழகத்தின் நாகரிகப் பண்பாட்டு விழா நிகழ்ச்சிகள், மேலும் மேலும் சிறந்தோங்கி நடைபெற்று, உலக மக்களுக்கு நலம் பல விளைவிக்க, எல்லாம் வல்ல திருவாரூர்த் தியாகேசப் பெருமானின் திருவடிமலர்களைச் சிந்தித்து வந்தித்து உய்வோமாக!

—ஆசிரியர்

# செய்திச் சுருக்கம்

**நீதிபோதனை வகுப்பு நிறைவு விழா, காஞ்சிபுரம் :** காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் அவர்களின் பெருங்கருணையில் முகிழ்த்த அருளாதரவின் கீழ், காஞ்சிபுரம் கொல்லா கன்னையச் செட்டியார், தோட்டத்தில், 15—5—70 முதல் 24—5—70 வரை 10 நட்களுக்கு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான நீதி போதனை வகுப்பு (கோடை காலப் பயிற்சி, நடைபெற்றது. சமய ஆர்வமுடைய பொதுமக்களும் வந்து கலந்துகொண்டு இன்புற்றனர். நாடொறும் காலையில் பஜனையும், தேவார பாராயணமும் இடம் பெற்றன. காலையிலும் மாலையிலுமாக ஒவ்வொரு நாளிலும் சராசரி 4 சொற்பொழிவுகள் இடம் பெற்றன. 100-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தங்களைப் பதிவு செய்து கொண்டு பயிற்சி பெற்றனர். வெளியூர் ஆசிரியர்களுக்கு உண்டி, இருப்பிட வசதி இலவசமாகச் செய்து தரப்பட்டது.

15—5—1970 காலை 9 மணியளவில், ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் திருமுன்னிலையில், தமிழ் நாடு இந்து அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் வகுப்பைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை யாற்றினுர்கள். காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களும், கலந்துகொண்டு சிறப்பித்தருளி உரையாற்றினுர்கள். ஸ்ரீஆசார்ய சுவாமிகள், காலையிலும் மாலையிலும் எழுந்தருளிச் சிறப்பித்தார்கள். பல நாட்களில் இந்து மதத்தின் சிறப்புக் குறித்து அருளுரை நிகழ்த்தியருளினுர்கள். திரு. எம். விஸ்வநாதன், திரு. எம். இராமகிருஷ்ணன் ஆகியோர், நாமாவளிப் பஜனை நிகழ்ச்சியை நடத்தித் தந்தார்கள். திரு. விநாயக முதலியார், திரு காளத்தி, திரு. பழனி முதலியார் ஆகியோர், தேவார நிகழ்ச்சியை நடத்தித் தந்தார்கள்.

இவ்வகுப்பின்கண் 10 நாட்களிலும் சொற்பொழிவாற்றிய புலவர்பெருமக்களும் பிறரும் பின்வருவோராவர் : (1) ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், (2) திரு, க. வச்சிர வேலு முதலியார், (3) திரு. ந. ரா. முருகவேள் (4) திரு. தஞ்சை முத்துக்கிருஷ்ண சாஸ்திரி, (5) திரு. கி. வா. ஜகந்நாதன் (6) திரு. ஆர், இராதாகிருஷ்ணன் (7) திரு. மீ. ப. சோமசுந்தரம் (8) திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் (9) திரு. பத்மநாப சர்மா (10) திரு. பி.பி இராமானுஜாச்சாரியார் (11) திரு. பு.மா. ஜெயசெந்தில் நாதன் (12) திரு. மா. வெங்கடேசன் (13) திரு. நா. ப. தணிகையரசு (14) திரு. க. சம்பந்த முதலியார் (15) திரு. கோ. பாலசுந்தர நாயகர் (16) திரு. இஷ்டசித்தி ஏகாம்பர குருக்கள் (17) லட்சுமி நரசிம்ம சாஸ்திரியார் (18) திரு. ரா. வீழிநாதன் (19) திரு. வேங்கிட கிருஷ்ண ஐயங்கார் ஆகியோர் (20) சென்னை

திரு. திரிவேதி அவர்கள், ஒரு நாள் யோகாசனப் பயிற்சிகளைப் பற்றிய விளக்கவுரையாற்றிச் செய்தும் காட்டினர்.

இவ்வகுப்பின்கண் பின்வரும் இலவச வெளியீடுகள் வழங்கப்பட்டன: (1) சிவபுராணம் (2) இராமநாத நாமாவளி (3) கந்தர் அநுபூதி (4) பழிக்கு அஞ்சுக (5) அபிராமி அந்தாதி (6) ஆத்திசூடி (7) கொன்றை வேந்தன் (8) திருவாசகத் திரட்டு (9) நாயன்மார்கள், ஆழ்வார்களின் அவதாரத் தலங்கள், நட்சத்திரங்கள் அட்டவணை (10) நால்வர் நிகழ்த்திய அற்புதங்களைக் குறிக்கும் பாடல்கள் (11) வாழ்க்கை நெறி முறைகள் (12) இறைவழிபாடும், ஆலயத் தூய்மையும், (13) நீதியும் கதையும் (14) பூசலார் நாயனர் (15) பஞ்ச சபைகள், பஞ்ச பூதத்தலங்கள் அட்டவணை. (16) மதசார சங்கிரகம் முதலியன.

ஸ்ரீஆசார்ய சுவாமிகள் அவர்களின் குருவருள் துணைக்கொண்டு, அவர்களின் அருளாணைப் படி, இவ்விழாவிற்கு "அமைப்பாளன்" என்ற முறையில் எல்லா ஏற்பாடுகளையும் தக்கவாறு செய்து நடத்தியவர், காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர் திரு. பு. மா. ஜெய செந்தில்நாதன் அவர்கள் ஆவார்.

24—5—1970 அன்று நடைபெற்ற நிறைவு விழாமில் நீதிபோதனை வகுப்பிற் கலந்து கொண்ட உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும், ஸ்ரீஆசார்ய சுவாமிகளின் அருட்பிரசா தத்துடன் நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஸ்ரீசுவாமிகளின் அருளுரையைக் கேட்டுத் திரளான மக்கள் மிக்க உளம்மகிழ்ந்தனர். அமைப்பாளரின் நன்றியுரைக்குப்பின், விழா இனிது முடிவுற்றது.

## மதிப்புரைகள்

1, **ஸ்ரீதேவி கருமாரியம்மன் சதகம்:** தொண்டை வள நாட்டில், திருவேற்காட்டில், கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் அருளாட்சி புரிந்து, சத்தியத்தையும் தருமத்தையும் நிலை நாட்டி, பக்தியையும் ஞானத்தையும் பிரகாசிக்கச் செய்து, ஸ்ரீதேவி கருமாரியம்மன் அருள்விளை யாடல் புரிந்து வருகின்ருள். தனது திருநீற்றின் மகிமையினல், பக்தர்களின் வினைகளையும், பிணிகளையும் போக்கி வருகின்ருள். இத்தகைய பெருமை வாய்ந்த திருவேற்காடு ஸ்ரீதேவி கருமாரியம்மனின் புராணம், 95 படலங்களில், 7001 செய்யுட்களைக் கொண்ட காவியமாக அமைந்துள்ளது. அப்பெருநூலின் பிழிவாகவும், சாரமாகவும் 'ஸ்ரீதேவி கருமாரியம்மன் சதகம்" என்னும் இந்நூல், 100 செய்யுட்களால் இயற்றப் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் ஆகிய அருட் கவி ஸ்ரீதேவி கருமாரிதாசர், இதன்கண் ஸ்ரீதேவி கருமாரியம்மையின் அருமை பெருமைகளையும், மனித வாழ்க்கைக்கு வேண்டிய நீதி அறிவுரைகளையும் அழகுறப் பாடியிருக்கின்ருர். பக்தர் களுக்கு மிகவும் பயன்படக்கூடிய சிறந்த நூல்! விலை ரூபா. 2—50.

2. **ஸ்ரீதேவி கருமாரியம்மன் குறம்:** தமிழிலுள்ள பிரபந்தவகைகளுள் 'குறம்' என்பதும் ஒன்று. இது 'குறவஞ்சி' எனவும் வழங்கும். குமரகுருபர சுவாமிகள் இயற்றிய மீனட்சி யம்மை குறமும், திரிகூட ராசப்பக் கவிராயர் பாடிய திருக்குற்ருலக் குறவஞ்சியும் மிகவும் புகழ் பெற்றவை. அவற்றினைப் பின்பற்றி. ஸ்ரீதேவி உபாசகர் **ஸ்ரீமத் சுவாமி இராமதாசர்** அவர்களின் அருளாசியைப் பெற்று, ஸ்ரீதேவி கருமாரிதாசர் இந்நூலை மிகவும் சிறந்த முறையில் இயற்றியுள் ளார். வலம்புரி விநாயகர், பாலசுப்பிரமணியர், வேதபுரிநாதர், வீரபத்திரர், பச்சையம்மன் முதலிய கடவுளரைப் பற்றிய சிறந்த துதிப் பாடல்களுடன், இந்நூல் தொடங்குகின்றது. எளிய இனிய நடையில், 'குறம்' என்னும் பிரபந்தத்திற்குரிய இலக்கணங்கள் பலவும் பொருந்தி இந்நூல் மிகவும் சிறப்புற அமைந்துள்ளது. சிறந்த இனிய நல்ல பதிப்பு. பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும். விலை ரூபா ஒன்று. கிடைக்குமிடம்: சூப்பர் பவர் பப்ளிகேஷன்ஸ், 21, சுங்குராமச் செட்டி தெரு, சென்னை-1.

—ஆசிரியர்.

# மகாபாரதம்

அருள்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

**தபதியின் சரிதை :**

அங்காரபர்ணன் கூறுகின்றான், ''விஜயனே அந்தப் புனிதமான வரலாற்றை உனக்குச் சொல்லுவேன் கேள். சூரிய பகவானுடைய புதல்வி தபதி. அவள் சாவித்திரிக்கு இளையவள். அவளுக்கு நிகரான ஒரு அழகுள்ள பெண் தேவர்களிலும் கந்தர்வர்களிலும், அப்சரசுகளிலும், அசுரர்களிலும் இல்லை. அழகின் கருவூலமாக அவள் விளங்கினாள். பதினாறு ஆண்டுகள் நிறைந்து யௌவனத்துடன் திகழும் தன் புதல்விக்கு ஏற்ற நாயகன், மூன்று உலகங்களிலும் இல்லையே என்று ஆதித்த பகவான் வருந்தினார். கல்வியிலும், ஒழுக்கத்திலும், நடையிலும், குணத்திலும் அவருக்கு நிகர் யார் என்று ஆராய்ந்தார்.

சந்திர குலத்திற் பிறந்தவனும், ரிட்சன் என்ற மன்னவன் மகனும், பூலோக சூரியன் போன்றவனுமாகிய சம்வரணன் என்ற மன்னன், தூயவனாக இருந்து உதய காலத்தில் ஆதித்த வழிபாடு செய்தான். அவனுடைய அரிய பெரிய குண நலன்களைக்கண்டு ஆதித்தன் இவன் நமக்கு மருமகனாக வரத்தக்கவன் என்று நிச்சயித்தார்.

சம்வரணன் ஒளியினால் உலகத்தை விளங்கச் செய்து கொண்டு, ஒருநாள் ஒருமலையருகே வேட்டையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய குதிரை பசி தாகத்தால் மாண்டு விட்டது. அவன் அங்குக் கால் நடையில் உலாவிய போது மலையின் உச்சியில் நின்ற ஒரு அழகிய கன்னிகையைக் கண்டான். ''அவள் திருமகளோ? சூரியனுடைய ஒளிப் பிழம்போ? களங்கமில்லாத சந்திர கலையோ?'' என்று ஐயுற்றான். அவளது ஒளிபட்டுக் காடெல்லாம் பொன் மயமாகக் காட்சியளித்தது. கண் படைத்ததன் பயன், இன்று பெற்றோம் என்று அம்மன்னன் கருதினான். அவன் உள்ளம் அழலிடைப்பட்ட மெழுகு போல் உருகுகிறது. அவள் அருகில் சென்றான்.

''பெண்ணரசே! பதினான்கு உலகிலும் உனக்கு நிகரான அழகுள்ள ஒருபெண் இருப்பதாக நான் நினைக்கவில்லை. நான் உன்னைக் காணப் பெருந்தவம் புரிந்திருக்கின்றேன். ஆ! உன் முகத்தில் எழில் களிநடம் புரிகின்றதே! நீ யார்? உன் பேர் யாது? நான் மதனுடைய மலர்க்கணையால் மயங்குகின்றேன்'' என்றான். அவள் ஒன்றும் விடை கூறாமல் மேகத்தில் மின்னல் மறைவது போல் மறைந்து விட்டாள். அவன் பித்தனைப் போல் அவ்வனமெல்லாம் அலைந்தான். மயங்கி நிலத்தில் விழுந்தான்.

அக்கன்னிகை அங்கே மறுபடியும் தோன்றினாள். ''அரசசிம்மரே; எழுந்திரு, வருந்தற்க''

என்றாள். அந்த சொல்லமுதம் பட்டு அவன் உய்ந்து எழுந்தான். ''ஆ! மாதர்குல மணி விளக்கே! என்னை உயிருடன் சித்திரவதை செய்யாதே. என்னைக் காத்தருள். உனது கண்ணம்பு என் இதயத்தைப் பிளக்கின்றதே. இத்தனை அழகை உனக்குத்தந்த இறைவன் இரக்கத்தை உன்னிடம் படைக்க மறந்து விட்டானோ? மோகமாகிய தீயினால் கொதிப்புற்ற என்னை, உன் கருணையென்ற நீரால் சாந்தப் படுத்து. காந்தர்வ மணத்தால் என்னை அடைவாயாக. இல்லையேல் நான் மாள்வேன்'' என்றான்.

அவள், ''அரசர் திலகமே! நான் தந்தைக்கு அடங்கிய கன்னிகை. எனக்கும் உன்மீது அன்புண்டு. உனது உயர்ந்த அழகு என்னையுங் கவர்ந்து விட்டது. குணமும் மேன்மையும் வனப்பும் பொருந்திய உத்தமனைக் கணவனுகப் பெற எந்தக் கன்னிகை தான் விரும்பமாட்டாள்? நான் கதிரவனுடைய மகள். என் பேர் தபதி. என் பிதாவைக் கேட்டு என்னைப் பெற்று இன்புறுக'' என்று கூறி மறைந்தாள்.

''தபதி! தபதி'' என்று அவன் புலம்பிக் கதறினன். வனமெல்லாம் திரிந்தான். கீழே பலமுறை விழுந்தான். அமைச்சன் அவனைத் தேற்றினன். சம்வரணன் பன்னிரண்டு நாள் உணவும் உறக்கமும் இன்றித் தன் குருவாகிய வசிஷ்ட முனிவரைத் தியானித்தான். வசிஷ்டர் பன்னிரண்டாவது நாளில் அவன்முன் தோன்றினர். அவர் யோகக் கண்ணால் அவனது நினைவையுணர்ந்து ''மன்னவனே! மனங் கலங்காதே; உன் நினைவு முற்றுப் பெறும்'' என்று கூறிவிட்டு, லட்சம் யோசனை தூரம் விண்ணிலே சென்றார். கரங்களைக் கூப்பிக்கொண்டு சூரியனுடைய திருமுன் நின்றார்.

''ஒளிமயமான உத்தமரே; விவஸ்வானே! மும்மூர்த்தி சொருபியே! வேதப் பொருளே! ஞானநிதியே! உலகங்களை ஒளியால் காத்தருள்பவரே! போற்றி'' என்று துதித்துத் தொழுதார்.

ஆதித்த பகவான் அகமகிழ்ந்து ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்றார். ''தங்கள் புதல்வியைத் தர்மார்த்த காமங்களை அறிந்த சிறந்த மன்னவன் சம்வரணனுக்குத் தர வேண்டும்'' என்றார். ஆதித்த பகவான் தபதியை அவரிடம்தந்து ''சம்வரணன் உத்தம மானவன். அவனுக்கு இவள் மனைவியாகத் தக்கவள். நீரே இருந்து திருமணஞ் செய்து வைப்பீர்'' என்றார்.

தபதியுடன் வசிஷ்டர் சம்வரணனிடம் வந்தார். அவனைக் கண்டு அவன் உயிர் தளிர்த்தது. வசிஷ்டர், முறைப்படி தபதியை அவனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுத்தார். சம்வரணன் அவளுடன் அம்மலையிலேயே யிருந்து கொண்டு இன்புற்றான், அவன் அடைந்த இன்பத்துக்கு அளவு இல்லை.

அவனுடைய நகரத்தை அமைச்சன் அரசு புரிந்தான. அங்கு மழையின்மையாகிய அநாவிருஷ்டி ஏற்பட்டது. மக்கள் உணவு இன்றி மாண்டார்கள், பன்னிரண்டு வருடங்கள் பஞ்சத்தால் அந்நாடு வருந்தியது. வசிஷ்டர் சம்வரணனைச் சந்தித்து நகரம் போகுமாறு பணித்தார். சம்வரணன் தபதியுடன் நகரம் சேர்ந்தான். மழை பொழிந்து நாடு செழித்தது; அரசன் தபதயுடன் இருந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஒரு வேள்வி செய்தான். தபதி ஒரு சிறந்த மகனைப் பெற்றாள். குருவின் அருளால் மகனைப் பெற்றதனால் அம்மகனுக்குக் ''குரு'' என்று பேர் சூட்டினன்.

அர்ச்சுனா! அந்தக் குருவின் குலம் ஆதலால் உன் குலம் ''குருகுலம்'' என்று புகழ் பெற்றது. தபதியின் மரபு உன் மரபு. ஆதலால் நீ தாபத்யன் என்று ஆயினாய்'' என்றான். பாண்டவர்கள் தங்களின் கூடஸ்தனான சம்வரணனுடைய வரலாற்றைக் கேட்டு உள்ளம் உவந்தார்கள்.

அர்ச்சுனன், 'கந்தருவ வேந்தனே! உன்னால் உத்தமமான வரலாற்றை நாங்கள் கேட்டோம். மகிழ்கின்றோம். எங்கள் பாட்டனாரான சம்வரண மன்னருக்குக் குருவாக இருந்து அருளிய வசிஷ்டருடைய பெருமையை மேலும் கேட்க விரும்புகின்றேன். வசிஷ்டர் என்ற சொல்லுக்கு என்ன பொருள்? அவருடைய இனிய

வரலாற்றைக் கூறு'' என்று அவன் மிகவும் அன்புடன் கேட்டான்.

## வசிஷ்டரது மகிமை :

சித்ரரதன் கூறுகின்றுன். ''அர்ச்சுன! காமம் குரோதம் என்ற இரண்டும் அவருக்கு வசப்பட்டன. அதனுல் வசிஷ்டர் எனப் பெற்ருர். அந்த இரு குணங்களும் அவருடைய தவத்தினுல் அடங்கி அவருக்குக் கால் பிடித்துக் கொண்டிருந்தன. வசிஷ்டர் பிரம்மதேவருடைய மானசபுத்திரர். அருந்ததியின் கணவர், அவருடைய பெருமை அளவிட முடியாதது. அவர் குணப் பெருங்கடல். தவத்தின் நிதி.

கான்யகுப்ஜ தேசத்தின் அதிபராகிய குசிகரது மகன் காதி. காதியின் மைந்தர் விசுவாமித்திரர். அந்த மன்னவர் சேனைகளுடன் வேட்டையாடிக் களைத்துப் போனுர். பசிதாகத்துடன் இளைத்து வந்த விச்வாமித்திரரை வரவேற்று வசிஷ்டர் இருக்கச் செய்தார். காமதேனுவைப் பார்த்து ''அம்மா! இவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடு?'' என்ருர்.

உடனே காமதேனு மலை போன்ற அன்னக் குவியலையும், பருப்பு நெய் பால் தேன் குழம்பு ரசம் ஆகியவற்றின் வாய்க்கால்களையும், துவையல் ஊறுகாய் பொரியல்கள் கூட்டு இவைகளின் குன்றுகளையும் ஒரு நொடியில் உண்டாகியது. பட்சணங்கள் சுவையான பானங்கள் நிரம்பின. நால்வகைச் சேனையுடன் விச்வாமித்திரர் உண்டு, உவந்தார். மீளவும் காமதேனு விலையுயர்ந்த ஆடைகளையும் அணிகலன்களையும் வழங்கியது. அவர்கள் அனைவரும் அதிசயம் அடைந்தார்கள். தலை கழுத்து தொடைகள் அலைதாடி வால்மடி என்னும் ஆறு அவயங்கள் நீண்டதும், நெற்றி காதுகள் இரண்டு கண்கள் இரண்டு ஆகிய ஐந்து இடங்கள் பருத்திருப்பதும், அழகிய கண்களையுடையதும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத வனப்புள்ளதுமாகிய ''நந்தினி'' என்னும் பேருள்ள அக் காமதேனுவைக் கண்டு விச்சுவாமித்திரர் அதன் மீது ஆவல் கொண்டார்.

## விச்வாமித்திரருடைய அவா :

வசிஷ்டரைப் பார்த்து "முனிவரே! பத்துக் கோடி பசுக்களைத் தருவேன். வேணுமாயின் எனது அரசையும் தருவேன். இந்த நந்தினியை எனக்குக் கொடும்'' என்று கேட்டார். "மன்னவரே! இது தேவப்பசு, அதிதிகளையும் பிதிர்களையும் தேவர்களையும் ஆராதிப்பதற்காக இது இருக்கின்றது. இதை நீர் விரும்புவது முறைமையன்று'' என்ருர் வசிஷ்டர். ''முனிவரே! இது உயர்ந்த பசுரத்னம். உயர்ந்த ரத்னம் அரசனுக்கே உரியது. நீர் தரவில்லையானுல் நான் வலிதில் எடுத்துக் கொள்வேன்'' என்ருர் விசுவாமித்திரர்.

வசிஷ்டர் புன்னகை புரிந்து ''நீர் ஆற்றல் படைத்தவர். சேனையுடன் இருப்பவர், எது அறமோ அதைச் செய்யும் என்ருர்.', சந்திர நிறம் படைத்த அப்பசுவை விசுவாமித்திரர் பிடித்து இழுத்தார். அவருடைய சேனைகள் அதனைக் கசையினுல் அடித்தார்கள். உதிரம் ஒழுக அப்பசு, ''அம்மா!'' என்று அலறிக் கொண்டு வசிஷ்டரிடம் வந்து சரணடைந்தது; 'தபோதனரே! என்னைக் கொடியவர்கள் தடியால் அடிக்கின்றுர்களே! நீர் பார்த்துக் கொண்டு சாந்தமாக இருக்கின்றீரே! ஏன்!'' என்று கேட்டது.

அப்போது வசிஷ்டர் சிறிதுகூடக் கலங்கவில்லை. ''என் அன்புள்ள குழந்தாய்! மன்னவனுக்கு ஆற்றல் சிறந்தது. அந்தணனுக்குப் பொறுமை சிறந்தது. நான் ஒரு போதும் பொறுமையிழக்கக் கூடாது. இந்த அரசன் வலிதில் உன்னை அடைய முயல்கின்றுன். நான் உன்னை விடவில்லை. உன் விருப்பப்படி செய்'' என்ருர்.

உடனே காமதேனுவின் கண் சிவந்தது. அதை மீண்டும் அந்த முரடர்கள் அடித்தபோது

அது வாலிலிருந்து நெருப்பு மழை பொழிந்தது. உச்சிக்காலத்துச் சூரியனைப்போல் அப்பசுவின் உடம்பு ஒளிசெய்தது. அதன் மடியிலிருந்தும், வாலிலிருந்தும் காது மூக்குகளிலிருந்தும் பல கோடி ஆயுதபாணிகளான வீரர்கள் தோன்றி னார்கள். அச்சேனைகள் விச்வாமித்திர சேனை களுடன் போர் புரிந்து மூன்று யோசனைதூரம் பின்வாங்குமாறு விரட்டியடித்தன. காமதேனு வின் சேனை அச் சேனைகளில் ஒருவனைக்கூட கொல்லவில்லை. அழிவைச் செய்ய விரும்ப வில்லை. விச்வாமித்திரரால் தமது சேனையைக் காப்பாற்ற முடியவில்லை.

600 008
15858

**தவ வலிமை :**

அதனால் கோபங்கொண்ட விச்வாமித்திரர் ஆவேசங்கொண்டு ஆயுதமில்லாத வசிஷ்டர் மீது அம்பு மழை பொழிந்தார். அவற்றை யெல்லாம் அவர் சிரித்துக் கொண்டே மூங்கில் தடியினால் விலக்கிவிட்டார். விச்வாமித்திரர் மேலும் சினங்கொண்டு, அக்கினியாஸ்திரம், வஜ்ராஸ்திரம், ஐந்திராஸ்திரம், யமாஸ்திரம், வாய்வாஸ்திரம் முதலிய தேவதாஸ்திரங்களைச் சொரிந்தார். அப்போதும் வசிஷ்டர் கோபிக் காமல் பொறுமையுடன் சிரித்துக் கொண்டே மூங்கில் தடியால் அவற்றைத் தடுத்தார். அந்த தெய்வப் படைகள் நீறாகி நிலத்தில் விழுந்தன.

வசிஷ்டர் மெல்லச் சிரித்து, ' காதியின் மைந்தனே! அறநெறி வழுவிய அதமனே; ஆயுதம் அனைத்தும் தீர்ந்தன? இன்னும் இருந் தால் விடு' என்றார்.

சேனையுந்தானும் தோல்வியடைந்த விச்வா மித்திரர் வெட்கப்பட்டார். ஆயுதவலிமை ஒருவலிமையா? தவவலிமையே சிறந்தது. சீ! அரசவலிமை ஒரு தூசுக்கு நிகரானது. தபோ பலம் மலை போன்றது. என்று எண்ணித் தன்னைத் தானே நிந்தித்துக் கொண்டார்.

அரச வாழ்வை வெறுத்து, மிகப் பெரிய கடுந்தவம் பலகாலம் புரிந்தார், தவத்தினால் எல்லா வுலகங்களையும் வென்றார். உலகங்களை நடுங்க வைத்தார். பெரிய தவவொளி பெற்று இந்திரனுடன் சோமரசபானம் புரிந்தார். வசிஷ்டர் வாக்கினால் பிரம்மரிஷி என்று அழைக்கும் பேற்றையும் பெற்றார். இப்படி அந்த ராஜரிஷி பிரம்மரிஷியாக மாறினார்.

**கல்மாஷ பாதன் :**

சூரிய குலத்தரசன் கல்மாஷபாதன், அவன் ஒருநாள் வனத்தில் வேட்டையாடிக் களைத்து ஒற்றையடிப் பாதையில் வந்தான். வசிஷ்டருடைய மூத்த குமாரர் சக்திமுனிவர் எதிரில் அவ்வழியில் வந்தார். யார் விலகுவது என்பதில் இருவருக்கும் வாதம் நிகழ்ந்தது. விலகும் என்றான் அரசன். சக்திமுனிவர் நயமான வசனத்தால் ''மன்னவனே! உன் குருவின் புதல்வன் நான். எனக்கு நீதான் வழி விடவேண்டும். இதுதான் அறம்' என்றார். இருவரும் விலகாமல் நெடுநேரம் தம்க்குள் வாதிட்டார்கள்.

கல்மாஷ பாதனும் சக்திமுனிவரும் விலகா மல் ஒற்றையடிப் பாதையில் நின்றபோது, விச்வாமித்திரர் தமது பகையை முடிக்கக் கருதி மறைந்து அந்த வழியைத் தாண்டிச் சென்றார். ஒரு அசுரனுடைய ஆவியை மன்னன் மீது ஏவினார். அசுர ஆவியால் மதிமயங்கப்பட்ட மன்னன் சத்திமுனிவரைக் கசையால் அடித் தான். ''முனிவனாகிய என்னை அசுரனைப்போல் அடித்ததால் அசுரனாகிய மனித இறைச்சியைத் தின்று திரியக்கடவது'' என்று சத்தி முனிவர் சாபங் கொடுத்தார்.

கல்மாஷ பாதன் சிறிது அடங்கி வழிவிட்டுச் சென்றான். ஊருக்குள் சென்றான். வேட்டைக்குப் புறப்படும் போது ஒரு பிராமணன் உணவு கேட்டான். !''இரு; பிறகு வந்து தருவேன்'' என்றான். அதை மறந்து விட்டான் மன்னன். நடுஇரவில் எழுந்து மன்னன் பிராமணன் உணவு கேட்டிருந்ததை நினைத்து, சமையல்காரனை எழுப்பி ஒரு பிரா

மன்னன் ஊருக்கு வெளியே நின்று என்னை உணவு கேட்டான். அவனுக்கு உணவு படை'' என்றான்.

''இப்போது என்னவுணவு தரமுடியும்'' என்றான் சமையல்காரன். சத்திமுனிவர் சாபத்தாலும், விசுவாமித்திரர் ஏவிய அசுர ஆவியாலும் மதிமயங்கிய மன்னன் 'நரமாமிசத்தையாவது அவனுக்குப்படை'' என்றான். சமையல்காரன் கொலைக்கூடத்தில் கொல்லுந் தண்டனைக்கு ஆளான ஒருவனைக் கொன்று சமைத்து அந்த அந்தணனுக்குப் படைத்தான், அந்தணன் சீறி, ''நரபதி நரமாம்சம் உண்பவனாகத் திரியக்கடவது'' எனச் சாபமிட்டான். மேலும் சத்திமுனிவரின் சாபம் உறுதிப்பட்டது.

சாபத்தால் அசுரகுணம் அடைந்த கல்மாஷபாதன் ஒருநாள் சத்தி முனிவரைப் பார்த்து ''உம்மையே முதலில் கொன்று தின்பேன்'' என்று கூறி அவரைப் பிடித்துக் கொன்று கடித்துத் தின்றுவிட்டான். சத்தி முனிவரின் தம்பியர்கள் 99 பேர்கள் வர அவர்களையுங் கொன்று தின்றுவிட்டான்.

நூறு புதல்வர்களும் மாண்டதை அறிந்த வசிஷ்டர் பெரிய மலை பூமியைத் தாங்குவது போல் அத்துயரத்தைத் தாங்கினார். அசுர ஆவியை ஏவித் தன் மக்களைக் கொல்லத் தூண்டிய விச்வாமித்திரரை அழிப்பதற்கு ஆற்றல் இருந்தும் அழிக்க நினைக்கவில்லை.

## புத்திரசோகம் :

வசிஷ்டர் மேருவின் சிகரத்தில் இருந்து உருண்டு வீழ்ந்தார். வீழ்ந்த பாறை பஞ்சு மெத்தை போல் ஆயிற்று. புத்திர சோகத்தால் காட்டுத் தீயில் விழுந்தார். அக்கினி சந்தனம் போலாயிற்று. பெருங்கல்லைக் கட்டிக் கொண்டு கடலில் விழுந்தார். கல் தெப்பமாகிக் கரையில் சேர்த்தது. மரணம் வராமல் மேலும் வருந்திய வசிஷ்டர் பெரிய நதி வெள்ளத்தில் கை கால்களைக் கட்டிக்கொண்டு வீழ்ந்தார். அந்நதி கட்டை அவிழ்த்துக் கரையில் அவரை ஒதுக்கியது. பாசம்—கட்டு இல்லாமல் செய்ததால் அந்நதி ''விபாசை'' என்று பேர் பெற்றது.

இமயமலையில் கொடிய முதலைகள் உள்ள ஒரு நதியில் விழுந்தார். அந்நதி நூறு பிரிவுகளாகச் சிதறியோடியது. அதனால் சதத்ரு என்று பேர் பெற்றது. எந்த வகையாலும் மரணம் நேராமையால் திரும்பத் தன் ஆச்ரமத்திற்கே சென்றார். மக்களை எழுப்பும் ஆற்றல் இருந்தும், தெய்வ நியதிக்கு உட்பட்டு அவர் தவவலிமையை வெளிப்படுத்தாமல் இருந்தார்.

அங்கே தங்க மனம் இன்றி மீளவும் வெளியே புறப்பட்டார். சத்தி முனிவரது மனைவி வசிஷ்டரது மருமகள், 'அதிருச்யந்தி' மாமனாரைப் பின் தொடர்ந்து சென்றாள். சிட்சை வியாகரணம், ஜோதிஷம், சந்தஸ், கல்பம், நிருத்தம் என்ற ஆறு அங்கங்களுடன் வேதம் ஓதுகின்ற ஒருகுரல் வசிஷ்டர் செவியில் விழுந்தது. திரும்பிப் பார்த்தார், ஒருவருமில்லை. மருமகள்தான், மறுபடியும், மறுபடியும் வேதம் ஓதும் குரலைக் கேட்டு, ''அம்மா! என் பின்னே யார் வருகின்றது?'' என்று கேட்டார். ''மாமா நான் மட்டுந்தான் வருகின்றேன்'' என்றாள் அம்மாதரசி. 'மகளே! உன் கணவன் இளமையில் வேதம் ஓதியது போன்ற ஒரு இனிய குரல் செவியில் விழுகின்றதே? என்று கேட்டார் முனிவர்.

''மாமா! தங்கள் புதல்வரின் கரு என் உதரத்தில் இருக்கின்றது. என் வயிற்றில் உள்ள இச் சிசு பன்னிரு ஆண்டுகளாக வேதம் ஓதுகின்றது'' என்றாள் அம்மாது.

'எனக்குக் குல வளர்ச்சி இருக்கின்றது' என்று முனிவர் மரணத்தைத் தவிர்த்தார், மகிழ்ந்தார்.

கல்மாஷபாதன் அக்காட்டில் வந்த ஒரு பிராமணனை அவள் பார்த்திருக்கக் கொன்று தின்றான். அப்பார்ப்பனி "பாதகனே! உன் மனைவியைத் தீண்டினால் தலை வெடித்து மாள்வாய்" என்று சாபந்தந்து உயிரை விடுத்தாள்.

அவன் மருமகளுடன் வந்த வசிஷ்டரைக் கொல்ல வந்தான். மருமகள், 'மாமா! அசுரன் என்னைக் கொல்ல முயல்கின்றான்' என்று கூறி நடுங்கினாள். வசிஷ்டர் "மருமகளே! அஞ்சாதே இவன் அரக்கனல்லன், சூரிய குலத்து மன்னன். கல்மாஷ பாதன்" என்று கூறினார்.


கல்மாஷ பாதன் அவரைக் கொல்ல ஓடி வந்தான். அவர் உம் என்ற ஹூங்காரத்தில் அவனை நிறுத்தினார். மந்திர நீரைத் தெளித்துத் தவவலிமையால் சாபத்தை மாற்றினார். மன்னன் சாபம் நீங்கப்பெற்று சாந்தனாகி அவரை வணங்கி மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

"கல்மாஷ பாதனே! இனி ஒருபோதும் அந்தணர்களை அவமதிக்காதே. சென்று அரசு செய்" என்றார். ஊரவர்களை எதிர்கொண்டு அழைக்க நகரஞ் சென்றான். பிராம்மணனது சாபத்தால் மனைவியைத் தொடக்கூடாது என்பதையறிந்து குலம்வளர அருள் செய்யுமாறு வசிஷ்டரை வேண்டினார். அம் மாமுனிவர் திருவருள் புரிந்தார். அவள் கருவுற்றுப் பன்னிரு வருடமாகியும் மகப்பேறு உண்டாகாமையால் கல்லால் வயிற்றை இடித்தாள். அம்மகன் அப்போது பிறந்தான். அவன் பிறகு பௌதன்யம் என்ற நகரை உண்டாக்கினான்.


(தொடரும்)

## அறிவிப்பு

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோயிலின் மகா கும்பாபிஷேக விழா, 15-7-70 புதன்கிழமையன்று காலை 9-மணியில் இருந்து 10-மணிக்குள் மிகவும் சிறப்புற நடைபெற இருக்கின்றது. பக்தகோடிகள் அனைவரும் தரிசித்து, ஸ்ரீ மருதவாணப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்வார்களாக!



திருத்தணிகைக் கோயிலில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **திரு கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் புதிய வசந்த மண்டபம் திறந்து வைத்தல். (5 - 5 - 70)



பாண்டிச்சேரி மாநில ஆளுநர் மேதகு. திரு. ஜட்டி அவர்கள், திருவகீந்திரபுரம் கோயிலு
வருகை தந்தபொழுது, அறங்காவலர் பெருமக்களால் வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras - 34.
Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras - 3.